
கண்மணி

சோ.கலைவாணி சொக்கலிங்கம்



# இமையாக நானிருப்பேன்...

# இமையாக நானிருப்பேன்...

**வெண் பஞ்சு மேகங்கள்-உன்**
**பிஞ்சு பாதங்கள் மண் தொட்டதால்**
**இன்று செவ்வானம் போலாச்சு!**

**என்**.எஸ்.கார்மெண்ட்ஸ் என்ற பெரிய பெயர்ப் பலகையைத் தன் தலையில் தாங்கியிருந்த அந்த ஆறுமாடிக்கட்டிடம் வெயில்பட்டு கம்பீரமாய் மின்னியது. அனைத்து தளங்களிலும் ஆண்களும் பெண்களுமாய் தங்கள் கடமையில் சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருந்தனர். துணிகள் வந்து இறங்குவதும் தைத்த துணிகள் அடங்கிய பெரிய பெரிய பார்சல்களை ஏற்றுவதுமாய் தரைத்தளம் பிஸியாக இருக்க அருண் தனது பென்ஸ்காரை பார்க்கிங்கில் செருகிவிட்டு இறங்கி காரை பூட்டிக் கொண்டு கையில் சாவியை சுழற்றிக் கொண்டே வந்தவாறு பார்சல்களை ஏற்றிக் கொண்டிருந்தவனிடம், ''சந்துரு இருக்கானா வெங்கட்?''-என்றான்.

''இருக்கார் சார். உள்ளாற போங்க''-என்று விட்டு அவன் தனது வேலையைத் தொடர, ''ம்! கீப் இட் அப்''-என்றவாறு புன்னகையோடு அந்தப் பெரிய ஹாலைக் கடந்து உள்ளே சென்றான்.

தரைத்தளம் முழுவதும் துணிகள் மலைபோல் குவிந்திருக்க லிப்ட்டை தவிர்த்து அருண் மாடிப்படிகளில் டக்டக்கென தாவி ஏறினான் அவன் சந்துருவின் நண்பன். ஒருவருட இரண்டு வருட நட்பு அல்ல. பால்யம் தொட்டே தொடர்ந்து வரும் நட்பு. பள்ளிகாலம் முடிந்து கல்லூரி பருவம் கடந்து இன்று ஆளுக்கொரு தொழில்துறையில் கொடி கட்டிப் பறந்தாலும் விலகாத ஒட்டி உறவாடும் நட்பு. இருவருமே இருபத்தியெட்டு வயதைக் கடந்து இருபத்தி ஒன்பதாம் வயதில் நுழைந்த பின்பும் திருமணபந்தம் மேல் அத்தனை நாட்டம் இல்லாமல் இன்னும் சுதந்திர பறவைகளாகவே சுற்றும் ஆர்வம் உள்ளவர்கள்.

முதல் கட்டமாய் சந்துருவின் சுதந்திரம் பறிபோக இன்று சந்துருவிற்கு பெண் பார்க்க என்று மாப்பிள்ளை தோழனாக மிடுக்காகவும் கம்பீரமாகவும் உடுத்தி வந்திருந்த அருணை இரண்டாம் தளத்தில் தையல் எந்திரத்தோடு போராடிக் கொண்டிருந்த பெண்களில் சிலர் பார்த்து தங்களுக்குள் ஏதோ பேசிச் சிரித்துக் கொண்டனர். அவர்கள் தன்னை பற்றித்தான் கிசுகிசுக்கிறார்கள் என்று புரிந்ததும் நின்றான். அவர்களின் அருகில் சென்று, ''என்ன விஷயம் என்று சொன்னால் நானும் சிரிப்பேனே''-என்றதும் அவர்கள் வெலவெலத்துப் போனார்கள். ''ஐயோ! ஒன்னுமில்ல ஸார். உங்களைப் பற்றி எதுவும் சொல்லவில்லை ஸார்''-என்றாள் ஒருத்தி பதறியவாறே.

**சொ.கலைவாணி சொக்கலிங்கம்**

''பரவாயில்லை. நான் ஒன்றும் சந்துருவிடம் சொல்லமாட்டேன். சும்மா சொல்லுங்கள்''-என்றான் மீண்டும். பெண்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள, ''அது ஒன்னும் இல்ல ஸார். இந்த க்ரேகலர் சர்ட்டும் பிளாக் கலர் பேண்ட்டும் உங்களுக்கு ரொம்ப சூப்பரா இருக்குதாம். நீங்க தான் மாப்பிள்ளை மாதிரி இருக்கிறீர்களாம்.''-என்றாள் ஒரு இளம் பெண்.

வாய்விட்டு சிரித்தான் அருண். ''தப்பித்தவறிக் கூட இந்தப் பேச்சு சந்துருவின் காதில் விழுந்துவிடக்கூடாது. இது தான் சமயம் என்று என்னை மாப்பிள்ளையாக்கிவிட்டு அவன் தப்பித்துவிடுவான். பிறகு நான் தான் மாட்டிக் கொண்டு முழிக்க வேண்டும்.''-என்றவன் விடாமல் சிரித்தான். செல்போன் அழைக்க சிரிப்பை நிறுத்தி செல்லை எடுத்தான், ''அடா!சந்துரு''-என்றவாறு போனை காதிற்கு கொடுக்க, ''என்னடா உனக்கு என்ன மாயக்கண்ணன்ற நினைப்பா? வந்ததும் வராததுமா அங்க என்ன பொண்ணுங்களோட பேச்சு வேண்டிக்கிடக்கு, அடிக்கடி கார்மெண்ட்ஸ்வர்றது இதுக்குத்தானா?ம்?''-என்றான் சந்துரு என்கிற சந்திர பிரகாஷ்.

''அடப்பாவி! நான் உன்னைப் பார்க்கத்தான்டா வந்திருக்கேன். இப்படி அபாண்டமா பழிபோடுறியே. இவங்கெல்லாம் என் உடன் பிறவா சகோதரிங்கடா. அபாண்டமா பேசாதே.''-என்று பதிலளித்துவிட்டு, ''ஸாரி! சிஸ்டர்ஸ் நீங்க உங்க வேலையைப் பாருங்க. நான் என் நண்பனைப் பார்க்கிறேன்,''-என்றவாறு அவர்களை விட்டு விலகி நடந்தவாறே, ''நீ இப்ப எங்கேடா நிற்கிற''- என்றான் அருண்.

''வாடா! மேலேவா. பிப்த் ப்ளோர்ல இருக்கேன். வழியில நின்னுடாதே ஏற்கனவே லேட். அம்மா நாலுவாட்டி போன் பண்ணியாச்சு. நீ வந்த உடனே கிளம்புறேன்னு சொல்லியிருக்கேன். கமான் க்யிக்''-என்றவாறே போனை வைத்து விட்டான் சந்துரு. தனது போனை அணைத்து பாக்கெட்டில் போட்டவாறே மாடிப்படிகளில் ஏறினான். எதிரே வந்த அன்னம்மா நின்றாள்.

''அடடே வா ராசா. எப்படிக்கிற. என்ன இன்னிக்கு ஷோக்கா கிறியே''-என்றாள் முகவாயில் கைவைத்தவாறே. அருண் அலுத்துக் கொண்டான்.

''அட என்ன ஆயா நீ. இத்தினி வாட்டி கீரை விக்கிறியே. முதல்ல உனக்கு தான் தமிழ் ட்யூஷன் எடுக்கணும். சந்துருவோட கல்யாண வேலையையெல்லாம் முடியட்டும். தினமும் ஒரு மணி நேரம் உனக்கு நான் டியூசன் எடுக்கிறேன். சரியா. இப்ப நான் மேலே போகலன்னா அவன் என்னை பார்வையாலயே சாம்பலாக்கிடுவான். வரட்டுமா''-என்றவாறு அன்னம்மாவின் கன்னத்தில் லேசாகத் தட்டிவிட்டு மேலேறினான். வெட்கமாய் சிரித்து விட்டு, ''ஏன் ராசா, உங்களுக்கு எப்போ கல்யாணம்''-என்றாள்.

''அடப்போ ஆயா. எனக்கு யார் பொண்ணு கொடுப்பா''-என்றான் பாவமாய். ''ஏன் ராசா, ராசாவூட்டு புள்ளையாட்டம் இத்தினி அழகா இருக்கே. உங்க படிப்பு என்ன வசதி என்ன. உங்களுக்கு ஏன்ராசா பொண்ணு தரமாட்டாங்க.''-என்றாள் அன்னம்மா வியப்பாய். ''அதை விடு ஆயா. யார் பொண்ணுகுடுக்காட்டி போனாலும் பரவால்ல. அதான் நீ இருக்கியே. உன்னையே கட்டிக்கிறேன்''-என்றவாறு சென்று விட்டான், ''குறும்புக்காரப்புள்ள''-என்று தனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டு கீழிறங்கிப் போனாள் அன்னம்மா.

ஐந்தாம் மாடியை அடைந்த போது தனது மானேஜரிடம் முக்கியமாய்

பேசிக் கொண்டிருந்தான் சந்துரு. ''பாருங்க சங்கர். இந்தட் வெண்டி பைல் லாக்ன் பேங்க்ல போட்டுடுங்க. அப்புறம் இன்னிக்கு ஈவ்னிங் ஆர்.கே.வுக்கு மெட்டிரியலை அனுப்பிடுங்க. பில்லை கலெக்ட் பண்ணிவையுங்க. நான் நாளைக்கு மார்னிங் செக் பண்ணிடுறேன். ம். அப்புறம்.. இன்னிக்கு லால் வருவார். வந்தா என்னென்ன பர்ச்சேஸிங் வேணும்னு கேட்டு நோட் பண்ணி வையுங்க. முடிஞ்சா அனுப்பிடுங்க''-என்றான். ''ஓ.கே.ஸார். 'ஐ வில் கேட் கேர்'.-என்றான் சங்கர் பவ்யமாய்.

''ஓ.கே.நான் இப்போ கிளம்புறேன். எதுவும் டவுட்னா தயங்காம போன் பண்ணுங்க.''-என்றவாறு கைகளிலிருந்த பேப்பர்களை அவனிடம் கொடுத்துவிட்டுத் திரும்பியவன் வாசல்புறமாய் கைகளைக் கட்டிக் கொண்டு அமைதியாய் நின்றிருந்த அருணைப் பார்த்ததும் அருகே வந்து கட்டிக் கொண்டான்.

''ஏன்டா இங்கேயே நிக்கிற. உள்ளே வந்து உட்கார வேண்டியது தானே. வாவா.''-நண்பனை அழைத்துக் கொண்டு தன் அறைக்குள் நுழைந்தான் சந்துரு.

''ரொம்ப பிஸியா இருக்கியே. தொந்தரவு பண்ண வேண்டாம்னு தான். சரி என்னடா புது மாப்பிள்ளை நீ. இப்படி டல்லடிக்கிற. இவ்ளோ சிம்ப்ளா இருக்க. மாப்பிள்ளை தோழன். நானே இப்படி வந்திருக்கேன்.''-என்றான் அருண்.

''போடா. நீயும் அம்மா மாதிரியே பேசாதே. எனக்கு இந்த மாதிரி பெண் பார்க்கிறதில விருப்பமே இல்ல. போட்டோ பார்த்தது கொண்டு காட்சிப் பொருளாய் வந்து நிற்க வேண்டுமா அந்தப் பெண்? அந்தப் பெண்ணின் மனம் கஷ்டப்படாது. இது தப்பு அருண். இந்த மாதிரி பண்றது எனக்கு பிடிக்கவே இல்லை''-என்றான் சந்துரு அலுப்போடு. சிரித்தான்! ''வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏற ஆரம்பிச்சிடுத்து. ஏன்டா இது பாரின் இல்லடா. நம்ம ஊர் சிங்காரச் சென்னை. இங்கே நமக்குன்னு இருக்கிற சம்பிரதாய மெல்லாம் அவ்வளவு சீக்கிரம் மாறாது. மாற்றவும் முடியாது. அது போக்குல நாமளும் போக வேண்டியது தான். ஒரு வாரமா இதைத்தானடா சொல்லிட்டே இருக்கேன். பிறகும் ஏன் இப்படி அன் ஈஸியா பீல் பண்றே. டேய் சந்துரு. நீ நினைக்கிற மாதிரி இது ஒண்ணும் தப்பே இல்லடா. போட்டோவை மட்டும் பார்த்து எதையும் முடிவு பண்ணிடக்கூடாதுடா. போட்டோவில் நல்லா இருப்பது நேர்ல பார்த்தா சகிக்காது. நேர்ல கண்ணுக்கு அழகா இருக்கிறது போட்டோவில் ரொம்ப சுமாரா தெரியும். எதுக்கு வம்பு? நேரில் பார்த்திட்டா

''தேன் கொட்டின துக்கு நேற்று கொடுத்த மருந்தை தடவினியா?''
''மருந்தும் கொட்டி டுச்சுங்க''
-அ.ருக்மணி, தேனி





திருப்தியா இருக்கும்ல. அதோட பொண்ணுக்கும் மாப்பிள்ளையை நேர்ல பார்த்த மாதிரி இருக்கும். ஸோ. இது பரஸ்பர அறிமுகப்படலம் மாதிரி தான். இதுக்காக நீ இப்படித் தயங்க வேண்டாம். சரி. நாம எப்போ கிளம்புறோம்.''-என்றான் அருண்.

''ஈவ்னிங் நாலு மணிக்குத் தான் நல்ல நேரமாம். மூனு மணிக்கு வர்றேன்னு சொன்னா அம்மா கேட்கவே மாட்டேங்கிறாங்க. ஒரு மணிக்கு வீட்ல இருந்தாகணுமாம். சாப்பிட்டு கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துட்டு அப்புறம் குளிச்சிட்டு ப்ரெஷ்ஷா கிளம்பணுமாம். பார். மணி பனிரெண்டரை தான் ஆச்சு. இன்னும் எவ்ளோ டயம் இருக்கு. இங்கே எனக்கு தலைக்கு மேல வேலை இருக்கு. இப்பவே வீட்டுக்குவான்னு நாலு வாட்டி போன் பண்ணிட்டாங்க,''-என்றான் சலிப்பான குரலில்.

''டேய் போதும்டா. சும்மா சலிச்சுக்கிறியே. அம்மா எல்லாம் காரணமாத் தான் சொல்லுவாங்க. வேலை தான் நமக்கு எப்பவுமே இருக்குதே. பாரு நான் கூட பாலாஜிகிட்ட பொறுப்பை ஒப்படைச்சிட்டு வந்திட்டேன். அதை அப்படியே மறந்திடணும். இந்த நிமிஷத்தை சந்தோஷமா என்ஜாய் பண்ணணும்.''-என்ற அருணை முறைத்தான் சந்துரு. ''ம். பார்த்தேனே. நீ என்ஜாய் பண்ணின அழகை. ஏன்டா அன்னம்மாவைக் கூட டாவு அடிக்கிறே நீ?''-என்றதும் மிரண்டான்.

''டேய்! நீ என்ன மூலை முடுக்கெல்லாம் கேமிரா செட் பண்ணிவெச்சிருக்கியா. சொல்லுடா''?, ''ஆமா உனக்கு கேமரா வேற செட் பண்ணணுமாக்கும். நீ என்னென்ன பண்ணுவன்னு எனக்கு தெரியாதா என்ன?'' என்றவாறு பைல்களை எடுத்து ட்ராவுக்குள் வைத்துப் பூட்டினான் சந்துரு. சிரித்தான் அருண்.

''எப்பவும் வேலை வேலைன்னு அதுக்குள்ளயே ஆழ்ந்து போயிடுறோம். இப்படி வெளியே வரும்போதாவது ரிலாக்ஸா இருக்கலாமேன்னு சிரிச்சுப் பேசுறேன் அதுவும் உனக்காகத்தான். என்ன பார்க்கிற? நான் இப்படி கலகலன்னு பேசுறதால் உன்னோட ஸ்டாப்புகளும் இன்னும் சுறுசுறுப்பா வேலை பார்ப்பாங்கள்ல. சும்மா உர்ருன்னு உட்கார்ந்து வேலை செய்யுறதை விட கலகலப்பா சிரிச்சு வேலை பார்த்தா அவர்களுக்கும் அலுப்பு தெரியாதில்ல''-என விளக்கினான் அருண்.

''போதும்ப்பா. உன் சேவையை மெச்சுகிறோம். இப்போ கிளம்பலாமா''-என்றவாறே எழுந்தான் சந்துரு. உடன் சேர்ந்து சிரித்தவாறே புறப்பட்டு வீட்டில் பயணித்து தரைத்தளத்தை அடைந்து எதிர்ப்பட்டவர்களிடம் குட் ஆப்டர் நூன்களை ஏற்றுக் கொண்டு காருக்கருகில் வந்ததும் நின்றான் சந்துரு. ''டேய்! நீயும் கார்லதான் வந்தியா, சரி உன் கார் நிக்கட்டும். வா என்னோட கார்லயே பேசிட்டு போகலாம். என்னவோ எனக்கு கொஞ்சம் நெர்வஸ்ஸாகவே இருக்கு. நீ பேசிட்டு வந்தா கொஞ்சம் ப்ரீயா இருக்கும்''-என்றான்.

''ஏன்டா இப்படி பயந்து சாகுற. நாம பொண்ணு பார்க்கமட்டும் தான் போறோம். என்னவோ உடனே கல்யாணம் பண்ணி கூடவே கூட்டிட்டு வர்றமாதிரி ஏன் இப்படி பயப்படுகிற. ஓ.கே.வா, நானே காரை ஓட்டுறேன். நீ உட்கார்''-என்றவாறே சந்துருவிடம் சாவியை வாங்கி அவனுடைய இன்னோவாவை உயிர்ப்பித்தான். முன் இருக்கையில் ஏறி உட்கார்ந்து ஏசியை அட்ஜெஸ்ட் பண்ணிவிட்டு மியூசிக் சிஸ்டத்தை ஆன் செய்து மெல்லிய இசையை

நவழவிட்டான்.

மதிய வெயில் தார்ச்சாலையை இளகி ஓடவிட்டதுபோல் கொளுத்தியது. சாலையில் கானல்நீர் அலைஅலையாய் தோன்றியது. சாலையோரமாய் இளநீர் தர்பூசணிகளை கூவி விற்றவர்களை இரக்கமாய் பார்த்தான். சந்துரு. சாலையின் மறுபுறத்தில் தார்டின்களை மறித்து வைத்துக் கொண்டு சாலைகளை புதுப்பித்துக் கொண்டிருந்த தொழிலாளர்களைக் கண்டதும் மனம் நொந்தது. தலையில் ஒரு துணியைக் கட்டிக் கொண்டு, காலுக்கு கோணித்துணியைச் சுற்றிக் கட்டிக் கொண்டு அந்த கடும் வெயிலில் அவர்கள் ஜல்லிக்கற்களைப் பரப்பிக் கொண்டிருக்க சந்துருவின் கண்கள் கலங்கியது. ''என்ன கொடுமைடா இது. தாங்க முடியவில்லையே''-என்ற நண்பனைத் திரும்பிப்பார்த்தான் அருண்.

''எதைச் சொல்கிறாய்? இந்த எப்.எம். ரேடியோவையா. உண்மை தான். ஒன்று பேசியே கொல்கிறார்கள். அல்லது விளம்பரம் போட்டே சாகடிக்கிறார்கள். இந்தக் கொடுமை தாளாமல் என்காரில் இதை எடுத்தே விட்டேன். சி.டி.வாங்கி செட் பண்ணிட்டேன். காதிற்கும் மனதிற்கும் இனிமையான பாடல்களை கேட்டுக்கொண்டே பயணிக்கலாம்!''-என்றவனின் முதுகில் அறைந்தான்.

''இடியட்! நான் என்ன சொல்கிறேன். நீ எதைப் பற்றி பேசுகிறாய். வெளியே பாருடா. வெயில் எப்படி சுட்டெரிக்குது. ஆனா பாரேன் கொஞ்சமும் சளைக்காமஎப்படி வேலை செய்யுறாங்க பாரு. ஒரு அஞ்சு நிமிஷம் ஓய்வெடுக்க ஒரு மரநிழல் கூட இல்லையே. இந்தப் பெண்களும் தான் எப்படி உழைக்கிறார்கள். பாவம்டா. பெண்கள் மெல்லியவர்கள் இல்லையா. அவர்களால் எப்படி இந்தக் கடுமையான உழைப்பைத் தாங்கிக் கொள்ள முடிகிறது. இது கொடுமை இல்லையா? இந்த வெயிலில் உழைத்துக்களைத்து வீடு திரும்பி அங்கும் உழைத்து கணவனை குழந்தைகளை பராமரித்து.. இவர்கள் எப்போதடா ஓய்வெடுப்பார்கள்? எப்போது தூங்குவார்கள்?''

சந்துருவின் வார்த்தைகள் தன்னையும் சுட வேதனையாய் வெளியே பார்வையை வீசினான். சாலையோரமாய் துணிவிரிக்கப்பட்டு அதில் அமர்ந்திருந்த குழந்தை விறிட்டுக் கொண்டிருக்க தலையில் சுமையோடு நடந்தவாறே அதன் அன்னை ஏதோ சமாதானம் சொல்லிக் கொண்டே இருந்தாள். அதற்கு மேல் காண முடியாமல் பார்வையைத் திருப்பி பாதையில் செலுத்தினான். ஒரு பெருமூச்சோடு, ''இது சாபக்கேடு சந்துரு. அதை மாற்ற நம்மால் முடியுமா? கூலி வேலை பார்த்தாலும் தன் மனைவியை வீட்டில் வைத்து பாதுகாப்பவனும் இருக்கிறான். எத்தனை பணம் சம்பாதித்தும் குடித்து அழிப்பவனும் வேலையில்லா சோம்பேறிகளும் இருக்கும்வரை நம் பெண்களின் நிலை மாறப்போவதில்லை. வருத்தப்படுவதை தவிர நாம் என்ன செய்ய முடியும்?.''-என்றான் வருத்தமாய்.

''செய்ய வேண்டும் அருண். ஏதாவது செய்ய வேண்டும். இந்தப் பெண்களுக்கு... இந்தக் குழந்தைகளுக்கு ஏதாவது செய்ய வேண்டும். தினமும் செய்ய முடியாவிட்டாலும் இன்று நான் மட்டுமாவது ஏதாவது செய்ய வேண்டும். அருண் காரை ஓரமாய் நிறுத்து.''-என்றான் சந்துரு.

''என்னாச்சுடா உனக்கு. என்ன செய்யப்போகிறாய்? அவங்க வேலையைக் கெடுத்துவிடாதே. அவர்களுக்குத்தான் பாதிப்பு. சொன்னால் கேள் சந்துரு. நமக்கும் நேரமாகிறது. அம்மா தேடுவார்கள்''-என்றவாறு காரை நிறுத்திய



அருண் சொல்லிக் கொண்டே இருக்க, அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் இறங்கி சாலையைக் கடந்து, மலைபோல் குவித்து வைத்திருந்த இளநீர் வியாபாரியிடம் சென்று ஏதோ பேசினான். அவனும் பலமாய் தலையசைத்து விட்டு சாலைப்பணியாளர்களிடம் சென்று அவர்களைவேலை வாங்கிக் கொண்டிருந்தவரிடம் சென்று ஏதோ சொல்ல, அதற்கு மேலும் நில்லாமல் அருணும் காரை விட்டு இறங்கி காரைப் பூட்டிவிட்டு நண்பனிடம் சென்றான்.

''என்னடா பண்ணப்போற?''-என்றவனை ''ஷ்! அமைதியாய் இரு. அவர்கள் வருகிறார்கள்.''-என்றான் சந்துரு. திரும்பிப்பார்த்தான் அருண். கிட்டத்தட்ட நாற்பது பேருக்கும் மேலாக ஒரு சிலர் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வந்தனர். இளநீர் விற்பவன் உற்சாகமாக வந்து ''ஸார்! காண்டிராக்டர் சரின்னு சொல்லிட்டார் ஸார். இளநீ சீவிடவா''-என்றான்.

''ம். சீக்கிரம். அவங்க வேலையும் கெடக்கூடாது. சீக்கிரம்''-என்றான் சந்துரு. மொத்த இளநீரும் ஒரே சமயத்தில் விற்றுவிடப்போகும் சந்தோஷத்தில் வெகு உற்சாகமாய் லாவகமாய் இளநீரை சீவி ஒவ்வொருவருக்குமாய் கொடுக்க, தனது பர்ஸை எடுத்து இரண்டு ஐநூறு ரூபாய் நோட்டுக்களை உருவி அருணிடம் தந்தான் சந்துரு. ''டேய்! அருண். அதோ அந்த வாட்டர் மெலன் கடையில்போய் இதைக் கொடுத்து மொத்தப்பழங்களையும் கொண்டுவரச் சொல். கட் பண்ணி எல்லோருக்கும் கொடுக்கச் சொல்''-என விரட்டினான். வெயிலுக்கு இதமாய் தங்கள் வயிறு குளிர்ந்ததும் அனைவரின் கண்களுக்கும் தெய்வமாகவே காட்சியளித்தான் சந்துரு. ''மகராசாவுக்கு இன்னிக்கு பொறந்த நாளா?'' என்றார் ஒரு வயதான பெண்மணி.

''இல்லம்மா! இன்னிக்கு ஒருநாளாவது உங்க மனமும் வயிறும் குளிரட்டுமேன்னு நினைச்சேன். மத்தபடி ஒன்றுமில்லை. இதோ தர்பூசணி வருகிறது. எல்லோருமாய் சாப்பிட்டுவிட்டு வேலையைத் தொடங்குங்கள். எனக்கு நேரமாகிறது. வரட்டுமா?'' -என்ற வாறே கைகூப்பினான் சந்துரு.

''மகராஜனா போயிட்டு வாங்கய்யா. உங்க மனம்போல வாழ்க்கை அமைஞ்சு புள்ள குட்டியோட அமோகமா வாழணும். போயிட்டு வாங்கய்யா''-என வழியனுப்பினர். மனநிறைவுடனும் வழியில்துளிர்த்த நீருடன் பேசாமல் நடந்து வந்து காரில் ஏறி அமர்ந்தான் சந்துரு. பின்னேயே ஓடிவந்த அருண் ஓட்டுநர் இருக்கையில் ஏறி அமர்ந்து கொண்டு, ''போலாமா? இல்ல இன்னும் ஏதும் சேவை இருக்கா?''-என்றான்.

''கிண்டல் பண்ணாதேடா. அவங்க முகத்தை பார்த்தியா. எவ்வளவு நிறைவு. எத்தனை ஆனந்தம். ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்பது

இது தானேடா. எனக்கு..எனக்கு... திருப்தியா இருக்குடா. இனிமே இதைவிட அதிகமா செய்யணும். ஏழைகளுக்கு... உழைக்கிறவங்களுக்கு... ஏதாவது செய்யணும் டா..''- சந்துரு சொல்லிக் கொண்டே போக, ''சரி.சரி. வள்ளல் பெருமானே! இப்ப காரை எடுக்கவாவேண்டாமா?''-என்றான் அருண். வாட்ச்சைப் பார்த்தவன், ''டேய்! மணி ரெண்டாகப் போகுது. விடு ஜூட்''-என்றதும் கார் சீறிப்பாய்ந்தது. பத்தே நிமிடத்தில் சிக்னல் விழுந்து விட கார் நின்றது. நிமிர்ந்து பார்த்த சந்துரு அயர்ந்து போனான். நெருக்கமாக கார்களும் பைக்குகளுமாய் சாலையை அடைத்துக் கொண்டு இருக்க கூட்டம் திணறியது. கார்களின் பேருந்துகளின் ஹாரன் இரைச்சல் காதைப்பிளந்தது.

''என்னடா இது? சிக்னல் மாதிரி தெரியலியே. கண்ணுக்கு எட்டும் தூரம்

வரை ட்ராபிக்கா இருக்கே. இது எப்போ கிளியராகும். நாம எப்போ வீட்டுக்கு போவது?''-என்றவாறே கண்ணாடியை இறக்கியவாறே, தனது காரை ஒட்டியவாறு நின்ற பைக்கில் உள்ள இளைஞனிடம், ''என்ன ஸார் பிராப்ளம்? என் ட்ராபிக் இவ்ளோ ஹெவியா இருக்கு?''-எனக்கேட்டான் சந்துரு.

''ஏதோ பேரணியாம். ஒரு மணிநேரமா ட்ராபிக் ஜாம் ஆகி நிக்குது. ட்ராபிக் கான்ஸ்டபிளையும் காணோம். இதில ஏதோ ஒருவேன் ஆட்டோவை இடித்துவிட்டதாம். அது இன்னும் பிரச்சனை ஆகி இப்போ போலீஸ் வந்திட்டு இருக்காங்களாம். இவங்க எப்போ வந்து எப்படி கிளியர்பண்ணுவாங்களோ தெரியல. வேற ரூட்ல போகலாம்னா பின்னாலயும் புல்லா வண்டி நிக்குது. இந்த கொளுத்துற வெயில்ல வறுபட வேண்டியது தான்''-என்றான் அவன் கோபமும் வருத்தமுமாக.

''இப்ப என்னடா பண்றது?''-எனக்கேட்டவனை முறைத்தான் அருண். ''என்னக் கேட்டா? ஒழுங்கா கால்மணிநேரத்தில வீடு போய்ச் சேர்ந்திருக்கலாம். பெரிய சமூக சேவை செய்யுறேன் பேர்வழின்னு இவ்ளோ நேரத்தை வீணாக்கிவிட்டு இப்போ என்னிடம் கேட்கிறாயா? முதல்ல கிளாஸை க்ளோஸ் பண்ணிடு. இரைச்சல் காதை செவிடாக்கும் போல. எப்படியும் ஒரு மணி நேரமாகிடும்.''-என்றவாறு சீட்டில் சாய்ந்து கொண்டான். கண்ணாடியை மேலேற்றிவிட்டுக் கொண்டு நிமிர்ந்தபோது காருக்கு சற்று முன்னே ஒரு சில கார்களுக்கு நடுவே வெற்றுக்காலுடன் நின்ற ஒரு பெண் சந்துருவின் பார்வையில் விழுந்தாள். சட்டென பார்வையை கூர்மையாக்கினான்.

சின்னஞ்சிறு பாதங்கள். கொதிக்கும் வெயிலில் தார்ச்சாலையில் காலை ஊன்றி நிற்க முடியாமல் காலை மாற்றி மாற்றி நின்று கொண்டிருந்தாள். அந்தப்பாதங்கள் கன்றிசிவந்திருந்ததைக் கண்டதும் தன்னையும் மீறி பதறி பார்வையை மேலேற்றினான். முன்புறம் திரும்பியிருந்ததால் முகம் தெரியவில்லை. இடைவரை நீண்டிருந்த பின்னலில் கதம்பமலர்களை சூடியிருந்தாள். பஞ்சுமிட்டாய் கலரில் பட்டுப்புடவை கட்டியிருந்தாள். தனியாகவா நிற்கிறாள் என்ற பதைப்புடன் பார்வையை முன்னே எட்டிப்போட்டான். அவளுக்கு முன்பாக சைக்கிளைப் பற்றிக்கொண்டு பீடியை புகைத்து கொண்டு ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவன் கால்களில் நைந்த ரப்பர் செருப்பு இருந்தது. அந்தப் பெண்ணின் அருகில் நின்றகார் திடீரென எழுப்பிய ஹாரன் ஒலியில் திடுக்கிட்டு பதறி திரும்பினாள் அவள். பளீரென நிலவையொத்த குழந்தைமுகம். வியர்வையில் குளித்திருந்த போதும் அற்புதமான அழகோடு இருந்தமுகம் சந்துருவின் மனதை வாட்டியது.

''மூணு வேளை மருந்து சாப்பிட சொன்னதுக்கு ஒரு வேளை சாப்பிடறியே...ஏன்?''
''நான் டயட்ல இருக்கேன் டாக்டர்...''
-தே.தனலட்சுமி, கோவை.





இந்தச் சின்னப் பொண்ணை வெயிலில் வெறுங்காலோடு நிற்க வைத்திருக்கிறானே இடியட்! சைக்கிளை ஓரமாய்க் கொண்டுபோய் ஏதேனும் நிழலில் நிற்கவைத்தால் என்ன? அட்லீஸ்ட் இவன் செருப்பையாவது கழற்றி கொடுத்திருக்கலாமே. என்ன மனிதன் இவன்? கொஞ்சமும் மனிதாபிமானம் இல்லாமல்... ''டேய் சந்துரு! போன் அடிச்சுட்டே இருக்குதுடா. என்ன கனவா?''-என்றவாறு அருண் உலுக்கியதும் சட்டென உணர்வு பெற்றவன் பாக்கெட்டினுள் கையைவிட்டு போனை எடுத்த சந்துரு.

''அம்மாடா''-என்றான் கொஞ்சம் பயமாய். ''அம்மாதானே பேசு. நல்லா வாங்கிக் கட்டிக்கோ''-என்றான் சிரிப்போடு அருண்.

''விளையாடாதேடா! நான் பேசினா அவ்வளவுதான். ஏற்கனவே ரொம்பவே லேட். இப்போ ட்ராபிக்லயும் மாட்டினது தெரிஞ்சா என்னை வறுத்திடுவாங்க. பிளீஸ் அருண். நீயே பேசு. வந்திட்டே இருக்கோம்னு சொல்லு. ப்ளீஸ், ப்ளீஸ்..'' நண்பனின் கைகளைப் பற்றிக் கொண்டு கெஞ்சினான்.

''சரி.சரி.குடு.''- என்றவாறு போனை வாங்கி ஆன் பண்ணி காதிற்கு கொடுத்தான் அருண். ''ம்மா! நான் அருண் மா. ஆமா நாங்க ரெண்டு பேருமாத்தான் கிளம்பினோம். இங்கே ஏதோ பேரணியாம். ட்ராபிக் ஜாமாகி நிக்கிது. கிளியரானதும் வந்திடுவோம். பயப்படவேண்டாம்மா. இன்னும் பத்து நிமிஷம் இல்ல அரைமணிநேரத்தில் வீட்ல இருப்போம். என்னம்மா நீங்க... இப்ப வந்திடுவோம்மா..

''அருண் அம்மாவிடம் தாஜா பண்ணிக் கொண்டிருக்க, சந்துருவின் கவனம் மீண்டும் அந்தப் பெண்ணிடமே திரும்பியது. இப்போது அவள் தோளில் பிறந்து சில நாள்களோ மாதமோ ஆன பிஞ்சுக்குழந்தை வீறிட்டுக் கொண்டிருந்தது. அதை சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தாள் அந்தப் பெண். காண சகியாமல் எதைப்பற்றியும் யோசிக்காமல் சட்டென கதவைத் திறந்தான் சந்துரு. முழுக்க கதவை திறக்க முடியாமல் நெரிசலாக வாகனங்கள் நிற்க, மெதுவாக பாதிக் கதவைத் திறந்து அதிலேயே நுழைந்து இறங்கி கதவைச் சாத்திவிட்டு அந்தப் பெண் அருகில் சென்றான்.

ஞாயிறு என்பது கண்ணாக
திங்கள் என்பது பெண்ணாக
செவ்வாய் கோவை இதழாக
சேர்ந்தே நடந்தது அழகாக...

## 2

பீடியை வீசியெறிந்தான் அவன். ''எவன் வீட்ல இழவு விழுந்ததுன்னு இம்மாங்கூட்டம். எம்மாநேரம் வெயில்ல கிடக்கிறது. ந்தா. அந்தச் சனியன் ஏன் இப்படி உயிர்போறாப்போல கத்துது. கல்லு மாதிரி நிக்கிறிய. பால்பாட்டில எடுத்துக் குடேன்''-என்றான் சாராய வாடையோடு குமட்டிக் கொண்டு வந்தது வெண்ணிலாவுக்கு.

பழக்கமற்ற இரைச்சல். குழந்தையின் அழுகை வாகன நெரிசல். கட்டெரிக்கும் வெயில். எல்லாவற்றுக்கும் மேலாக மாமனின் சாராயநாற்றம். பதில் பேச மனமின்றி தோளிலிருந்து வழுக்கிக் கொண்டிருந்த குழந்தையை வியர்வை வழியும் கையோடு தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டாள். குழந்தை திமிறிக்கொண்டு வீறிட்டது. அப்போது தான் அவள் அருகே அந்த கம்பீரமான ஆண்குரல் கேட்டது. ''எக்ஸ்கியூஸ் மீ''-என்றான் சந்துரு.

தனக்கு வெகு அருகே கேட்ட குரலில் திரும்பினாள். வெண்ணிலா. அவளைத் தொடர்ந்து குருசாமியும் திரும்பினான். ''யாரு?''-என்றான் அதட்டும் குரலில். சந்துரு அமைதியாய், ''ஸார்! வெயில் இப்படிக் கொதிக்குதே. கைக் குழந்தையோட இப்படி கஷ்டப்படுறாங்களே. இதுதான் என்னோட கார். ஏ.சி.கார்ட்ராபிக் குறையுற வரைக்கும் என் கார்ல வேணா உட்காருங்களேன். பாவம். இந்த வெயிலை குழந்தையும் எப்படித்தாங்கும்? செருப்பு கூட இல்லாம நிக்கிறாங்களே. பிளீஸ் ஸார். கார்ல உட்கார்ந்துக்கங்க.''-என்றான்.

குருசாமியின் கண்கள் இரத்தச்சிவப்பாய் மாறிவிட வெண்ணிலாவைப் பார்த்தான். அவள் முகம் வெளிறி நடுங்கினாள். எச்சில் விழுங்கியவாறே பயமாய் பார்த்தாள். ''யாருடி இவன்?''-சிங்கத்தின் சீற்றம் தெரிந்த அவன்குரலில் நடுநடுங்கிப்போனாள் வெண்ணிலா.

''மாமா... தெரியாது மாமா. இவர் யாருன்னே தெரியாது மாமா''-சொல்லும்போதே கண்ணில் நீர் நிறைந்தது. சந்துருவின்முகம் குழப்பமடைந்தது. என்ன கேட்கிறான். இவன்? ''எனக்கு தெரிஞ்சுபோச்சுடி. இவராம் இவர். உன் இவருக்கு நீ வெறும்காலோட நிக்கிறத பார்க்க முடியலியாமே. ஏண்டி இவனை நினைச்சுட்டுத்தான் என்னை வேண்டாமின்னியா? அதுவும் சரிதான். ஏசிகார் வச்சிருக்கிறவனை விட்டுட்டு வாடகை ரிக்ஷா ஓட்டுபவனை கட்டிக்க மனசு வருமா என்ன? ஆளும் பார்க்க ஷோக்காத்தான் இருக்கான். எத்தினி நாள் பழக்கம் இது? கேட்கேனில்ல. சொல்லுடி''-குருசாமியின் அதட்டலில் அழுதே விட்டாள். ''ஐயோ! இல்ல மாமா. சத்தியமா இவர் யாருன்னே தெரியாது. என்னை நம்புங்கமாமா''-என்றவளின் கண்ணீர் தன்னைச்சுட வெகுண்டு எழுந்தான் சந்துரு.

சட்டென குருசாமியின் சட்டையைக்கொத்தாகப் பற்றினான். ''யூ! இடியட். மனுஷனா நீ. கட்டின பெண்டாட்டியை இப்படியா சந்தேகப்படுவாய். இந்தப் பெண்ணை இதற்கு முன் நான் பார்த்ததே இல்லையே. குழந்தையோடு வெயிலில் கஷ்டப்படுகிறார்களே என்று ஒரு மனிதாபிமானத்தால் தானே அழைத்தேன். இதைக்கூட வா தப்பாக நினைப்பாய்? இந்தப் பெண்ணுடன் வாழ்ந்து ஒரு குழந்தையையும் பெற்றிருக்கிறாயே. இதற்குப் பின்னுமா இப்படி பேசுகிறாய். நீ மனிதனே இல்லை. சாக்கடைப் புழுவை விட கேவலமானவன். ச்சே!''-என உதறினான். தடுமாறி விழப்போனவன் சைக்கிளைப் பற்றிக் கொண்டு சமாளித்து நின்றான்.

''என்னடா பெரிய லாடு மாதிரி பேசுற. சுத்திலும் பார்த்தியா. எவ்ளோ வண்டி நிக்குது. எவனாவது வந்து என்கார்ல உட்காருன்னு கூப்பிட்டானா உனக்கு மட்டும் ஏன் அக்கறை? இந்தத் திருட்டுக்கழுதைதான் உன்னைக் கூட்டிட்டு வந்திருக்கிறா. செய்வதையெல்லாம் செய்திட்டு பத்தினி மாதிரி கண்ணைக் கசக்கிறதைப் பாரு.''-சொல்லி முடிக்கும் முன் பளாரென அறைந்தான் சந்துரு.

''குடிகாரநாயே! குடிச்சா என்ன வேணாலும் பேசுவியா. என்னை யாரென்று நினைத்தாய்?''-எனக் கேட்டு மீண்டும் அறைந்தான். அதற்குள் கூட்டம் கூடிவிட போனை அவசரமாய் கட் பண்ணிவிட்டு கதவை திறந்து ஓடி வந்தான் அருண். ''என்னடா சந்துரு. என்ன ஆச்சு?''-என்றவாறுதன் நண்பனை விலக்கினான். ''பாரு அருண் கொளுத்துற வெயில்ல இந்தப்பொண்ணு குழந்தையோட கஷ்டப்படுறாங்களேன்னு கார்ல வந்து உட்காரட்டுமேன்னு சொன்னா இந்த நாய் குடிச்சிட்டு அசிங்கமாப் பேசுதுடா. இந்தப் பொண்ணையும் என்னையும் சம்பந்தப்படுத்திப் பேசி.. ச்சீ''-என்றான் ஆத்திரமாய்.

''ஏண்டா குடிகாரனிடம் போய் பேசினால் அசிங்கம் நமக்குத்தானே. அவன் மனைவியை அவன் எப்படியும் கூட்டிட்டு போகட்டுமே. நமக்கேன் இதெல்லாம். முதல்ல காருக்கு வா. இப்பத்தான் வண்டியெல்லாம் மூவ் ஆகுது. நாமும் கிளம்பலாம்.''-என்றவாறு சந்துருவை இழுத்துக் கொண்டு வந்தான்.

''போடி! நீயும் உன் காதலனோட போ. எம்புள்ளையை எங்கிட்ட கொடுத்திட்டு போ''என்றவாறு வீறிட்டு அழும் குழந்தையை பறித்துக் கொண்டு வெண்ணிலாவை பிடித்துத் தள்ளினான் குருசாமி. தள்ளாடி தன் மீது விழுந்த பெண்ணை தாயின் பரிவோடு தாங்கிக் கொண்டான் சந்துரு. தடுமாறி எழுந்தவள் ''ஐயோ! என் குழந்தை. மாமா. குழந்தையை கொடுங்கமாமா. அது உங்க கூட இருக்காது மாமா. நான் எந்தத்தப்பும் செய்யலமாமா. உங்க மனசு போல நடந்துக்கிறேன் மாமா. குழந்தையை மட்டும் தந்திடுங்க மாமா.''-என அவன் காலைப் பற்றிக் கொண்டு கதறினாள் வெண்ணிலா. பார்த்தவர்கள் கண்கள் குளமாக தன்னால் தானே இந்தப் பெண்ணிற்கு இந்த நிலை என்ற பரிதவிப்பில் நேராய் குருசாமி முன்போய் நின்றான் சந்துரு.

''இதோ பார்! நீ யாரோ எவரோ எனக்குத் தெரியாது. சத்தியமாய்ச் சொல்கிறேன். உன் மனைவியை நான் பார்த்தது கூட இல்லை. என்னை நம்பு. இப்படி தாயையும் குழந்தையையும் பிரிக்காதே. நான்போய் விடுகிறேன். ஒரு பெண்ணின் வாழ்வை அழித்துவிடாதே. கட்டிய மனைவி மீது முதலில் நம்பிக்கைவை. அந்தப் பெண்ணின் கதறல் உனக்கு கேட்கவில்லையா''-என்றான் வருத்தமான குரலில்.

''டேய்! என்னடா சும்மா பொண்டாட்டி பொண்டாட்டின்ற. நான் இன்னும் அந்தக் கழுதை கழுத்தில் தாலியே கட்டல. கட்டுவேன்னு சொல்லிக்கிட்டு இருந்தேன். உன் மூலமா அவ சாயம் வெளுத்துப் போச்சில்ல. அவ என்னை கட்டிக்க மாட்டேன்னு சொன்னப்பவே எனக்கு சந்தேகம்தான். உன்னைப் பார்த்ததும் தெளிவாகப் போச்சே. எனக்கு ஆயிரம் பொண்ணு கிடைப்பாடா. இந்தச் சோரம் போனவளை கட்ட நான் என்ன பைத்தியக்காரனா. நீயே கட்டிகிட்டு அழு. இது எம்புள்ளை. இது எங்கூடத்தான் இருக்கும். வழிய விடுடா''-என்றவாறு ஒரு கையில் குழந்தையோடு மறுகையில் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு செல்ல, வாகனங்கள் ஒன்றையொன்று முந்திக் கொண்டு செல்ல ஆரம்பித்தது.

''டேய் நம்மகார் நடுவில நிக்குது. பார் எத்தனை பேர் ஹார்ன் அடிக்கிறான்னு. வாடா''-என சந்துருவை அழைத்துக் கொண்டு காரை அடைந்து காருக்குள் திணித்து தானும் ஏறி காரை இயக்கினான் அருண். கார் மெல்ல நகர சந்துருவின் பார்வை அந்தப் பெண்ணை அவசரமாய் தேடியது. சற்று தொலைவில் அவன் விறுவிறுவென சென்று கொண்டிருக்க, அந்தப் பெண் அழுது கொண்டே பின்னே ஓடிக் கொண்டிருந்தாள்.

நெஞ்சம் பாரமாகிவிட, ''அருண். பாவம்டா அந்தப் பெண். என்னால் தானே அவன் அப்படி விட்டுவிட்டு போயிட்டான். காரை ஓரமாய் நிறுத்து அருண். நான் அவனை எப்படியாவது சமாதானம் செய்து அந்தப் பெண்ணை சேர்த்துவைத்துவிட்டு வருகிறேன்.''-என்ற சந்துருவை கோபமாய் பார்த்தான் அருண். ''உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கு? உன்னோட இரக்க குணம் எந்த அளவுக்கு கொண்டு வந்து விட்டிருக்கிறது பார்த்தாயா? டேய் எவன்

மனைவி வெளியில் நின்றால் உனக்கு என்ன? எல்லாம் அவர்களே சமாதானமாகி விடுவார்கள். நீ பேசாமல் வா. இன்னும் அரை மணி நேரத்தில் நாம் பெண் வீட்டில் இருக்க வேண்டும். அதை மனதில் வைத்துக் கொள்!''-என்றான்.

''இல்ல அருண். இன்னிக்கு இல்லன்னா நாளை கூட பெண் பார்க்கலாம். பாவம்டா இந்தப் பொண்ணு. ஐயோ பாருடா அழுதிட்டே ஓடுறா. கார் மோதிடப் போகுது. ப்ளீஸ் அருண் காரை நிறுத்து. எனக்கு மனசெல்லாம் துடிக்குது. இப்படியே போய் எப்படி அந்தப் பொண்ணை பார்க்க முடியும்? சொன்னா கேளு அருண். ப்ளீஸ் காரை நிறுத்து''-பரிதவித்தான் சந்துரு.

''சந்துரு! பேசாமல் கண்களை மூடிக்கொள். அதுதான் உனக்கு நல்லது. நம் கண்முன் தினம்தினம் எத்தனையோ அநியாயங்கள் நடக்கத்தான் செய்கிறது. எல்லாவற்றிலும் நாம் தலையிட்டு தீர்வு காண முடியாது. கண்டும் காணாதது போல் போய்விட வேண்டும்.''-என அதட்டிய அருணை வெறித்தான் சந்துரு.

''படித்தவன் மாதிரியா பேசுகிறாய்! எப்போதிருந்து இப்படி சுய நலவாதியாய் மாறினாய் அருண். நீ இப்படி மாறுவாய் என்று நினைக்கவில்லையே நான்''-வேதனையாய் கூறிய நண்பனை பரிவாய் பார்த்தான் அருண்.

''இல்லை சந்துரு. இது சுய நலம் இல்லை. புத்திசாலித்தனம். இல்லே ஒதுங்கிப் போவது என்று கூட சொல்லலாம். இப்போ நம்மைச் சுத்தி எவ்வளவோ கார் நின்றது. யாரேனும் மனமிரங்கிப் போய் அழைத்தார்களா? இல்லையே. அவர்கள் அனைவருமே சுய நலவாதி இல்லை சந்துரு. அவரவர்க்கு ஆயிரம் வேலைகள். இதில் கணவனோடு நிற்கும் ஒரு பெண்ணை யார்தான் அழைப்பார்கள்? அப்படியே அழைத்தாலும் உன்னை கேட்டது போல் தானே அவன் அவர்களையும் கேட்பான் தானே. இது அந்தப் பெண்ணுக்கும் எத்தனை மன உளைச்சலை வேதனையைத் தரும்? இதெல்லாம் யோசித்துத்தானே விட்டிருப்பார்கள். அதனால் நான் உன்னைக் குற்றம் சொல்லவில்லை. உன் இளகிய மனதைப் பற்றி எனக்குத் தெரியும். ஆனால் தெருவில் போகும் ஒரு குடிகாரனுக்குத் தெரியுமா? வருத்தப்படாதே சந்துரு. இப்போ நாம் எங்கு போக வேண்டும் என்பதை மறந்து விடக்கூடாது. ஏதோ கோபத்தில் போகிறானே தவிர அப்படியே அந்தப் பெண்ணை விட்டுவிட்டு போக மாட்டான். நீ பயப்படாதே. அதோடு அவர்கள் கணவன் மனைவி இல்லையென்று தானே சொன்னான் அவன். திருமணம் செய்து கொள்ளப்போவதாக சொன்னானே.

''அவர் போலி டாக்டர் அப்படின்னு சொல்றியே எப்படி?''
''கால்ல ஆணின்னு சொன்னதும், காந்தத்தை வெச்சு எடுக்கலாம்னு சொல்றாரே?''
-வி.ஸ்ரீ வித்யா,
கும்பகோணம்.



அப்படி திருமணம் செய்யப்போகிறவன் இப்படி விட்டுவிட்டு போவானா? யோசித்துப்பார்.''-என்றான் அருண்.

சோர்வாய் கண்களை மூடிக்கொண்டான் சந்துரு. விழிகளுக்குள் அந்தப் பெண்ணின் நிலவு முகமும், பிஞ்சு பாதங்களும், நீரில் மிதந்த மான் விழிகளும் தோன்றி மனதை வாட்டியது. இந்த சின்னஞ்சிறு பெண்ணை ஒரு குடிகாரனுக்கு மணமுடிக்க எப்படி அவள் பெற்றோர் சம்மதித்தனர்? அதுவும் அவனது குழந்தை என்றானே! அப்படியென்றால் மறுமணமா? முதல் மனைவி என்ன ஆனாள்? நடுரோடுஎன்றும் பாராமல் திருமணம் செய்யப்போகும் ஒரு பெண்ணையே வாய் கூசாமல் என்னென்ன வார்த்தை சொன்னான். இப்படிப் பட்ட வார்த்தைகளைப் பேசியே முதல் மனைவியை கொன்றிருப்பானோ? இது தெரிந்தும் எப்படி இந்தப் பெண் திருமணத்திற்கு சம்மதித்தாள். குழந்தை.. குழந்தை.. என்றுதானே கதறிக் கொண்டு சென்றாள். ஒருவேளை குழந்தையை காரணமாய்க் காட்டித்தான் திருமண ஏற்பாடு நடந்ததோ? திருமணத்திற்கு போவதென்றால் மணப்பெண்ணை இப்படியா நடத்திக் கூட்டிச் செல்வான். கூட வேறுயாருமே வரவில்லையே ஏன்? ஒருவேளை கடத்தி வந்திருப்பானோ? ம்ஹூம். கடத்தி வந்திருந்தால் தலைவாரி பூச்சூடி பட்டுடுத்தி நிற்பாளா? பயமுறுத்தி அழைத்து வந்திருப்பானோ?-என்றவாறு தலையை அழுந்தப் பற்றிக் கொண்டான்.

மெல்ல மெல்ல முன்னேறிக் கொண்டிருந்த கார் நின்றது. கண்களைத் திறந்தான் சந்துரு. முன்னே சென்ற வாகனங்கள் அப்படியே நின்றிருக்க, ஒரு சிலர் இறங்கி ஒடினர். காரணம் புரியாமல் தானும் இறங்க கதவில் கைவைத்த சந்துருவை நிறுத்தினான் அருண். ''நீ ஒன்றும் இறங்கவேண்டாம். பேசாமல் உட்கார்ந்திரு. நான் போய் பார்த்துவிட்டு வருகிறேன். இன்று புறப்பட்ட நேரமே சரியில்லடா. எத்தினிவாட்டி நிற்பது? வீட்டில் எல்லோரும் ரெடியாய் இருப்பார்கள். இன்று உனக்கு எப்படியும் பூஜை நடப்பது உறுதி தான்''-என்றவாறு இறங்கிக் கதவை சாத்திவிட்டு நடந்தான் அருண். சற்று முன்னே சென்றதும் எதிர்ப்பட்டவரை நிறுத்தி, ''என்னாச்சு ஸார். ஏன் திரும்பவும் ட்ராபிக் ஆயிடுச்சு. பேரணி இன்னும் முடியலியா?''-எனக் கேட்டான்.

''அதெல்லாம் முடிஞ்சு போச்சு ஸார். இது ஆக்ஸிடெண்ட். சைக்கிள்ல போன பேமிலிய ஏதோ தண்ணிலாரி அடிச்சிட்டானாம். ஒரு குழந்தை கூட இருந்தது. பொழைக்கிறது கஷ்டம்தான்''-என உதட்டைப் பிதுக்கிக் கொண்டு அவர் நகர அருண் அதிர்ந்தான். சைக்கிள்ல போன பேமிலி. ஒரு குழந்தையும் இருந்தது என்ற வார்த்தை காதில் மோத, கொஞ்சம் பயமாய் காரைத் திரும்பிப் பார்த்தான். கண்களை மூடிக்கொண்டு சீட்டில் சாய்ந்திருந்தான் சந்துரு. படபடப்போடு முன்னேறி வாகன நெரிசல்களையும் இரைச்சலையும் தாண்டி முன்னே சென்றான். கூட்டம் மொய்த்திருக்க கூட்டத்தைத் தாண்டி சாலையில் இரத்தம் வழிந்தோடிக் கொண்டிருந்தது. உடல் ஒரு கணம் சில்லிட்டு போனது. கைகால்கள் உதற, மெல்ல கூட்டத்தை விலக்கினான். கண்டகாட்சியில் அதிர்ந்து கண்களை மூடிக்கொண்டான். இதயம் பலமடங்கு எகிறித் துடிக்க மெல்லக் கண்களைத்திறந்தான்.

அவன் தான். சந்துருவிடம் சண்டை போட்டவன்தான். உடல் நசுங்கி துடித்துக் கொண்டிருந்தான். கால்கள் மட்டும் வெட்டிக் கொண்டு கிடந்தது. சற்று தள்ளி குழந்தை தலைசிதறிக் கிடந்தது.

''கடவுளே!'' முகத்தை மூடிக் கொண்டிருந்த குழந்தை இப்படி சிதைந்து

போவதே. வார்த்தைக்கு வார்த்தை விஷத்தைக் கக்கியவன் இதோ இறுதி மூச்சுக்குத் தவிக்கிறானே. அந்தப் பெண்! எங்கே போனாள்! அவளும் இப்படி சிதைந்து நினைக்கவே வயிறு கலங்கியது. கண்களைச் சுழற்றித் தேடினான். நான்கைந்து பெண்கள் குழுமியிருக்க, அவர்களது மடியில் அந்தப்பெண் மூர்ச்சையாகிக் கிடந்தாள். சோடாவும் தண்ணீரும் சிலர் தெளித்துக் கொண்டிருக்க, அவள் மீளாத மயக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். ''போச்சு! ஆம்புலன்ஸ் வருமுன்னே பெரிய உசுரும் போச்சே''-ஏதோ ஒரு பெரியவர் குரல்கொடுக்க பதறி திரும்பினான். அவன் மொத்தமாய் அடங்கியிருந்தான். கண்கள் இருட்டியது.

''குடிகாரப்பய போலிருக்குப்பா! திருப்பத்தில லாரி வர்றதை கவனிக்கலப்பா. ஒரு கையில புள்ள. ஒரு கையால சைக்கிளை ஓட்டியிருக்கான். இந்தப் பொண்ணு யாருன்னு தெரியல்ல. ஆனா பின்னாலயே ஓடிவந்ததுப்பா. பாவம். கண்ணெதிரில் விபத்தைப் பார்த்ததும் மயங்கிவிழுந்தது தான். மூச்சே இல்லப்பா.''-ஒருவர் பெருமூச்சோடு சொல்லிக் கொண்டிருக்கையில் சைரனுடன் ஆம்புலன்ஸ் வந்தது. ஸ்ட்ரெச்சர்களை கொண்டுவர, டாக்டர்களும் போலீஸ்காரர்களும் மெதுவாகப் பேசிக் கொண்டே சடலங்களுக்கு அருகே செல்ல, அதற்கு மேலும் அங்கே நிற்க இயலாமல் திரும்பி நடந்தான்.

என்ன கொடுமை இது? இதை சந்துருவிடம் சொல்லவேண்டுமா? சொன்னால் உடைந்து போய்விடுவானே! பிறகெப்படி பெண் பார்க்க வருவான்? ஏற்கனவே போனில் சரோஜினி பலமுறை சொல்லியிருந்தார். சீக்கிரம் வந்துவிடுங்கள். நல்லநேரம் முடியுமுன் பெண் வீட்டில் நாம் இருக்க வேண்டும் என்று மணி இப்போதே நான்காகப் போகிறதே. இப்போது சந்துருவை எப்படி எதிர்கொள்வது. என்ன விபத்து என்று கேட்டால் என்ன சொல்வது? பொய் சொல்வது அவ்வளவு எளிதல்லவே. உண்மையையும் எப்படிச் சொல்ல முடியும்? தன்னால்தான் ஆனதோ என்று நொந்துவிடுவானே. பலவிதமான சிந்தனையோடு வந்து கொண்டிருந்தவன் ''த்தட்''-என்று யார் மீதோ மோதிக் கொண்டு நின்று விட, ''ஸாரி வெரிஸாரி'' என்றவாறு நிமிர்ந்தவன் அதிர்ந்தான். ''என்னாச்சு அருண். இவ்ளோ நேரம் எங்கே போயிட்டே? ஏதோ ஆக்ஸிடென்ட்னு சொல்றாங்களே. எதுவும் உயிர்போயிற்றா. அப்படி ஒன்றும் இல்லையே. நீ ஏன் பேயறைந்தது போலிருக்கே. ஹேய் அருண். என்னடா?''-என்றவாறு நின்றான் சந்துரு.

திடுமென சுய உணர்விற்கு மீண்ட அருண் நண்பனின் கையைப் பற்றிக் கொண்டு காரை நோக்கி நடந்தான், ''சந்துரு! இந்த ரோடு கிளியராக எப்படியும் இன்னும் ஒரு மணி நேரமாகும். நாம அதுவரை வெயிட்பண்ண முடியாது. வா. ரைட்ல கட்பண்ணி கிராஸ்கட் ரோடுவழியா வீட்டுக்குப் போயிடலாம். கமான். க்விக்.''-என்றவாறு காரை அடைந்தான்.

''என்டா! பெரிய ஆக்ஸிடென்ட்டா. ரொம்பப் பதட்டமா இருக்கியே. நான் பார்த்திட்டு வர்றேனே''-என்றான் சந்துரு. அவசரமாய் மறுத்தான் அருண்.

''நோ.நோ என்னாலயே பார்க்கமுடியல்ல. நீ பார்த்தா தாங்கமாட்டே. வா போலாம்''-என்று காரில் ஏறினான் ''நீ எதையோ பார்த்து ரொம்ப பயந்திருக்க அருண். நீ இவ்வளவு டென்ஷனோடு கார் ஓட்ட வேண்டாம். நீ இங்கே வா. நான் ட்ரைவ் பண்றேன்''-என்ற சந்துருவிடம் மறுபேச்சில்லாமல் இடம் விட்டான். காரைத் திருப்பி கிளையில் பிரிந்த சாலையில் நுழைந்து அமைதியாய் செலுத்தியவாறே, ''அந்தப் பெண்ணைப் பார்த்தாயா அருண். அவன் அழைத்துப் போயிருப்பான் இல்லையா. ஏன்னா நான் தேடிப்பார்த்தப்போ என்



கண்ணில் தென்படவில்லை. கூட்டிட்டு போயிருப்பானில்ல அருண்''-என இயல்பாய்க் கேட்டான் சந்துரு.

''ம்? அவளா? அவளுக்கென்ன பத்திரமாய் இருப்பாள். நீ ஏன் அவளைப் பார்த்து கவலைப்படுகிறாய். ஷீ ஈஸ் ஸேப். யூ டோண்ட் வொர்ரி. பீ ஹேப்பியா. மற்றதை மற. கல்யாண கனவு காண். இதோ வீடு வந்தாச்சு.''-நிம்மதி மூச்சோடு நிமிர்ந்தான் அருண். வாசலிலேயே சரோஜினி கோபமாய் நின்றார். இருவரும் இறங்கும் முன்பே அர்ச்சனை தொடங்கியது.

''மணி என்னடா ஆகுது. உன்னை இன்னிக்கு வீட்லதானே இருக்கச் சொன்னேன். என்னிக்குத்தான் எம்பேச்சைகேட்டிருக்க நீ. இப்பத்தான் பொண்ணு வீட்ல இருந்து போன் வந்தது. ராகு காலம் தொடங்கிட்டதால இனி வரவேண்டாம். நாளை மறுநாள் நிச்சயத்தையும் சேர்த்தே வெச்சிக்கலாம்னு சொல்லிட்டாங்க. நாங்கள்லாம் கிளம்பி எத்தனை மணி நேரம் வெயிட் பண்ணினோம். பாருங்க நான் பேசிட்டே இருக்கேன். அவன் எதையாவது காதில் வாங்குறானா பாருங்க''-என வீட்டினுள் நுழைந்து கணவனை துணைக்கழைத்தாள்.

''விடு சரோ. அவனே ட்ராபிக்ல மாட்டி சோர்ந்து போய் வந்திருக்கான். முதல்ல அவனை சாப்பிட வை. இன்னும் ஒரு நாள் தானே. நாளை மறுநாள் காலையிலேயே அவனை ஹவுஸ் அரெஸ்ட் பண்ணிடு. இப்போ அவனுக்கு சாப்பாடு போடு''-என மனைவியை சமாதானம் செய்தார் சபாபதி.

''என்னையே சொல்லுங்க. அவனை ஒரு நாளும் திட்டாதீங்க. டேய் அருண் பையா. உனக்கு ஏன்டா முகம் இப்படி பேயறைஞ்ச மாதிரி இருக்கு. வாடா சாப்பிடலாம்.''-என்றாள் உரிமையாய் கோபித்து. அவசரமாய் முகத்தை துடைத்துக் கொண்டான் அருண். ''இல்லேம்மா! இன்னிக்குத்தான் புரோகிராம் கேன்ஸலாகிவிட்டதே. நான் கிளம்புறேன். கொஞ்சம் அர்ஜென்ட் வொர்க் இருக்கு-என்றவாறே எழுந்தான்.

''அம்மா! இவனுங்க ஏதோ நம்மகிட்ட மறைக்கிறானுங்க. பாருங்க ரெண்டு பேர் மூஞ்சும் இஞ்சி தின்ன குரங்காட்டம் இருக்கு''-சந்துருவின் தங்கை உமா இத்தனை நேரம் அலங்கரித்திருந்த தன் அலங்காரங்களைக் கழற்றிய வாறே அந்தக் கடுப்பில் அன்னையிடம் போட்டுக் கொடுக்க, ''உமா! உன் அண்ணன் முகம் உன்னைப் போல் இருப்பது சரிதான். ஆனால் என்னையும் ஏன் சேர்த்துச் சொல்கிறாய்''-என வழக்கம் போல் உமாவைச் சீண்டுவான் என்று எதிர்பார்த்திருந்த அனைவரும் ஏமாந்துதான் போயினர்.

அருணின் முகம் இருண்டு கிடந்தது. முகம் முழுவதும் வியர்வை ஆறாய் பெருக நின்றிருந்த நண்பனைப் பார்த்ததும் முதன் முறையாய் சந்தேகம் எழுந்தது சந்துருவிற்கு. மெல்ல அவனருகில் வந்து தோள்தொட்டான்.

**உன்னோடு நான் கண்ட சொந்தம்**
**மண்ணோடு மழைகொண்ட பந்தம்**
**காய்ந்தாலும் அடி ஈரம் மிஞ்சும்**

## 3

பதறி விலகினான் அருண். ''டேய் அருண்! நான் தான்டா. என்னாச்சு உனக்கு? ஏன்டா முகமெல்லாம் இப்படி வேர்த்திருக்கு. அருண் என் கிட்ட எதையோ மறைக்கிற நீ. என்னன்னு சொல்லுடா. முதல்ல நீ உட்கார்''-என்றவாறு சோபாவில் அவனை அமரவைத்தான். மின்விசிறியை வேகமாக சுழல

விட்டான். அதற்குள் சரோஜினியும் சபாபதியும் அருகில் வர, ''அருண். என்னப்பா? உடம்பு ஏதுவும் பண்றதா?''- சரோஜினி பரிவாய்க் கேட்டதும் அருணின் கண்கள் கலங்கிவிட்டது.

''இல்லம்மா! இன்னிக்கு வழியில ஒரு ஆக்ஸிடென்டை பார்த்தேன். ம்ப்ச். அந்தக் காட்சி இன்னும் மறையல்ல. ரொம்பக் கஷ்டமா இருக்கும்மா''-என்றான்நெஞ்சை நீவி விட்டுக் கொண்டே. பதறிப் போனாள் சரோஜினி. ''உமா கொஞ்சம் ஐஸ்வாட்டர் எடுத்கிட்டுவா''-என்றதும் கழற்றிக் கொண்டிருந்த நகைகளை அப்படியே மேஜை மீது வைத்துவிட்டு உள்ளே ஓடி ப்ரிட்ஜைத் திறந்து வாட்டர்பாட்டிலை எடுத்துக் கொண்டு வந்தாள். அதை வாங்கி அருணின் அருகில் அமர்ந்து பாட்டிலைத் திறந்து குடிக்கத்தந்தாள்சரோஜினி சொட்டு மிச்சம் வைக்காமல்கட கட வென குடித்து முடித்தான் தொண்டை வரை அடைத்துக் கொண்டிருந்த துக்கம் குறைந்து விட தெம்பாய் உணர்ந்தான்.

''தேங்க்யூமா சரிம்மா நான் கிளம்புறேன். வீட்லபோய் ரெஸ்ட் எடுத்தா சரியாகிடும். சந்துரு நாளைக்கு மீட் பண்ணலாம்''-என்றவாறு எழுந்தான்.

''எங்கே கிளம்பிட்ட? த்ரி அவர்ஸா மேக்-அப் பண்ணி எல்லாமே உங்களால வேஸ்ட். அதற்கு தண்டனையா நான் தர்ற பூஸ்ட்டை குடிச்சிட்டுப் போ''-என்றவாறு சூடாக பூஸ்ட் கரைத்துக் கொண்டுவந்தாள் உமா.

''அடடே! ஸாரி உமா. நான் தவறாக புரிந்து கொண்டேனா. இல்லை என் காதுதான் கேட்கும் திறனை இழந்து கொண்டு வருகிறதா? என்றான் அருண்சிரிக்காமல்.

மற்றவர்கள் புரியாமல் விழிக்க உமாவோ, ''வயதானால் காது மந்தமாவது இயற்கைதான். அதை விடு! இப்போது எதை தவறாகப் புரிந்து கொண்டாய். முதலில் அதைச் சொல்'' என்றாள் கேலியாக.

''நேற்று சந்துரு என்னிடம் போனில் பேசும் போது தனக்கு பெண் பார்க்க போவதாகவும் துணைக்கு என்னையும் வரும்படி அழைத்தான். இன்று நீ சொன்ன பிறகுதான் தெரிகிறது உன்னைத்தான் மாப்பிள்ளை வீட்டார் பெண் பார்க்க வருவது. ஸாரி! உமா எங்களால் தான் லேட்டாகி விட்டது. மெய்யாகவே ஸாரி'' என்றான் அருண்.

''ஏய்! ஏய்! ஆக்ஸிடென்ட்டை பார்த்து உனக்கு மூளை பிசகிவிடவில்லையே. என்னைப் பெண் பார்க்க வருவதாக நான் எப்போது உன்னிடம் சொன்னேன்?'' என்றாள் உமா கோபமாய்.

''என்ன மாப்பிள்ளை மிருகங்களோட பழகிட்டிருக்கிறீங்க...''

''உங்கப் பொண்ணோட வாழறதுக்கு முன்னாடி ட்ரெயினிங் எடுத்துட்டு இருக்கேன் மாமா...''

-ஜே.தனலட்சுமி, கோவை.





''இப்போது தானே சொன்னாய்? மூன்று மணி நேரமாய் அலங்காரம் செய்து கொண்டேன் என்று மணப்பெண்ணிற்குத் தானே மணிக்கணக்காய் அலங்காரம் நடக்கும்'' என்றான் அருண் பாவமாய். ''டேய்! என்னடா கொழுப்பா? பாவமேன்னு பூஸ்ட் கொண்டு வந்தா என்னையே இரிடேட் பண்றியா..போடா உனக்கு கிடையாது நீ குடிண்ணா'' என்றவாறு கப்பை சந்துருவிடம் கொடுத்தாள்.

''ஏய் கழுதை! உன்னை விட எத்தனை வயது பெரியவன் அவன் அவனைப் போய் வாடா போடா என்கிறாயே மரியாதையாய்ப் பேசு என்று எத்தனை முறை சொல்கிறேன்'' அதட்டினாள் சரோஜினி ''விடுங்கம்மா! குழந்தை தானே. சொல்லிவிட்டுப் போகட்டும்.'' என்றான் அருண்.

''குழந்தையா? சரிதான். இருபது வயது முடிகிறது. இந்த குழந்தைக்கு இன்னும் ஓரிரண்டு வருடத்தில் திருமணம் செய்யவேண்டிய வயது. நீ இவளைக் குழந்தை என்கிறாய்?'' என குறைப்பட்டுக் கொண்டாள் சரோஜினி.

''எத்தனை வயதானால் என்னம்மா? அவள் எப்போதும் எங்களுக்குக் குழந்தை தான். டேய் அருண். பாவம் உனக்காக கொண்டு வந்த பூஸ்ட் இது. நீயே குடித்து விடு'' என்றவாறு நண்பனிடம் கொடுத்து குடிக்க வைத்தான் சந்துரு. ரசித்துக் குடித்தான் அருண். ''பரவால்லம்மா உமாவுக்கு இனி தாராளமா மாப்பிள்ளை பார்த்துவிடலாம். நன்றாக பூஸ்ட் கலந்திருக்கிறாள்'' என்றான் அருண்.

''ஆமாம்! இது பெரிய வேலை தான். இதோ பாருடா! நான் இன்னும் நிறைய படிக்கணும். கொஞ்ச நாள் வேலையும் பார்க்கணும். அதுக்கு முன் எவனாவது மாப்பிள்ளை அது இதென்று பேச்சை எடுத்தால் உதை தான் விழும்'' என்றவாறு மேஜை மீதிருந்த நகைகளை நகைப்பெட்டியில் அடுக்கிக் கொண்டு எழுந்தாள் உமா. ''அப்பா! உங்களுக்கும் சேர்த்துத் தான் சொல்கிறேன்'' என்றதும் உள்ளே போய்விட சபாபதியைப் பார்த்து அனைவரும் சிரித்து விட்டனர்.

''அதுசரி! அடிக்கிற கை தான் அணைக்கும் என்பார்கள். உதைக்கிற கால்கள்?'' அருண்.

சந்தேகம் கிளப்ப மீண்டும் சிரிப்பு.

''சரி வாங்கப்பா சாப்பிடலாம்''-என சரோஜினி அழைத்தபின் தான் வயிற்றுபசி இருவருக்குமே உறைத்தது. அன்னையின் கைமணத்தில் ஒரு வார்த்தை கூட இடையே பேசாமல் வயிறு நிறைய சாப்பிட்டனர். பொழுது சாய்ந்துவிடவே தந்தையின் டிரைவரை அழைத்து அருணை கம்பெனியில் கொண்டு விட்டுவிடுமாறு பணித்துவிட்டு தன் அறைக்குத் திரும்பினான். ஆடைகளை மாற்றிவிட்டு குளியலறைக்குச் செல்ல எத்தனிக்கையில் மேஜையின் மீது அந்த புகைப்படம் கண்ணில் பட்டது. குனிந்து எடுத்தான் சந்துரு.

காலையில் வேலைக்கு புறப்படும் போது அம்மா கொண்டு வந்து, ''இதுதாண்டா இன்னிக்கு நாம பார்க்கப்போற பெண்ணோட போட்டோ. நல்லா பார்த்துக்கோ. நேர்ல போய் இத்தனை தெளிவா பார்க்க முடியாது. பொண்ணு பேர் மிதுனா பார்க்க லட்சணமா இல்லே? அவளும் உன்னை மாதிரியே நிறைய படிச்சிருக்காளாம். தரகர் சொன்னார். ஒரே பொண்ணு தானாம். உனக்கு ரொம்பப் பொருத்தமா இருப்பா பாருடா'' என்றவாறு தந்த போட்டோ அவசரத்தில் அதை வாங்கி அப்படியே போட்டுவிட்டுபோனது நினைவு வந்தது. நிதானமாய்க் கட்டிலில் அமர்ந்து புகைப்படத்தைப் பார்த்தான். கொஞ்சம் அதிக

மான ஒப்பனையோடு இருந்தாலும் நன்றாக இருந்தாள் அந்தப்பெண். சந்துரு பார்த்துக் கொண்டிருந்த போதே புகைப்படத்தில் இருந்த பெண்ணின் உருவம் கலங்கி தெளிவற்றுப்போனது. ஒரு திடுக்கிடலுடன் நன்றாக உற்றுப்பார்த்தான் சந்துரு. மெல்ல மெல்ல அந்த உருவம் ஒன்றாகச் சேர்ந்து தெளிவான போது இன்னமும் அதிகமாக அதிர்ந்துபோனான். புகைப்படத்தில் தன் கண்ணெதிரே தோன்றியது காலையில பார்த்த அந்த நிலவுப் பெண்ணின் அழகு முகம். சாலையில் பார்த்தது போல் அதே அழுத விழிகளோடு கண்களில் பயமும் தவிப்புமாய் தோன்றிய முகத்தைப் பார்த்ததும் தன்னையும் மீறி சந்துருவின் மனம் இளகியது. பாவம்! எத்தனை சின்னப் பெண். இந்தச் சின்னப் பெண்ணை என்னென்ன வார்த்தை பேசிவிட்டான் அந்த ராஸ்கல். அவனோடு எப்படித்தான் அந்தப் பெண் வாழ்வாளோ? என்ன கொடுமை இது. திருமணத்திற்கு முன்பே இப்படி பேசுகிறவன் பிறகு என்னவெல்லாம் பேசிக்கொல்வானோ? அந்தப் பெண்ணின் வாழ்வே வீணாகிவிடாதா? இதில் சிறு குழந்தை வேறு கட்டுப்பாட்டை மீறிச்சென்ற மனதை இழுத்துப்பிடித்தான் சந்துரு. இது என்ன விந்தை? பார்த்த சில நிமிடங்களில் அந்தப் பெண்ணின் முகம் இத்தனை தெளிவாய் தனக்குள் பதிந்து போய்விட்டதா? இது தவறல்லவா? யாரோ ஒருவனுக்கு மனைவியாய் அவன் குழந்தைக்கு தாயாகப்போகும் ஒரு பெண்ணின் முகம் ஏன் என் கண்முன் வருகிறது? நோ. நோ இது தவறு. இந்தத் தவறை நான் ஒருபோதும் செய்யக்கூடாது. சட்டென புகைப்படத்தை விசிறெறிந்தான்.

''ஹேய் அண்ணா! சீக்கிரம் வாயேன். நம்மகார் அட நீ கூடத் தெரிகிறாய் சீக்கிரம் வா சீக்கிரம் வா'' என உமா போட்ட கூச்சலில் ஹாலிற்கு ஓடிவந்தான் சந்துரு. ''என்ன வாலு! ஏன் இப்படிக் கத்துற!'' என்றவனை திருப்பி தொலைக்காட்சியைக் காட்டினாள். ''சுட்டெரிக்கும் வெயிலில் வாகனங்கள் நத்தையாய் நகர இப்போராட்டம் குறைந்தது மூன்று மணி நேரமாக நடந்து கொண்டிருந்தது. அதோடு...'' என்ற பின்னணி குரலோடு அந்தக்காட்சி ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. ''அட! நாங்க மாட்டின டிராபிக் ஜாம்! அதுக்குள்ள நியூஸாகிடுச்சா'' என்றவாறு தந்தையின் அருகே அமர்ந்து கொண்டான். ''இது இருபத்திநாலு மணி நேர செய்திகளை சொல்லும் சேனல் சந்துரு. சுடச்சுட நியூஸ் வந்திடும். பாரேன். எத்தனை கிலோ மீட்டர் தூரம் வண்டி நிக்குதுன்னு. ஒரு போலீஸ் கூட வரலியா'' எனக்கேட்டார் சபாபதி.

''இல்லப்பா! ஏதோ பேரணியாம் அதுக்கு காவலுக்கு போயிட்டாங்க போலிருக்கு. அட! அருண் இறங்கிப்போனது கூட தெரியுதே. ஏதோ விபத்துப்பா அதனால இன்னும் தாமதமாகிடுச்சு. அப்புறம் தான் ஒரு வழியா ரிவர்ஸ்ல எடுத்து ஒவ்வொரு சந்திலும் நுழைந்துவிடு வந்து சேர்ந்தோம் விபத்தை நேரில் பார்த்ததால அருண்தான் ரொம்ப அப்செட் ஆயிட்டான்'' என்றவனின் கண்கள் தொலைக் காட்சியில் நிலைகுத்தின.

''அய்யோ எவ்வளோ ரத்தம்..'' உமா முகத்தை மூடிக்கொள்ள பார்வையை கூர்மையாக்கினான் சந்துரு. தலையும் கால்களையும் தவிர உடல் மொத்தமும் நசுங்கியிருந்த உடலைக் கண்டதும் உடல் நடுங்க எழுந்து நின்றான்.

இது...இது அவன்தானே. ஆம். அவனேதான். அவனது உயிரற்ற கால்களின் அருகே அந்த நைந்துபோன செருப்பும், நொறுங்கிய சைக்கிளும் தெரிய சந்துருவின் கண்கள் அவசரமாய்த் தேடின.



அந்தப் பெண்ணும் குழந்தையும் என்ன ஆனார்கள்? பரிதவித்த அவன் விழிகள் ஆணியடித்தது போல் ஓரிடத்தில் நின்றன. காலையில் பசியிலோ வெயிலின் தாக்கத்தினாலோ வீறிட்டுக் கத்திக் கொண்டிருந்த அந்த சிறு குழந்தை தலைசிதறிக் கிடந்தது. ''ஓ...நோ'' வீறிட்டான் சந்துரு.. ''அப்பா! மொதல்ல டி.வி.யை ஆப்பண்ணுங்க'' என்று கத்தியவாறே அண்ணனை தோள் பற்றி அமரவைத்தாள் உமா. டி.வி.யை இருட்டாக்கிய சபாபதி பதறி எழுந்து, ''என்னடா ராஜா, பதறாதே. ஏதோ விபத்து. நடந்தது நடந்துபோச்சு. அதையே நினைச்சு வருத்தப்படாதேப்பா. இப்படி இளகின மனமா இருக்காதேப்பா. நீ ஆண்மகன், எத்தனை துணிவாய் துன்பங்களை எதிர்கொள்ள வேண்டும். இப்படி பதறலாமா?'' மகனை தேற்றினார். சமையலறையிலிருந்து வெளிவந்த சரோஜினி. ''என்ன ஆயிற்று என் பிள்ளை?'' என ஓடிவந்தாள்.

உமா விஷயத்தைச் சொல்ல, மகனை வருடியவாறே ''அருண் எதையுமே ஈஸியா எடுத்துக்கிற புள்ளை. அவனே அப்படித் தவித்தானே. நீ ஒரு சிறு துயர சம்பவத்தையும் காணப் பொறுக்க மாட்டியே. நீ ஏன்ராஜா இதையெல்லாம் பார்க்கிறாய்?'' என்றாள் பரிவோடு. 'அம்மா! ஒரு... ஒரு சின்னக் குழந்தைம்மா... தலையெல்லாம் சிதறி..'' நடுக்கமான குரலில் உமா விளக்க பார்வையால் அவளை அடக்கினார் சபாபதி.. ''சரிசரோ. அவனை ரூமிற்கு அழைத்து போய் படுக்கவை. கொஞ்சம் தூங்கி எழுந்தா சரியாகிடும்.'' என்றதும் சடாரென எழுந்தான் சந்துரு.. ''இல்லப்பா! நான் கொஞ்சம் வெளியே போகணும்.

ஒரு பத்து நிமிஷத்துல வந்துடுறேன்.'' என்றவாறு அறைக்குள் நுழைந்து துணிகளை மாற்றிக் கொண்டு கார்ச்சாவியை எடுத்துக் கொண்டு புயலென வெளியேறினான். தடுத்த அன்னையின் குரல் காற்றோடு போனது. காரை வேகமாக சீறிவிட்டு பத்தே நிமிடத்தில் விபத்து நடந்த பகுதிக்கு சென்று ஓரமாய் காரை நிறுத்திப் பூட்டினான். மாலை விளக்குகள் மஞ்சள் நிற ஒளியை பரப்பிக் கொண்டிருக்க, சாலை முழுவதும் இடைவிடாமல் வாகனங்கள் சென்று கொண்டிருந்தன. சிக்னல் விழும் நொடிக்காக தவிப்புடன் சாலையின் இருமருங்கிலும் பார்வையை செலுத்தியபடி நின்றான். சரியாக ஐந்து நிமிடத்தில் சிவப்பு விளக்கு வரிசையாய் திறக்க, பரபரவென சாலையில் இறங்கித் தேடினான்.

இங்கு.. இங்கு தானே... ரத்தம் காய்ந்து நிறம்மாறி.. வாகனங்கள் சென்றதால் நிறைய மறைந்தும் போய்விட்டிருந்தது. அந்தப்பெண் என்ன ஆகி இருப்பாள்.? இதே இடத்தில் நசுங்கிப் போயிருப்பாளா? கடவுளே! இது என்ன கொடுமை. ஏன் அவளைக் கொன்றாய்? அந்தப் பச்சைக் குழந்தை என்ன செய்தது. அதை ஏன் சிதறடித்தாய். நீ கடவுளா இல்லை கல்லா? பைத்தியம் பிடித்தவன் போல் வெறியோடு சாலையை மட்டும் கூர்ந்து தேடிக் கொண்டிருக்க பச்சை விளக்கு ஒளிர்ந்து, வாகனங்கள் அவனைக் கடந்து செல்ல ஆரம்பித்தன.

போக்குவரத்து காவலர் தேடிவந்தார். ''யோவ்! யோவ் யாருய்யா நீ, இப்படி நடுரோட்டில நின்று யாரைத் தேடிட்டு இருக்க. வண்டி போறது உன் கண்ணுக்குத் தெரியல்ல.. வாய்யா இப்படி'' என்றவாறு அவனை இழுத்து வந்து சாலையோரமாய் நிறுத்தினார்.

''ஸார்! ஈவினிங் இங்கே ஒரு ஆக்ஸிடெண்ட் நடந்ததே. ஒரு குழந்தை.. அப்பா..'' பதட்டமாய்க் கேட்டவனை இடைமறித்தார். ''ஓ. அதுவா.. அதைத்

தான் அப்பவே கிளியர் பண்ணியாச்சே. மெயின்ரோடு இது. இன்னுமா விட்டுவெப்போம். அட என்னய்யா நீ அதையா தேடிட்டு இருக்க'' என்றார் காவலர்.

''ஸார், நான் பார்க்கணுமே'' என்றான் பரிதவிப்பாய். ''அப்போ ஜிஹெச்சுக்குத்தான் போகணும். எல்லாத்தையும் அள்ளிப்போட்டுட்டு போயிட்டாங்க. ஸ்பாட்லயே அவுட். அநேகமா இந்நேரம் போஸ்ட்மார்ட்டம் முடிஞ்சு பாடியை சொந்தக்காரங்க வாங்கிட்டு போயிருப்பாங்களே. நீ என்ன அவங்களுக்கு உறவா?'' என்றார்.

இடிந்துபோய் பேச்சற்றுப் போனான் சந்துரு. இறந்தே விட்டாளா? கடவுளே என்னால தானா? நான் மட்டும் பேசாமல் காருக்குள்ளேயே இருந்திருந்தால் அவன் அவளை அமைதியாக அழைத்துச் சென்று திருமணமும் செய்திருப்பானே. நான் பேசியதைக் கேட்டுவிட்டு கோபத்தில் தானே போனான் அவன். அந்தக் கோபம் கண்ணை மறைத்ததால் தானே எதிரே வந்த லாரியைப் பாராமல் நகங்கிப்போனான். அதோடு பால்மணம் மாறாத குழந்தையும் சிதறி. ஒருபாவமும் அறியாத அந்தப் பெண்ணும். என்னால். என்னால் தானே மூன்று உயிரும் ஒரு சேரப் போய்விட்டது. நான்தான் காரணம்.

என் இரக்கருணம்தான் காரணம். வெயிலில் கைக்குழந்தையோடு தவிக்கிறாளே என்று இளகியது என் தவறுதான். வேறு யாரேனும் கேட்டார்களா? இல்லையே! அப்படியானால் அந்த சிறுகுடும்பத்தின் உயிரைப் பறிக்க எமன் தான் என் உருவில் வந்தானா? இல்லை நான்தான் எமனோ? பூவோடு பொட்டோடும் வாழவேண்டிய பெண்ணை சுடுகாட்டில் எரிய விட்டேனே. இந்த பாவத்தை எங்கு கொண்டுபோய் கரைப்பேன். கரையுமா? அத்தனை சுலபமாய் கரையக்கூடிய பாவமா இது?

தனக்குத் தானே கேள்விகேட்டுக்கொண்டு பிரமைபிடித்தாற்போல் நின்றவனை அசைத்த காவலர் அசைவின்றி போகவும், ''அட என்னப்பா நீ ஓரமாய் போப்பா. என் வேலை கெடுது.'' என்றவாறு அவனை விலக்கிவிட்டு தன் கடமையைச் செய்யச் சென்றார்.

சுற்றிலும் இருந்த விளக்குகள் அனைத்தும் அணைந்து விட்டாற்போல் இருள் சூழ்ந்து அவனை மிரட்டியது. ''என்னைக் கொன்றுவிட்டாயே'' பாவி என குடிகாரன் ஓங்கிய குரலில் கேட்டாற்போலிருந்தது. குழந்தை வீறிட்டு அழும் குரல் காதைப்பிளந்தது. ''மாமா மாமா'' என அந்தப்பெண் ஓடினாள். சுற்றுப்புற ஓசைகள் மரத்து மயான அமைதியானது. ரத்த ஆறு ஓடியது. ''நோ! நோ! நான் வேண்டுமென்று செய்யவில்லை. இப்படியாகுமென்று நினைக்கவில்லை.



''உங்கவாத்தியாருக்கு 'கமலா ஆரஞ்சு' புடிக்காதா!
வேறு என்னதான் புடிக்குமாம்?''
அவருக்கு ''கமலா டீச்சரைத்தான் புடிக்குமாம்!''

-என்.குணசீலன்,
பட்டுக் கோட்டை.



என்னை மன்னித்துவிடு பெண்ணே என்னை மன்னித்துவிடு ''கண்முன்னே அந்தப்பெண் தோன்றியது போல பிதற்றிக் கொண்டே ஓடியவன் எதிரே வந்த காரை கவனிக்க தவறினான். சந்துருவைக் கவனித்த கார் தயங்கி நிற்கும் முன் அவன் மேல் மோதியது.

பாதையின் தூரம் நானொரு பாரம்
என்னை உன் எல்லை வரை
கொண்டுசெல்வாயா - உடலுக்குள் இருக்கும்
உயிர் ஒரு சுமையா பெண்ணே
உன்னை நானும் விட்டுச் செல்வேனா..

4

தலையில் கட்டோடு இறுகிப்போய் அமர்ந்திருந்தான் சந்துரு. லேசாய் விசும்பியவாறே மாத்திரைகளைப் பிரித்து அவனிடம் தந்தாள் சரோஜினி. அதை புறங்கையால் மறுத்தான். ''என்னப்பா இது? இப்படி மருந்து மாத்திரை சாப்பிடாவிட்டால் காயம் எப்படி ஆறும். சாப்பிடுப்பா'' என்றவாறே மீண்டும் மாத்திரையும் நீரும் கொடுத்தாள். மகன் அசையவே இல்லை. அவன் மனதில் காலையில் வந்து பேசிவிட்டுப் போன ராஜேந்திரனின் குரல்தான் ஒலித்துக் கொண்டிருந்தது.

''இதோ பாருங்க சபாபதி! ஒருமுறை இல்ல ரெண்டாவது முறையும் நிச்சயம் தட்டிப்போயிடுச்சு. எம்மனைவிக்கு முதல் நாளே நீங்க வரலன்னதும் மனசு பதறிட்டா. இப்போ திரும்பவும் உங்கபிள்ளை இப்படி அடிபட்டு படுத்ததும் ரொம்ப பயந்திட்டா. அவ ரொம்ப சடங்கு சாஸ்திரமெல்லாம் பார்ப்பா. இப்போ உங்க புள்ளைக்கு பெரிசா அடி இல்லதான். இருந்தாலும் தடங்கல்ன்னு வந்தப்புறம் பலதையும் யோசிக்க வேண்டியிருக்கு. எங்களுக்கு இருப்பது ஒரே பொண்ணு. அதான் கொஞ்சநாள் கழிச்சு பொறுமையா பார்த்துக்கலாம்னு இருக்கோம். ஏன்னா ஆயுசுக்கும் வாழப்போறது அவ. கொஞ்சம் நிதானமா செய்யிறதுல ஒண்ணும் தப்பில்லையே.. அப்புறம் எம்பொண்ணு போட்டோ ஒன்னு உங்ககிட்ட இருக்குது. அதை தந்திட்டா'' என அவர் இழுக்கும்போதே உமா வேகமாகச் சென்று அந்தப்புகைப்படத்தைக் கொண்டு வந்து தந்தாள்.

''அப்போ நான் வரட்டுமா'' என எழுந்தவரிடம் ''உங்க பெண் இல்லாவிட்டால் என் அண்ணனுக்கு பெண்ணா கிடைக்காது. அவன் அழகிற்கும் படிப்பிற்கும் குணத்திற்கும் ஏற்ற பெண்ணை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் நீங்கள் போகலாம்'' என சீறியவளை சபாபதிதான் அடக்கினார்.

ராஜேந்திரன் நில்லாமல் சென்றுவிட சரோஜினிதான் தன் ஆற்றாமையைக் கொட்டித்தீர்த்தாள். உமா கோபமாய் தன் அறைக்குள் நுழைந்து கொள்ள, சபாபதி ஒரு பெருமூச்சோடு மகனின் தோளில் தட்டிவிட்டுச் சென்றார். ஆனால் சந்துருவின் மனதில் துளியும் ஏமாற்றமோ கோபமோ இல்லை. ஏன் அந்தப் பெண்ணின் முகம்கூட நினைவில்லையே. பிறகேன் ஏமாற வேண்டும்..அவன் மனம் முழுவதும் அந்த நிலவுப் பெண்தான் நிறைந்திருந்தாள் அவள் மரணத்தை அவனால் ஜீரணிக்கமுடியவில்லை. கண்களை மூடி தூங்க முடியவில்லை. உணவு விஷம்போல் இறங்குகிறது. இந்த அழகில் தனக்கு திருமணம் நின்றுவிட்டதே என்று வருத்தப்படுவானா என்ன? உண்மையைச்

சொல்வதென்றால் ஒரு பெரிய விடுதலை உணர்வுதான் ஏற்பட்டது.
அம்மாதான் மிகவும் வருந்தினாள். எப்போதும் ஏக்கப் பெருமூச்சுடன்
சோர்ந்து கிடக்கும் அன்னையைப் பார்க்கையில் மனம் வலிக்கத்தான் செய்
தது. இத்தனை காலமாய் வேலை அது இதென்று போக்கு காட்டியாகிவிட்
டது. ஒருவழியாய் இறங்கி வந்தபோது இப்படியாகி விட்டதே. தலையில்
ஏற்பட்ட காயத்தைவிட மனதில் உண்டான வலிதான் அதிகமாக இருந்தது.
எங்காவது வெளியில் நடமாடிவிட்டு வரலாம் என்றால் அம்மா கண்டிப்பு
டன் மறுத்துவிட்டாள். தன் பிள்ளை பிழைத்தது தெய்வாதீனம் காயம் ஆறும்
வரை எங்கும் வெளியில் செல்லக் கூடாது என தடைவிதித்திருந்தாள்.

அருணுடன் பேசி இளைப்பாறலாம் என்றால் அவனும் ஆடிட்டிங் டைம்
என்பதால் இரண்டு நாள்களாய் கையில் சிக்காமல் பறக்கிறான். வீட்டினுள்
அமர்ந்து இருந்தால் மூச்சு திணறுவது போல் இருக்க கட்டிலைவிட்டு இறங்
கினான் சந்துரு. சுளுக்கியிருந்த கால் வலித்தது. ''ஷ் ஸ் ஆ..'' என முனகி
னான்.

''என்னப்பா'' என பதறினாள் சரோஜினி ''அம்மா! நான் என்ன குழந்
தையா, ஏன் இப்படி பயப்படுறீங்க. லேசானவலி அவ்வளவுதான் அம்மா.
படுத்தே இருந்தா கஷ்டமா இருக்கு. ஆபீசுக்குத்தான் அனுப்ப மாட்டேங்கி
நீங்க. ஜஸ்ட் சின்னதா ஒருவாக் போயிட்டுவர்றேனே வந்து மாத்திரை சாப்பி
டுறேன். பிளீஸ்மா'' என்றான் கொஞ்சலாய்.

சரோஜினியின் மனம் கனிந்தது ''சரிப்பா! மெதுவா வீட்டைச்சுற்றி
வானில் நடந்து போ. இன்னிக்கு சித்ரா பௌர்ணமி. அம்மா கோவிலுக்கு
போயிட்டு வர்றேன். பூஜை முடிஞ்சதும்தான் வருவேன். நீ கொஞ்சநேரம்
நடந்துட்டு ரெஸ்ட் எடு. உமாகிட்ட சொல்லிட்டு போறேன். சாப்பிட்டு மாத்
திரைபோட்டுட்டு படுத்துக்கோ'' என்றாள் கரிசனையாய்.

''நான் சாப்பிட்டுக் கொள்கிறேம்மா உமாவும் ரொம்ப வருத்தமாகத் தான்
இருக்கிறாள். அவளையும் கோவிலுக்கு கூட்டிட்டு போங்கம்மா. பாவம்
வாடிப்போய் விட்டாளே. எனக்கு வலி எதுவும் இல்லை. என்னைப்பற்றி
கவலைப்படாமல் நிதானமாய் சாமி தரிசனம் முடிந்ததும் வாருங்கள்'' என
தாயையும் மறுத்த தங்கையையும் அனுப்பிவைத்தான்.

வேலைக்காரப் பெண்மணியிடம் வந்தான் ''மணியம்மை! நான் கொஞ்
சம் காலாற நடந்திட்டு வர்றேன். தேடவேண்டாம்.'' என்று விட்டு கேட்டைத்
திறந்து வெளியேறி மெல்ல நடக்கலானான். அந்தப்பகுதி முழுவதுமே பங்
களாக்கள் மட்டுமே நின்றிருந்தன. கடற்கரையை ஒட்டியவாறு வீடு அமைந்
ததால் நன்றாக இருந்தது. வீட்டிலிருந்தவாறே கடற்கரையை பார்க்க வேண்
டும். கடல் காற்றை அனுபவிக்க வேண்டும் என்று மகன் விரும்பியதால் சபா
பதி தேடி தேடி வாங்கிய இடம் இது. அப்போது இத்தனை வீடுகள் இல்லை.
எனினும் துணிந்து வீட்டையும் கட்டிவிட்டார். அற்புத அழகோடு கம்பீரமாய்
உயர்ந்து நின்ற வீட்டைப் பார்த்து பிரமித்துப்போனவர்கள் அடுத்தடுத்து போட்
டிப் போட்டுக் கொண்டு வீட்டை எழுப்ப எத்தனை வீடு வந்தபோதும் சரோ
ஜினி இல்லம் போலில்லை. அம்மாவும் விதம் விதமாய் ரோஜாக்களும் மல்
லிகையும் முல்லையும் வளர்த்து அழகிய பிருந்தாவனமாக்கியே விட்டாள்.
எத்தனை வெயில் என்றாலும் வீடு குளுமையாகத்தான் இருக்கும். கூடவே
கடல்காற்றும் இலவசமாய் சாமரம் வீசும்.

பௌர்ணமி தினம் என்றால் குடும்பமாய் மொட்டைமாடியில் அமர்ந்து
குடும்பமாய் நிலாச்சோறு சாப்பிடுவது பழக்கம். இன்று அம்மா மனமுடைந்து



போனதால் அதைப்பற்றிய பேச்சே இல்லாமல் போயிவிட்டது. இன்றில்லா
விட்டால் அடுத்த பௌர்ணமி பலவித நினைவுகளோடு கடற்கரையை அடைந்
திருந்தான். சந்துரு. அட இவ்வளவு தொலைவா வந்துவிட்டோம். நன்றாக
இருட்டிவிட்டிருந்தது. அமைதியாக நடந்து சற்று தொலைவாய்ச் சென்று ஆள்
நடமாட்டம் இல்லாத இடமாய்ப் பார்த்து வரிசையாய் நின்றிருந்த கட்டும
ரங்களின் அருகே சென்று அமர்ந்தான்.

தனிமையும் இனிமையாகத்தான் இருக்கிறது. கால்களை நீட்டி அமர்ந்து
கடலைப் பார்த்தான். வெள்ளித்தட்டாய் ஜொலித்த நிலவொளிபட்டு கடல்
அலைகள் வெள்ளி அலைகளாய் ஜொலித்தன. சிலுசிலுவென வீசிய கடற்
காற்றும் நிலவொளியும் தனிமையும் சந்துருவை சிலிர்க்க வைத்தது. மனதை
அழுத்திய பாரங்கள் எல்லாம் விலகிவிட இயற்கையோடு ஒன்றிப்போனான்.
ஏனோ அந்த நிலவுப்பெண்ணின் முகம் நினைவிற்கு வந்தது. அவள் கூட இந்த
நிலவை போல் கொள்ளை அழகுதான். ஏழ்மையிலும் அலங்காரம் இல்லாம
லும் அழகாகத் தான் இருந்தாள். ஆனால் ஏன் அத்தனை அவசரமாய் மரித்துப்
போனாள்.

என்னால்தானே.. நினைத்ததும் விழிகள் கசிந்தன. நேரம் போவது தெரி
யாமல் நிலவோடு அந்தப்பெண்ணின் முகத்தை ஒப்பிட்டு பார்த்துக் கொண்
டிருந்தபோது தனக்கு வெகு அருகில் ஏதோ அசைவு தெரிந்தது. லேசாய் தலை
யை திருப்பிப் பார்த்தான். தனியே ஒருபெண் தன்னைக் கடந்து சென்றதைப்
பார்த்ததும் வியந்தான். இந்த இரவில் தன்னைந்தனியே ஒருபெண் ஆள் அர
வமற்ற பகுதியில் கடற்கரைக்கு உலாவ வந்திருக்கிறாளே. தைரியம் தான்.
ஒருவேளை தன்னைப்போல் பௌர்ணமி அழகை ரசிக்க வந்திருப்பாளோ?
எதுவாகவும் இருக்கட்டும் என பார்வையை விலக்கியவன் அதிர்ந்தான். இந்
தப்பெண் கடலையோ நிலவையோ ரசிக்கவரவில்லை. இந்தக் குளிரில் குளிக்
கப்போகிறாள். இல்லை குளிப்பதற்கு ஏன் இந்த அவசரம் நடை ஓட்டம்.!
சந்துரு யோசித்துக் கொண்டிருக்கும்போதே அந்தப் பெண் ஆவேசமாய் கட
லில் இறங்கி உள்ளே போனாள். பௌர்ணமி அலையின் சீற்றத்தால் ஒரு
முறை அலையோடு விழுந்து எழுந்து மீண்டும் வெறியோடு உள்ளே சென்
றாள்.

சந்துருவின் மூளையில் மின்னல் வெட்டியது. இந்தப்பெண் உயிரைப்
போக்க முயற்சிக்கிறாள். ஐயோ! கண்முன் ஒரு உயிர் பிரியப்போகிறது பதறி
எழுந்தான். கால் விலுக்கென இழுத்தது. சமாளித்துக் கொண்டு உதறினான்.
காலை நிமர்த்திக் கொண்டு அந்தப்பெண்ணை நோக்கி ஓடினான். அலை ஆவே
சமாய் அடித்து வெளியே தள்ளியது. விழுந்து புரண்டு எழுந்து அந்தப் பெண்
ணைத் தேடினான். தூரமாய் தலைமட்டும் தெரிய ஒரு வெறியோடு அலை
களை எதிர்த்து முன்னேறி கப்பென அந்தப் பெண்ணைப் பற்றினான் அத்தனை
போராட்டத்திலும் கையை உதறினாள் அவள். மீண்டும் கைகளைத் துழாவி
அவளைப் பற்றிக் கொண்டு பெரிய அலைமேல் எம்பி அப்படியே கரைக்கு
வீசப்பட்டனர். மீண்டும் நீர் உள்ளிழுக்குமுன் வேகமாக எழுந்து அந்தப்
பெண்ணை கரையின் மேடான பகுதிக்கு தூக்கிவந்து படுக்க வைத்தான். திமிறி
எழுந்தாள் அவள் '' என்னை விடு. நான் சாக வேண்டும். நான் சாக வேண்
டும்'' என வெறிவந்தவள் போல் மீண்டும் அவள் ஓட, அவனும் பின்னேயே
ஓடிப்போய் அவளை இழுத்து வந்தான். ''எம்மா! உனக்கு என்ன பைத்தியமா
பிடித்திருக்கிறது. முட்டாள் மாதிரி பேசாதே. வா என்னோடு. எதுவாக இருந்
தாலும் பேசி முடிவை எடுக்கலாம்.'' என்று அலை இரைச்சலை மீறி சத்தமா

க் சொன்னான் சந்துரு.

''நீ என்ன பேசி முடிவெடுப்பது? நான் ஏற்கனவே முடிவை எடுத்து விட்டேன். நான் ஏன் உயிரோடு இருக்கவேண்டும். யாருக்காக வாழ வேண்டும். எனக்கென்று யார் இருக்கிறார்கள்? நான் சாக வேண்டும். விடு என்னை?''

அந்தப்பெண் அழுகையோடு அவன் கையை உதறிவிட சந்துருவிற்கு உடல் துடித்தது. நிலவொளியில் அந்தப்பெண்ணின் முகம் சரியாக தெளிவாக தெரியாவிட்டாலும் அந்த குரலை எங்கேயோ கேட்டதுபோல் இருந்தது. எங்கே? எங்கே? மூளையை கசக்கி யோசிக்க அதற்குள் அவள் மீண்டும் கடலுக்குள் இறங்கியிருந்தாள். தன் நினைவுகளை ஒதுக்கிவிட்டு பாய்ந்து சென்று அவளைப் பற்றி இழுத்துவந்தான்.

அவள் கோபமாய் அவனைப்பார்த்தாள். தலையில் கட்டோடு உயரமாய் நின்றவனை எங்கோ பார்த்தது போல் நினைவு? நிலவை மூடிய மேகங்களால் இருள் சூழ்ந்துவிட அவனது பிம்பம் தெளிவற்றுப்போனது. முகத்தில் இருந்த நீரை வழித்துவிட்டு கோபமாய் அவனை ஏறிட்டாள். ''யார் ஸார் நீங்க? என்னை ஏன் நிம்மதியா சாகவிடமாட்டேங்கிறீங்க. நான் சாவதால் உங்களுக்கு என்ன நஷ்டம். என் துன்பத்திற்கு ஒரே விடிவு இதுதான். என்னைத் தடுத்து உங்கள் பாவத்தைக் கட்டிக் கொள்ள வேண்டாம். என்னை விட்டுவிடுங்கள்'' என்றாள்.

அடிபட்டதைப் போல் நிமிர்ந்தான் சந்துரு. ''என்னை மன்னித்து விடும்மா. நான் செய்தது தப்புதான். இதே தப்பை இரண்டுநாள் முன்பு செய்து தான் பாவத்தை சேர்த்துக் கொண்டேன். ஒரு உயிரல்ல... மூன்று உயிர் என்னால் சிதைந்து போயிற்று. வாழவேண்டிய ஒரு பெண்ணை... ஒரு பிஞ்சு மலரை.. நான் என் அவசரத்தால் கொன்றுவிட்டேன். எது நடந்தாலும் கண்டும் காணாதது போல் இருந்திருந்தால் இப்படி ஒரு பழியே தாங்கியிருக்க வேண்டாம். சிறுவயது முதலே உயிர்கள் வதைபடுவதையும் கண்ணெதிரே ஒருவர் கஷ்டப்படுவதையும் என்னால் தாங்க முடியாது. அந்த நல்ல எண்ணத்தில்தான் சாலையில் கொதிவெயிலில் குழந்தையோடு ஒரு பெண் தவிப்பதைப் பார்த்து உதவ முன்வந்தேன். என் முட்டாள் தனத்தால் அந்தக் குடும்பமே இல்லாமல் போயிற்று. அந்த இழப்பின் தவிப்பினால் தான் கண்முன்னே நீ உயிர்விடுவதை தடுக்க வேண்டும் என்று காப்பாற்றினேன். உனக்கு என்ன துன்பமோ எனக்குத் தெரியாது. உன் மரணம் தான் உன் துன்பத்திலிருந்து விடுதலை அளிக்கும் என்றால் அதை நான் தடுக்க மாட்டேன். நான் போய்விடுகிறேன். அதன்பிறகு நீ உன் முடிவைத் தேடிக்கொள்'' என்றவாறு திரும்பி நடக்க ஆரம்பித்தான்.

வெண்ணிலாவிற்கு தலை சுற்றியது. இவர் யாரைக் குறிப்பிடுகிறார்? தன்னைப்பற்றித்தானோ.. நானும் இறந்துபோனதாக நினைத்து விட்டாரோ. அந்த எண்ணத்தில் மனமுடைந்து போய்விட்டாரோ. எப்படியும் சாகப்போகிறோம். அதற்கு முன் ஒரு நல்ல மனிதனின் மனவேதனையை நீக்கி விட்டு உயிரை மாய்த்துக் கொண்டால் என்ன? நல்ல மனிதன் தான். சாலையில் அத்தனை கூட்டத்தில் குழந்தையோடு தவிக்கையில் தன் காரில் சற்று நேரம் ஓய்வெடுக்கத் தானே சொன்னார்? வேறு ஒரு வார்த்தையோ தப்பான பார்வையோ இல்லையே... இவர் ஏன் இத்தனை வருத்தத்தை சுமந்து கஷ்டப்பட வேண்டும். சொல்லிவிடலாம். என்ற முடிவுடன் நிமிர்ந்தபோது சந்துரு மணல் திட்டில் ஏறி நடந்து கொண்டிருந்தான். வேகமாக அவன் பின்னே சென்று ''ஸார்! ஒரு நிமிஷம்'' ''தற்கொலை எண்ணம் மாறிவிட்டதா..'' என்பதுபோல் அவ



ளைப் பார்த்தான் சந்துரு. மூச்சிரைக்க அவனருகே வந்து நின்றாள்.

''ஸார்! இப்போ சொன்னீங்களே. அது திருவல்லிக்கேணி மெயின் ரோட்டில நடந்த சம்பவம் தானே'' எனக் கேட்டதும் ஆர்வமாய் நிமிர்ந்தான்.

''யெஸ்! உனக்கு தெரியுமா. அந்தப் பெண் அந்தப்பெண்'' திணறினான்.

''கவலைப்படாதீர்கள்! அந்தப் பெண் சாகவில்லை.. அதோடு அந்த ஆளும் உங்களால் சாகவில்லை. அளவுக்கு அதிகமாய் குடித்திருந்ததால்தான் சாலையில் தடுமாறி விழுந்துவிட்டான் அந்த சமயத்தில் தண்ணீர் லாரி வேகமாய் வந்ததால்... எல்லாம் முடிந்து போயிற்று. அவனது புள்ளையாய் பிறந்த ஒரே பாவத்திற்கு அந்தக் குழந்தையும்...'' அதற்கு மேல் பேச முடியால் விம்மினாள்.

தன்னுயிர் பெற்றது போல் அந்தப் பெண்ணின் தோள்பற்றி நிமிர்த்தி சற்று தூரத்தில் ஒளிர்ந்த விளக்கொளியில் நன்றாய்ப் பார்த்தான். அவள்தான். அன்று பார்த்தபோது இருந்த அதே அழுதவிழிகளோடு.. அவள்தான் உயிரோடு முழுதாய் அவனோடு நின்று பேசிக் கொண்டிருந்தாள். சந்துருவின் இதயம் படபடவென அடித்துக் கொண்டது. ''இது உண்மைதானா? கனவில்லையே. தேங்க்ஸ்.. தேங்க் யூ ஸோமச்'' அவள் கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டான். அவனது எதிர்பாராத செய்கையினால் கூச்சமாய் கைகளை உருவிக் கொண்டாள்.

''ஓ ஸாரி. பிளீஸ் உட்காருங்களேன். முழுவதும் நனைந்து விட்டீர்களே'' என்றான் கரிசனையாய் வெண்ணிலாவிற்கும் உடல் நடுங்கத்தான் செய்தது.

அவன் கைகாட்டிய திசையில் இருந்த கட்டுமரத்தில் அமர்ந்து கொண்டாள். சற்றுதள்ளி அவனும் அமர்ந்து கொண்டு'' சொல்லுங்க. நீங்க ஏன் இந்த முடிவுக்கு வந்தீங்க.. முதல்ல என்னை மன்னிச்சிடுங்க. உங்களுக்கு அமைய இருந்த வாழ்வு என்னால்தானே பறிபோயிற்று. என்னை மன்னிப்பீங்களா?'' அவன் வார்த்தையில் வலி இருந்தது.

''இல்ல.. நீங்க இவ்வளவு வருத்தப்படும் அளவிற்கு நான் ஒன்றும் சிறப்பான வாழ்வை இழக்கவில்லை. ஒரு குழந்தையை பகடைக்காயாய் வைத்து சாவை எதிர்நோக்கி போகும் ஒரு குடிகாரனோடு வாழ்வது பெரிய வாழ்க்கையா? தினம் தினம் செத்துக் கொண்டுதான் இருந்திருப்பேன். அந்தக் குழந்தையும் அப்படித்தான் துடித்துச் செத்திருக்கும். ஏதோ கடவுள் அருளால் சில நொடி வலியோடு அதன் உயிர் போயிற்று. அதற்காக வேணும் நான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். உண்மையில் நீங்கள் தெய்வம்தான்'' என்றாள் கண்கள் பனிக்க.

''என்ன சொல்றீங்க. எனக்கு எதுவும் புரியல்ல. பிளீஸ் என்ன நடந்ததுன்னு சொல்லுங்களேன். எங்கிட்ட சொல்லக் கூடாதுன்னா வேண்டாம்'' என்றான் தவிப்பாய். அவனை விசித்திரமாய்ப் பார்த்தாள். இரவுப் பொழுது

''இது தான் அவசர சிகிச்சை பிரிவு...''

''அப்ப மற்றதெல்லாம் சாவகாச சிகிச்சைப் பிரிவுகளா...?''

-ஜே.தனலட்சுமி, கோவை



ஆவலுடன் ஒருவனிடம் தனிமையாய் எப்படி பேச முடிகிறது. மனதில் ஒரு பயமோ சஞ்சலமோ தோன்றவில்லையே. ஆறுதலான இடம் போலவே தோன்றுகிறதே. இது எப்படி சாத்தியமாகும்? ஏன் சாத்தியப்படாது. இவன் உள்ளத்திலோ பார்வையிலோ துளியும் கபடு இல்லையே. அன்று மாமா என்னை இவனிடம் தள்ளியபோது கூட ஒரு தாயின் பரிவோடு ஏந்திக் கொண்டானே தவிர அந்தத் தொடுதலில் காமமோ விரசமோ இல்லையே. ஏன் இன்று கூட ஆளில்லா கடற்கரையில் தனியே வந்த என்னை இவன் என்ன வேண்டுமானாலும் செய்திருக்கலாமே. மாறாக காப்பாற்றத்தானே துடித்தான். ஆண்களில் நல்லவர்களும் இருக்கிறார்களோ? எல்லாருமே தன் தந்தையைப் போலவும் மாமனைப் போலவும் இருப்பார்கள் என்று நினைத்தது தவறோ.. தன்னைச் சுற்றி நடப்பதை மட்டும் வைத்து மற்றவர்களையும் தப்பாக நினையக் கூடாது எனபுரிந்து கொண்டாள்.

''என்கிட்ட என்னங்க தயக்கம்? உங்க பிரச்சனைகளை எங்கிட்ட சொல்லுங்க. பகிரும்போது துன்பம் பாதியாகிடும். அதோடு துன்பங்களைக் கண்டு பயந்து ஓடக்கூடாது. சமாளிக்கணும். நீங்க சொல்லுங்க. அதை எப்படி சமாளிக்கலாம்னு பார்ப்போம். நீங்க என்னை தாராளமாக நம்பலாம்.'' ஆர்வமாய்க் கேட்டவனை பார்த்தாள். உண்மைதான் தனது துன்பங்களை நின்று நிதானமாய் யாரேனும் செவிகொடுத்து கேட்டிருந்தால்.. கேட்டு இருவார்த்தை ஆறுதலாய் பேசியிருந்தால் இப்படி உயிரை மாய்த்துக் கொள்ள வந்திருக்க மாட்டேனே. இதோ.. முதன் முதலாய் தன் பாரங்களை இறக்கிவைக்க ஒரு பரிசுத்தமான இதயம் கிடைத்திருக்கிறது. சொன்னால் என்ன? ஒரு முடிவுடன் அவனைப் பார்த்து வாய்திறந்தாள் வெண்ணிலா.

''வந்து எம்பேர் வெண்ணிலா.. '' எனத் தொடங்கியதும் திடுக்கென நிமிர்ந்தான் சந்துரு.

**நேற்றைய பொழுது கண்ணோடு**
**இன்றைய பொழுது கையோடு**
**நாளைய பொழுதும் உன்னோடு**
**நிழலாய் வருவேன் நின்னோடு..**

## 5

வெண்ணிலாவா? இப்போதுதானே இவள் பெயரைக் கேட்கிறோம். ஆனால் இவளைசற்றுமுன்தானே இந்த நிலவோடு ஒப்பிட்டுப் பார்த்தோம். அதோடு நிலவுப் பெண் என்ற அடைமொழியோடு. மனதிற்குள் தோன்றிய நினைவுகளைமனதோடு பூட்டிக்கொண்டு அவள் பேச்சில் கவனத்தை செலுத்தினான் சந்துரு.

''எம்பேர் வெண்ணிலா என் அக்கா பெயர் நிறைமதி. நாங்கள் இருவரும் இரட்டையர்கள். என் அம்மா தன் குடும்பத்தை எதிர்த்து என் அப்பாவை விரும்பி காதல் திருமணம் செய்தவர். அதனால் அவர்கள் குடும்பத்தில் அம்மாவைத்தலைமுழுகி விட்டார்கள். அப்பா அம்மாவை அழைத்துக் கொண்டு தன் அக்கா வீட்டிற்கு ரெட்ஹில்ஸ்க்கு வந்தார். நாங்கள் பிறந்த போது அம்மா ரொம்பவும் நோயுற்று போனார்களாம். மூன்று வேளை சாப்பாடு கிடையாது. தினமும் காலை மாலை வீட்டுவேலை என்று அத்தை குடும்பத்திற்கும் சேர்த்தே உழைக்க வேண்டிய நிலை. அம்மா வசதியாக வாழ்ந்த பெண். சிறு வயதும் கூட. இந்த உடல் உழைப்பை தாங்காமல் உருக்குலைந்து போனார். அப்பாவோ வாட்டசாட்டமாய் சுற்றித் திரிபவர். அப்படி திரிந்துதான் அம்



மாவை தன் வசப்படுத்தினாரோ என்னவோ. தாலி கட்டிய மனைவி ஒரே வருடத்திற்குள் நோயுற்று நோஞ்சானாய் ஆனதும் வேறு பெண்ணைத் தேடிப் போய்விட்டார். நிர்க்கதியாய் நின்ற அம்மாவை கடுமையாய் வேலை வாங்குவாராம் அத்தை. நிறைமாதமாய் அம்மா நடமாடவும் தெம்பின்றி வேலைக்கும் செல்ல முடியாமல் பெற்றவர்களிடமே திரும்பி போய் மன்றாடினாராம். ஆனால் யாருமே அம்மாவை ஏற்றுக் கொள்ளவில்லை. கடைசியில் அம்மாவின் அண்ணன் மட்டும் மனமிறங்கி கொஞ்சம் நகைகளையும் பணத்தையும் பெற்றவர்களுக்கு தெரியாமல் தங்கையிடம் கொடுத்து எப்படியாவது பிழைத்துக் கொள் என்றாராம். வேறு போக்கிடம் தெரியாமல் தெரிந்த ஒரே அத்தையின் வீட்டுக்கே அம்மா திரும்பி விட்டார்களாம். பணம் நகையோடு திரும்பி வந்த அம்மாவிற்கு சிறப்பான வரவேற்பாம். நாங்கள் பிறக்கும் வரை அந்தப் பணமும் நகையும் உணவாகியிருக்கிறது. பிறந்தது இரண்டும் பெண்ணாகிவிடவே அத்தையின் கணவரான மாமாவிற்கு கடும்கோபமாம். பெண்களுக்கும் சேர்த்து உழை என்று மிரட்ட, பாவம் அம்மா உண்ணாமல் உறங்காமல் வீட்டுவேலை, கூடைபின்னுதல், பீடி சுற்றுதல் என எத்தனையோ வேலைகளைச் செய்து... சீக்கிரமே.. சீக்கிரமே நிரந்தரமாய் ஓய்வெடுத்து விட்டார்கள்..'' கண்ணீர் தெறிக்க தொண்டை அடைக்க தன் பேச்சை நிறுத்தினாள்.

அலையின் ஆர்ப்பரிப்பும் காற்றின் ஓசையும் தவிர கடுமையான அமைதி நிலவியது. என்ன சொல்லி அவளைத் தேற்றலாம் என சந்துரு நினைக்கும் போதே தொண்டையைச் செருமி தன்னை சமாளித்துக் கொண்டாள் வெண்ணிலா. ''அப்போது எங்களுக்கு பதினாறுவயது. அத்தையிடமும் மாமாவிடமும் போராடி நான் மட்டும் பள்ளிக்கு சென்றுகொண்டிருந்தேன். என்னைவிட நான்கு நிமிடம் மூத்தவளான அக்கா எனக்கும் சேர்த்தே ஒரு பிளாஸ்டிக் கம்பெனியில் உழைத்தாள். வேலை முடிந்து வந்து அம்மா வேலை செய்த வீடுகளுக்கு சென்று வேலை செய்வாள். என் அக்கா ரொம்ப அமைதியானவள். யாரிடமும் ஒரு வார்த்தை எதிர்த்து பேச மாட்டாள். படிப்பும் கிடையாது. இவை அனைத்தையும் பயன்படுத்திக் கொண்டு என் அத்தை தன் மூத்த மகன் குருசாமிக்கு அவளை மணமுடித்தார். அப்போதே என் மாமாவிற்கு முப்பத்தி ஐந்து வயது. ஒரு சில நரைமுடிகள் கூட இருந்தது. அப்போது மாமா லாரி ஓட்டிக் கொண்டிருந்தார். விடுமுறை தினம் முழுவதையும் குடித்தே கழிப்பான். ஒரே பிள்ளை என்பதால் பேசாமல் அவனை கட்டிக் கொண்டாள். பதினெட்டு வயது கூட ஆகாத சிறுபெண். மாமனோ முரடன். எப்படியோ அக்காவிற்கு பலமுறை கருச்சிதைவு ஏற்பட்டது. கடைசியில் நான்கு வருடத்திற்கு பிறகு ஜனித்தவன் தான் சண்முகசுந்தரம், என் தாத்தாவின் பெயரை சூட்டினார் அத்தை. ஆனால் குழந்தை பிறந்தபிறகு அக்கா முற்றிலும் உருக்குலைந்து போனாள். மாமனோ இருந்த வேலையை விட்டு விட்டானோ இல்லை விரட்டி விட்டார்களோ தெரியாது. சைக்கிள் ரிக்ஷா ஓட்டத் தொடங்கினான். அக்காவின் நிலை மோசமாகி விடவே தாயைப் போலவே இவளும் போய்ச் சேர்ந்துவிடுவாள் என என் அக்காவை மூலையில் போட்டுவிட்டனர்.'' பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்தாள் வெண்ணிலா.

''பள்ளிப்படிப்பை முடித்த நான் அக்காவின் வேலையை செய்து வந்தேன். ஒருமுறை அத்தையும் மாமாவும் வெளியூர் சென்றிருந்தபோது அக்காவை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். அங்குதான் எங்கள் தலையில் இடி இறங்கியது.'' என்று நிறுத்தி கேவி அழ ஆரம்பித்தாள். சந்துரு தவிப்பாய் அவளருகில் நெருங்கி அமர்ந்து தலை வருடினான். அந்த வருடலில் உடைந்து

போராக்கம் வராமல் அழுது தீர்த்தாள்.

"வெண்ணிலா பிளீஸ் உங்க மனசு இவ்ளோ கஷ்டப்பட்டா சொல்ல வேண்டாம். தயவு செய்து அழாதீங்க கஷ்டமா இருக்கு" என்றான் தொண்டை அடைக்க. நிமிர்ந்து இருகைகளாலும் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டாள். மூக்கை உறிஞ்சிக் கொண்டு ஒரு பெருமூச்சை விட்டு தன்னை சமனப் படுத்திவிட்டுத் தொடர்ந்தாள்.

ஹாஸ்பிடலில் நிறைய டெஸ்ட் எடுத்தாங்க. அப்புறம் கடைசியா அக்காவுக்கு எய்ட்ஸ் இருக்குன்னு சொல்லிட்டாங்க. அக்கா அழுது துடிச்சா. என்னை மருந்து கொடுத்து கொன்னுடுங்கன்னு கதறினா. அக்காவுக்கு எப்படி இந்த நோய் வந்திருக்கும்னு நிறைய கேள்வி கேட்டாங்க. இதுவரைக்கும் எதற்கும் ரத்தம் கூட ஏத்தினதில்ல. கடைசியா இந்த நோய் மாமா மூலமாகத்தான் வந்திருக்கும்னு தெளிவாச்சு. அப்படின்னா குழந்தைக்கும் இந்த நோய் தாக்கியிருக்கும்னு டாக்டர் சொன்னாங்க. உடனே குழந்தையையும் டெஸ்ட் பண்ணினோம். அதுக்கும் நோய் இருக்குன்னு தெரிஞ்சதுமே அக்கா நிலைகுலைஞ்சு போயிட்டா தொடர்ந்து கருச்சிதைவு. ஆகாரமில்லாம கிடந்தது. பிரசவம், ரத்தப்போக்கு அதோட இந்த பேரிடியைத் தாங்க முடியாம அவ இதயம் நின்னுப்போச்சு.

பிறகு நாளாக ஆக மாமாவின் உடல் நிலையும் மோசமாகிப் போனது. எப்படி அழைத்தும் மருத்துவமனைக்கு வரவே மாட்டார். குழந்தையும் உடல் மெலிந்து வற்றிப்போனது. அதன் உடலுக்கு என்ன செய்யுமோ சதா அழுது கொண்டே இருக்கும். நானும் என் அக்காவைப் போலவே இருப்பதால் அவள் குழந்தை என்னிடம் நன்றாக ஒட்டிக் கொண்டான். நானில்லாமல் தூங்க மாட்டான். சாப்பிட மாட்டான். இதையே காரணமாய் வைத்து மாமனுக்கு இரண்டாவதாய் என்னை மணமுடிக்கக் கேட்டாள் அத்தை.


நான் திட்டமாக மறுத்துவிட்டேன். இந்நிலையில் நான் வேலை செய்த பினாய்டிக் கம்பெனியின் முதலாளி தன் மகனுக்கு என்னை பெண் கேட்க, தாயும் மகனும் அவரை அவமானப்படுத்தி விரட்டிவிட்டனர்.

கடைசியாக குழந்தையை என்னிடம் இருந்து பிரித்து தன்னுடனே வைத்துக் கொண்டாள் அத்தை. என்னைப் பார்க்கவும் விடவில்லை. குழந்தை என்னைக் காணாமல் அழுது கரைந்து தொண்டை வற்றிப் போனது. இரண்டே நாளில் துரும்பாய்ப் போனது. அதற்கு மேல் என்னால் பொறுக்க முடியவில்லை. நோயால் சாகப்போகும் குழந்தை அழுதே செத்துவிடக் கூடாது என்று என் அக்காவிற்காக.. அவள் ஈன்ற பிள்ளைக்காக ஒரு குடிகாரனை ஒரு உயிர்கொல்லி நோயாளியை மணக்க சம்மதித்தேன். உடனே அத்தை தாமதியாமல் திருமணத்தை நடத்த முடிவு செய்தாள்.

அவர்கள் குலதெய்வம் கோவிலில் வைத்து தாலியைக் கட்ட வேண்டும் என்று முதலில் எங்களை அனுப்பினாள். நாங்கள் வந்தபோது வாகன நெரிசலில் சிக்கி வெகுநேரமாகிவிட கடும்கோபத்தில் மாமன் இருந்தபோதுதான் நீங்கள் வந்தீர்கள் என நிறுத்தினாள் வெண்ணிலா.

கோபமாய் பற்களைக் கடித்தான் சந்துரு. "பொறுக்கிநாய் குடிகார ராஸ்கல். தன் மீது இத்தனை அழுக்கை வைத்துக் கொண்டுதான் உன் மீது சேற்றை வாரியிறைத்தானாச்சே.." என்றான் வெறுப்பாய்.

விரக்தியாய் புன்னகைத்தாள் வெண்ணிலா.. "நான் அவனை திருமணம் செய்ய மறுத்ததில் உண்டான கோபம். இன்னொருவர் என்னை பெண் கேட்



டதால் ஏற்பட்ட கடுப்பு. எல்லாம் சேர்ந்து உங்களைப் பார்த்ததும் எல்லை மீறிப்போய் விட்டது. அப்படியும் குழந்தைக்காகத்தான் ஓடினேன். என் கண் முன்னே நடந்த விபத்தில் குழந்தையின் நிலையைப் பார்த்து நான் மூர்ச்சையாகிப் போனேன்.

மயக்கம் தெளிந்து நான் பார்த்தபோது கவர்ன்மென்ட் ஆஸ்பத்திரியில் நான் மட்டும் தனியே இருந்தேன். விழித்து எழுந்து அத்தை வீட்டிற்கு போனபோது என்னால்தான் தன்மகன் இறந்து போனதாகக் கூறி என்னை வீட்டிற்குள் நுழைய அனுமதிக்கவேயில்லை. இரண்டு நாள் தெருவில் கிடந்தும் அத்தையின் மனம் இரங்கவே இல்லை. அதனால்தான் என் அம்மாவும் அக்காவும் போன இடத்திற்கே போய்விடலாம். என்று இங்கு வந்தேன். இது தப்பா? இனி நான் எப்படி யாருக்காக வாழ வேண்டும். நான் எடுத்த முடிவு தப்பா? சொல்லுங்கள்.

சிறுவயதிலேயே ஒரு ஊதாரியை நம்பி ஏமாந்தது என் தாயின் தவறு. நம்பி வந்தவளை அநாதையாய் விட்டு ஓடியது என் தகப்பனின் தவறு. வழிதவறி சென்றமகள் மனம் நொந்து வயிற்றுப்பிள்ளையோடு திரும்பி வந்தபோது ஏற்றுக் கொள்ள முடியாத உறவினர்கள் மீது தவறு. ஒரு சிறுபெண்ணின் உழைப்பை அட்டையாய் உறிஞ்சி அவளைக் கொன்றது என் அத்தையின் தவறு. தலக்கு தீராத நோய் இருப்பது புரிந்ததும் வாழவேண்டிய என் அக்காவைக் கொன்றது அவள் கணவனின் தவறு.

இப்படி எல்லா தவறுகளையும் பெரியவர்கள் செய்திருக்க அதன் தண்டனையை மொத்தமாய் அனுபவித்தது நானும் அக்காவும்தான். அவளும் போன பிறகு நான் எப்படி வாழ்வேன். கண்ணாய் பார்த்துக் கொள்ள வேண்டிய குழந்தையும் கண்முன்னே உயிரைவிட்டது. எனக்கிருந்த ஒரே போக்கிடமும் இல்லாமல் போய்விட்டது.பிறகெப்படி என்னால் வாழ முடியும். எந்த தவறும் செய்யாத எனக்கு ஏன் இந்த தண்டனை?'' ஆவேசமாய் கேட்டவளைப் பார்த்து. நிதானமாய்க் கேட்டான் சந்துரு. ''ஆமாம்! உன் மீது ஒரு தவறும் இல்லை. பிறகேன் உன் உயிரை நீ மாய்த்துக் கொள்ள வேண்டும். எதற்காக கோழை போல் தற்கொலை செய்ய வேண்டும்?'' என்றான்.

உடல் அதிர அவனை நிமிர்ந்து பார்த்தாள் வெண்ணிலா. நிலவொளியில் அவனது கண்கள் வைரங்களாய் ஜொலித்து மயக்கியது. ''உன்னைத்தான் கேட்கிறேன் வெண்ணிலா. நீ ஏன் சாகவேண்டும்? உன் அக்கா இறந்து போனது கொடுமைதான். உன் அன்னையின் நிலையும் அதேதான். ஆனால் பார் இருவருமே எத்தனை துயரை அனுபவித்தும் தங்கள் உயிரை தாமாகவே போக்கிக் கொள்ளவில்லையே. அதாவது உன்னைப் போல் தற்கொலை முடிவை எடுக்கவில்லையே. நீ மட்டும் எடுத்தாய்?'' சந்துருவின் கேள்வியில் கொஞ்சம் தடுமாறினாள் வெண்ணிலா.

ஒரு அன்பான துணையை தேர்ந்தெடுத்து அருமையான பிள்ளைகளைப் பெற்று நீ சந்தோஷமாய் வாழ்வதைப் பார்த்தால் உன் அன்னையின் ஆத்மா குளிராதா? இதைப்பற்றி ஒரு கணமாவது நீ சிந்தித்தாயா?'' என்றான் சந்துரு.

விழிகள் விரிய அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் வெண்ணிலா அவன் சொல்வது அனைத்தும் சத்தியமான வார்த்தை. நான் ஏன் அதைப்பற்றி சிந்திக்கவேயில்லை.

அவளது முகத்தில் தெரிந்த தெளிவைக் கண்டதும் நிம்மதியோடு உற்சாகமும் சேர்ந்து கொள்ள, ''ம்... குட். இப்போ உன் முகத்தில் ஒரு தெளிவு



தெரியுது. நம்பிக்கை இருக்கு. இதை விட்டுடாதே. உனக்கு யாரும் இல்லைன்னு ஏன் நினைக்கிறே நான் இருக்கிறேன். என் அன்பான குடும்பம் இருக்கிறது. என் அன்னையும் தந்தையும் நிச்சயமாய் உன்னை முழுமனதோடு ஏற்றுக் கொள்வார்கள். என் தங்கை உனக்கு நல்ல தோழியாய் இருப்பாள். நெருஞ்சுமுள் காட்டில் வாழ்ந்த உனக்கு நம்வீடு இலவம்பஞ்சாய் இருக்கும். என்னை நம்பினால் என்னோடு தைரியமாக வா. நான் பார்த்துக்கொள்கிறேன்.'' என்றவாறு எழுந்து அவள் எழுவதற்காக கையை நீட்டினான் சந்துரு.

தயக்கமாய் அவனை ஏறிட்டாள் வெண்ணிலா.. நல்லவன்தான் என்றாலும் முன்பின் அறியாத ஒரு அந்நிய ஆடவனை நம்பி எப்படி இவனுடன் இவன் வீட்டிற்குச் செல்வது? அவளது தயக்கத்தை சரியாய் புரிந்து கொண்டவன், ' ஓ ஸாரி நான்யாரென்றே சொல்லவில்லை இல்லையா. என் பெயர் சந்திரபிரகாஷ் சுருக்கமா சந்துரு.. எங்கள் வீடு இப்படி கொஞ்சதூரம் போனால் வந்துவிடும். வீட்டில் அம்மா தங்கை அப்பா எல்லோரும் இருக்கிறார்கள். நான் துணிகளை வடிவமைத்து ஏற்றுமதி செய்யும் நிறுவனம் வைத்துள்ளேன். நம் கார்மெண்ட்ஸ் கே.கே. நகரில் இருக்கிறது. எஸ்.எஸ்.கார்மெண்ட்ஸ் என்று பெயர். உனக்கு தையல் தெரிந்தால் நம் கம்பெனியிலேயே வேலைக்கு சேர்ந்து கொள்ளலாம். உனக்கு விருப்பம் என்றால் படிக்கலாம்.

நான் ஏற்பாடு செய்கிறேன். என்னோடு இருக்க விருப்பம் இல்லை என்றாலும் தாராளமாகச் சொல்லலாம். உயர்தரமான மகளிர் விடுதியில் பாதுகாப்பாய் சேர்த்துவிடுகிறேன். முடிவு உன் விருப்பம்தான். ஆனால் இப்போது நேரம் நள்ளிரவைத் தாண்டிவிட்டதே. அதனால் இதற்கு மேலும் இங்கு இருப்பது சரியல்ல. வா நம் வீட்டிற்கு போகலாம். '' என்றான் மீண்டும் கைநீட்டியவாறே.

மனத்திற்குள் தன் தாயை வேண்டிக் கொண்டு நம்பிக்கையும் நன்றியுமாய் அவன் கைப்பற்றி எழுந்து அவனுடன் நடந்தபோது முகத்தில் பளீரென டார்ச் ஒளி வீசி கண்களைக் கூசச்செய்தது. ''ஏய் யாருப்பா அது? என்ன பண்ணிட்டு இருக்கீங்க இங்கே'' என்ற மிரட்டலோடு இரண்டு ரோந்து போலீசார் வர பயமாய் சந்துருவை நெருங்கி நின்றாள் வெண்ணிலா.

சற்றும் யோசியாமல் தன் விரலில் கிடந்த மோதிரத்தை கழற்றி வெண்ணிலாவின் விரலில் மாட்டிவிட்டான் சந்துரு. சில நொடிகளில் நடந்த இந்த செய்கையில் வெண்ணிலா மிரண்டு விழிக்க, அதற்குள் போலீசார் நெருங்கிவிட்டிருந்தனர். ''அட! நம்ம சபாபதியோட சன் சந்திரபிரகாஷ். என்ன ஸார் இது. இப்படி அன்டைம்ல ஒரு பெண்ணோட உங்களை நாங்க எதிர்பார்க்கலையே'' என்றார் ஒருவர்.

''ஓ சீனிவாசன் ஸார். நீங்கதப்பா நினைக்கக் கூடாது. இது என்னோட வருங்கால ஒய்ப். பேரு வெண்ணிலா. பௌர்ணமி அழகை ரசிக்கத்தான் வந்தோம்.''

அவள் கையைப்பற்றியவாறு அவன் சரளமாய் அவிழ்த்து விட்டதைமெய் மறந்து பார்த்தாள் வெண்ணிலா. அவளின் விரலில் மின்னிய நிச்சயதார்த்த மோதிரமோ? காவலர் ஒருவர் முகத்தில் திருப்தி.

அவள் புடவை முந்தானையால் கழுத்தை மூடியவாறு போர்த்தியிருந்தால் கண்ணியமாகத் தெரிந்தாள்.

''சந்திரபிரகாஷ் ஸார்! இனிமே இப்படி அன்டைம்ல இங்கே வராதீங்க சமூக விரோதிகள் கையில் சிக்கினால் என்ன ஆவது?.

வீட்டிற்குதானே. நாங்களும் அந்த வழியாகத்தான் போகிறோம். வாருங்கள் ஜீப்பில் டிராப் பண்ணிவிடுகிறோம். அதோ ஜீப் அங்குதான் நிற்கிறது'' எனக் காட்டிவிட்டு முன்னே நடக்க ஆரம்பித்தனர். காவலர்கள் இருவரும். பரவாயில்ல ஸார். நாங்க நடந்தே... ''எனத் தொடங்கியவனை அவசரமாய் இடைமறித்தார். ''நோ நோ காலம் கெட்டுக்கிடக்கிறது மிஸ்டர் சந்திரபிரகாஷ். நீங்கள் மட்டும் என்றால் பரவாயில்லை. வயதுப் பெண்ணை அழைத்துக் கொண்டு தனியே திரிவது அது பிரச்சனைகளை நாமே தேடி செல்வதற்கு சமம். எங்களுக்கு ஒண்ணும் சிரமம் இல்லை. இது எங்கள் கடமையும் கூட வாருங்கள் போகலாம்.'' என்றார் உடனிருந்தவன் வெண்ணிலாவும் அவர்களை தொடர்ந்து வந்து ஜீப்பில் ஏறினான் பத்தே நிமிடத்தில் வீடு வந்துவிட இறங்கி நன்றியுரைத்து அவர்கள் சென்றதும். ''இதுதான் நம் வீடு வா.'' என்றான் சந்துரு. பயமாய் மிரண்டவளிடம் ''ஒன்றும் பயப்படவேண்டாம். யாரும் ஒன்றும் நினைக்க மாட்டார்கள். நான் இருக்கிறேன். வா''என்றவாறு கேட்டைத் திறந்தான்.

இதமாய் சாய்ந்து இமைகள் மூடு
இதுவே வாழ்க்கை வேறேது
இறக்கும் போதும் இதுவே போதும்
இனிமேல் பிறவி வேண்டாமே!




சந்துரு நினைத்தது போல் வெண்ணிலாவை அத்தனை சுலபமாய் அவன் வீட்டார் ஏற்றுக் கொள்ளவில்லை. வீட்டின் முன்புறத் தோட்டத்தில் கூடை நாற்காலியில் அமர்ந்திருந்த சரோஜினியா கட்டும் புல்வெளியில் நடமாடிக் கொண்டிருந்த உமா வாகட்டும் சந்துருவைக் கண்டதும் ஓடிவந்து கட்டிக் கொண்டார்களே தவிர அவனுக்கு பின்னே வந்த பெண்ணைக் கண்டதும் பேச்சற்று சிலையாகிப் போனார்கள்.

கலைந்த தலையோடு நனைந்து உலர்ந்துபோன புடவையோடும். நள்ளிரவைத் தாண்டியபிறகு தன் மகனுடன் வந்து நின்ற பெண்ணை சரோஜினியால் ஜீரணிக்க முடியவில்லை. உமாவோ தன் அண்ணனைப் பற்றியிருந்த கைகளை விலக்கிக் கொண்டாள். அதற்குள் வீட்டிற்குள் இருந்து போனும் கையுமாய் வந்த சபாபதி, ''வந்திட்டியாப்பா! ஏம்ப்பா வெளியே போனாலும் போனை எடுத்திட்டு போக வேண்டாம். உன்னைக் காணாமல் உன் நண்பர்களுக்கெல்லாம் போன் செய்து அனைவரையும் தூக்கத்திலிருந்து எழுப்பிவிட்டேன். ஆமாம் அப்படி எங்கே தான் சென்றாய்?'' எனக் கேட்டுக் கொண்டே வந்தவர் அதிர்ந்து நின்றார்.

''டேய் யாருடா இந்தப் பெண்ணு? இந்த நேரத்தில் கூட்டிட்டு வந்திருக்க'' என்றார் படபடப்பாய்.

''என் உங்களுக்கு புரியவில்லையா இதற்கு விளக்கம் வேறு வேண்டுமாக்கும். அர்த்தராத்திரியில் கட்டின புடவையோடு அழைத்து வந்திருக்கிறானே. இன்னும் புரியவில்லையா உங்களுக்கு. உமா எனக்கு மாத்திரை கொடு. தலை சுற்றுகிறது.'' என்று விட்டு உள்ளே சென்றுவிட்டாள் சரோஜினி தொடர்ந்து உமாவும் உள்ளே சென்றுவிட சந்துரு பரிதாபமாய் தந்தையைப் பார்த்தான். ''அப்பா அம்மா நினைப்பது போல் எதுவும் இல்லைப்பா. பாவம் இந்தப் பெண்...'' எனத் தொடங்க [illegible] சபாபதி.



''எதுவா இருந்தாலும் பரவாயில்லப்பா. வெளியில் வைத்து பேசவேண்டாம்.'' என்று முன்னே நடந்தார்.

''பாரு வெண்ணிலா நம் நிலையை அம்மாவிடம் சொல்லும் வரை இப்படித்தான் மரியாதை கிடைக்கும். நீ கொஞ்சம் பொறுத்துக் கொள். அம்மாவை நான் சமாளித்துக் கொள்கிறேன். நீ அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்கக் கூடாது'' என்றான் சந்துரு மெல்லிய குரலில் ''சரிங்க'' என்று தலையசைத்தாள் வெண்ணிலா.

வீட்டினுள் வந்ததும் கதவைப் பூட்டினார் ''இதோ பாருப்பா! அம்மா இவ்வளவு நேரம் சாப்பிடாம இருந்தா. இதில டென்ஷனும் கூடிப்போய் பிரஷர் ஏறிப்போயிருக்கும். நான் போயி அவளை சமாதானம் செய்து கொஞ்சம் சாப்பிட வைத்து தூங்கச் செய்ய வேண்டும். அதனால் எதுவாக இருந்தாலும் நாளைக் காலை பேசலாம். நீங்களும் பசியோடு இருப்பீர்கள். டைனிங்டேபிளில் சாப்பாடு இருக்கு. சாப்பிட்டுட்டு நீ மேலே போ. இந்தப்பெண்ணை உமா அறைக்கு அடுத்த அறையில் தங்கவை. நன்றாக தூங்குங்கள். நாளை பேசலாம். நான் அம்மாவிற்கு சாப்பாடு கொண்டு போகிறேன்'' பேசிக் கொண்டே சாப்பாட்டு மேஜைக்கு வந்து தட்டை எடுத்து சாப்பாட்டை எடுத்து கூட்டு வகைகளையும் பரப்பிக் கொண்டு பிரிட்ஜை திறந்து ஒருவாட்டர்பாட்டிலையும் எடுத்துக் கொண்டு, ''நீங்க சாப்பிட்டு படுங்க'' என்றவாறு ஹாலை ஒட்டியவாறு இருந்த தங்கள் அறைக்குள் சென்று மறைந்தார். அவர் மறையும் வரை அவரது முதுகையே பார்த்துக் கொண்டிருந்த வெண்ணிலா உண்மையில் மனம் பூரித்துப்போனாள்.

எத்தனை அன்பான கணவர். எப்படிப் பார்த்தாலும் அந்த அம்மாவிற்கு வயது நாற்பதுக்கு மேல் இருக்குமே. இத்தனை ஆண்டுகள் கடந்தும் மனைவி பசியோடு இருக்கிறாள் என்று தானே உணவை எடுத்துச் செல்லும் பரிவு. இதில் துளியேனும் ஏன் தந்தைக்கு தன் இளம் மனைவி மேல் இல்லாமல் போயிற்று. இருந்திருந்தால் எங்கள் வாழ்வும் சிறப்பாய் அமைந்திருக்கும். இது தானே உண்மையான தாம்பத்தியத்தின் அடித்தளம் பாசம் அன்புதானே நிரந்தரம்.

''சாப்பிடு வெண்ணிலா.'' பரிவாய் ஒலித்த சந்துருவின் குரலில் கலைந்தாள். தட்டில் சாப்பாடு வைத்து குழம்பு ஊற்றி பொரியல் வைத்து பரிமாறியிருந்தான். அப்பனைப் போல் பிள்ளை என்பார்களே. இவனும் இவன் மனைவியைத் தங்கமாய் பார்த்துக் கொள்வான் என்று எண்ணம் ஓடியபோதே மனதை ஏதோ ஏக்கம் தாக்கியது.

''பேஷன்ட் பெரிய பணக்காரராம் டாக்டர்...''
''அதுக்கு...?''
''பட்டுத் துணியில் புண்ணுக்கு கட்டச் சொல்றார்...''
-ஜே.தனலட்சுமி, கோவை



கலங்கிய கண்களை அவனுக்குக் காட்ட மனமின்றி தயங்கியவாறு சாப்பிட ஆரம்பித்தாள். அவனும் அருகே அமர்ந்து சாப்பிட்டுவிட்டு பக்கவாட்டு அறையைத் திறந்தான். "உள்ளே கட்டில் பெட் எல்லாம் இருக்கு நிலா. பாத்ரூம் கூட இருக்கு. கடல் நீரில் விழுந்ததில் உடம்பு மண்ணாக இருக்கும். குளிப்பதென்றால் குளித்துவிட்டுபடு. உமாவிடம் இருந்து இரவு உடை வாங்கிவரவா." என்றான் சந்துரு.

"இல்லை வேண்டாம். நீங்களும் களைத்துதான் தெரிகிறீர்கள். நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள்" என்றவாறு அறையினுள் நுழைந்து கதவை சாத்தி தாளிட்டாள். சந்துரு மாடிக்குச் சென்றுவிட பக்கத்து அறையில்படுத்திருந்த உமாவிற்கு பசித்தவயிறோடு சேர்ந்து உள்ளமும் கொந்தளித்தது. ஓஹோ! இவ்வளவு நேரம் கடற்கரையில் தான் விளையாட்டு நடந்ததா? எத்தனை அழுத்தம் இந்த அண்ணனுக்கு எப்படி இவளை மனதில் நினைத்துக் கொண்டு இன்னொரு பெண்ணுடன் திருமணத்திற்கு சம்மதித்தான்? ஸோ. டிராபிக்கில் மாட்டியதால் தாமதமாகவில்லை. இவனே வேண்டுமென்றே தான் தாமதித்திருக்கிறான். திருமணம் கை நழுவிப் போனதில் ஒருதுளி கூட கலங்கவில்லையே. எதிர்பார்த்து இருந்திருப்பான். இவனைப்போயா பெரிய உத்தமன் என்று நினைத்தோம். எங்கள் அண்ணனைப் போல் யாரும் இல்லை என்று சொல்வேனே. அனைத்தும் வீண், இவனும் சராசரிக்கும் குறைவான ஒரு ஆண்தான். நெஞ்சில் மண்டிய வெறுப்பு கண்ணீராய் வெளிவந்து தலையணையை நனைத்தது. 'இனி எப்படி கல்லூரி செல்வது. மற்றவர் முகத்தில் எப்படி விழிப்பது? தோழிகளின் கேலியை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்? எத்தனை பெரிய அவமானத்தைத் தேடிதந்து விட்டான்.' மனம் குமுறியது. மனமும் உள்ளமும் சோர்ந்துவிட களைப்பில் அதிகாலையில் தான் உறங்க ஆரம்பித்தாள் உமா.

விடிந்து வெகுநேரம் ஆன பின்பே எழுந்து சரோஜினி தன் அறைக்கதவைத் திறந்து வெளியே வந்தவள் அசந்து போனாள். வீடு முழுக்க சாம்பிராணி மணம் கமழ்ந்தது. ஹாலில் இருந்த பெரிய பிள்ளையாருக்கு செவ்வந்தி மாலை சாத்தப்பட்டிருந்தது. தரை குளிர்ந்து இருந்ததில் அப்போது தான் வீட்டைக் கழுவி துடைத்து விட்டிருப்பது புரிந்தது. மெல்ல நடந்து வந்தாள். வரவேற்பிற்கென வைத்திருந்த பெரிய பித்தளை பாத்திரத்தில் அன்று தான் பூத்திருந்த வாசனை மலர்கள் மிதந்து கொண்டிருந்தன. அதுவும் நேர்த்தியாய் வரிசைப்படி அலங்கரித்திருந்தது. நடுவில் நெருக்கமாய் மூன்று சிவப்பு ரோஜாக்கள். அதைச் சுற்றி மஞ்சள் நிற சாமந்தி. அதைச் சுற்றி ஒற்றை வரிசை பன்னீர் ரோஜாக்கள். சரோஜினியின் தலைவலி, இரத்த அழுத்தம், மன சஞ்சலம் அனைத்தும் பறந்தே போயிற்று. அதற்காகத் தான் இந்த தொட்டியை சபாபதி ஏற்பாடு செய்திருந்தார்.

"சரோ! டென்ஷன் வந்தா உடனே இந்தத் தொட்டியைப் பார். இந்தப் பூக்களின் அழகும், வாசனையும் உன் மனதை லேசாக்கும். இப்போது எல்லா வீடுகளிலும் இந்த முறை வந்திருக்கிறது. வாஸ்துபடியும் இது நல்லதாம். நம்ம சந்திரசேகரன் தான் சொன்னான். அதனால் தான் வாங்கி வந்தேன். நம் வீட்டுத் தோட்டத்தில் தான் ஏராளமான பூக்கள் பூத்துக் கிடக்கிறதே" என்று இந்தப் பாத்திரத்தை வாங்கி வந்திருந்தார்.

ஆனால் காலையில் எழுந்ததும் உமாவை கல்லூரிக்கும் கணவனையும் பிள்ளையையும் வேலைக்கு அனுப்புவதற்குமே சரியாக இருக்கும். பொறு



மையாய் பூக்களை பறித்து இத்தனை நேர்த்தியாய் அலங்கரிக்க முடிவதில்லை. விடுமுறை நாட்களில் உமா அலங்கரிப்பாள் தான். மற்ற நாட்களில் சபாபதியே சில மலர்களை கொய்து மிதக்க விட்டுப் போவார். இன்றோ அவர் சற்று முன் தான் எழுந்து தமது அறையில் தரையில் அமர்ந்து யோகாசனம் செய்து கொண்டிருக்கிறார். உமாவின் அறையை எட்டிப் பார்த்தாள். அது இன்னும் திறக்கப்படவில்லையே. பிறகு யார்?

நிச்சயமாய் மணியம்மையாய் இருக்காது. நேற்று இரவே நான்கு நாள் விடுமுறை சொல்லிவிட்டு மகள் வீட்டுக்குப் போவதாக சொல்லிவிட்டுத்தான் போனாள். யோசனையாய் வாசலுக்குப் போனவள் இன்னும் வியந்தாள். வாசலை அடைத்து பெரிதாய் மாக்கோலம் இட்டு நடுநடுவே சிவப்பு நிற அடுக்குச் செம்பருத்திப் பூவை வைத்து அழகாக்கப்பட்டு இருந்தது. பிரமிப்புடன் உள்ளே திரும்பியவளின் முகம் கன்றிப்போயிற்று.

அதிகாலை எழுந்து தலைகுளித்து நெற்றிக்கு திலகமிட்டு நீண்ட சரக்கூந்தலை நுனி முடிச்சுட்டு நேற்று உடுத்தியிருந்த அதே சேலையை நன்றாக துவைத்து உலர்த்தி கட்டியிருந்தாள் வெண்ணிலா.

"எழுந்திட்டீங்களாம்மா. இன்னிக்கு வெள்ளிக் கிழமை. அதனால தான் எல்லா வேலையையும் செய்திட்டேன். இனி சமையல் மட்டும் தான் பாக்கி. என்ன செய்யணும்னு சொன்னீங்கன்னா செய்திடுவேன். இப்போ காபி கொண்டு வரட்டுமாம்மா? " எனக் கேட்டவளை வெறுக்கவோ, ஒதுக்கவோ மனமின்றி சரியென தலையசைத்தாள் சரோஜினி. விரைவாய் சமையலறைக்குள் நுழைந்து வேகத்தோடு கையில் காபி கோப்பையோடு வந்தாள். " சர்க்கரை குறைவாகத் தான் போட்டேன். போதுமா என்று பாருங்கள் அம்மா" என காபியைக் கொடுத்து விட்டு சரோஜினியின் பதிலுக்காக நின்றாள். ஒரு வாய் பருகிவிட்டு " ம் " என்றாள் ஒற்றைச் சொல்லாய்.

வெண்ணிலாவின் முகம் பூவாய் மலர்ந்தது. "ஆமாம் இதையெல்லாம் உன்னை யார் செய்யச் சொன்னது? என்ன அம்மாவிற்கு ஐஸ் வெக்கிறியா" தூக்கம் சரியில்லாமல் சிவப்பேறிய விழிகளோடு நின்ற உமா கேட்க புன்னகைத்தாள் வெண்ணிலா.

" ஆமாம் முதலாளி அம்மாவின் மனம் குளிர நடந்து கொள்வது தானே ஒரு வேலைக்காரியின் கடமை. அதைத்தான் நான் செய்கிறேன். " என்றதும் உமாவும் சரோஜினியும் மட்டுமில்ல வியர்வை துடைத்துக் கொண்டே அறையை விட்டு வெளியே வந்த சபாபதியும் அதிர்ந்து தான் போனார்.

" வே... வேலைக்காரியா? அம்மா இவள் என்ன பிதற்றுகிறாள்? " என்றாள் உமா.

" இல்லை நான் உண்மையைத் தான் சொல்கிறேன். நீங்கள் நினைப்பது போல் நான் தவறான வழியில் வரவில்லை. நேற்று தான் உங்கள் மகனை எனக்குத் தெரியும். அதுவும் தற்கொலை செய்ய கடலில் விழுந்த என்னை காப்பாற்றியபோது தான் தெரியும். யாருமில்லாத இந்த அனாதையின் உயிரைக் காப்பாற்றி இந்த வேலையையும் தந்தார். உங்கள் பிள்ளை தெய்வம் அம்மா. அவர் ஒரு தவறும் செய்யவில்லை. நீங்கள் என்னை ஏற்றுக் கொண்டால் தொடர்ந்து வேலைக்காரியாக இருக்கிறேன். வேண்டாம் என்றால் போய்விடுகிறேன். இதைச் சொல்லித் தான் அவர் என்னை அழைத்து வந்தார். " என்றதும் சரோஜினியின் முகம் புன்னகை பூத்தது.

" எனக்குத் தெரியும் அவன் என் மகனாயிற்றே. தவறு செய்வானா என்ன?

ஆமாம் நீ என்னம்மா சாகப்போனாய். அநாதை என்கிறாயே உனக்கென்று யாருமே இல்லையா? '' பரிவாய்க் கேட்டாள் சரோஜினி.

'' என் கதை ரொம்பக் கொடுமையானதம்மா. அதை இந்தக் காலை வேளையில் கேட்டு உங்கள் மனம் சங்கடப்பட வேண்டாம். பிறகு ஒருநாள் சொல்கிறேன். நேற்று இரவு யாரும் சரியாக சாப்பிட்டு இருக்க மாட்டீர்கள். என்ன சமைக்க வேண்டும் என்று சொன்னால் உடனடியாக தயார் செய்து விடுவேன் '' என்றாள் காரியமே கண்ணாக.

லேசாக சிரித்துக் கொண்டாள் சரோஜினி. '' உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறதம்மா. வெள்ளிக் கிழமை அதிகாலை எழுந்து தலைகுளித்து வீட்டை சுத்தம் செய்து பூஜையறைக்கு பூப்போட்டு அற்புதமாய் சுத்தம் செய்திருக்கிறாய். வீட்டையே இப்படிச் செய்தவள் சமையலும் நன்றாகத்தான் செய்வாய் என்று நினைக்கிறேன். எது வேண்டுமானாலும் செய்யம்மா. என் பிள்ளைகள் எப்போதுமே இது தான் வேண்டும் என்று கேட்க மாட்டார்கள். எது சமைத்தாலும் சாப்பிடுவார்கள். நீ வேலையை தொடங்கு. நானும் வருகிறேன் '' என காபியைக் குடிக்க ஆரம்பித்தாள். '' நீங்க காபி சாப்பிட்டுட்டு குளிங்கம்மா. குளிச்சிட்டு பூஜை பண்ணுங்க. நான் அதற்குள் சமைத்து விடுகிறேன். ஐயாவுக்கு காபியா டீயா? '' என்றாள் வெண்ணிலா.

'' நான் காபி டீ சாப்பிடுவதில்லையம்மா. நீ உன் வேலையை கவனி. '' என்ற சபாபதி மூளைக்குள் எதுவோ நிரடியது. இந்தப் பெண்ணை எங்கோ பார்த்திருக்கிறோமே எங்கே? இந்த கூர்மூக்கும் கண்களும் தனக்கு வெகு பரிச்சயமானதைப் போல் தோன்றியது. யோசனையாய் அவளையே பார்க்க வெண்ணிலா, உமாவை நோக்கி '' உங்களுக்கு என்ன கொண்டு வரட்டும்? '' என்றாள். அவளை முறைத்து விட்டு பதிலேதும் சொல்லாமல் தன் அறைக்குள் நுழைந்து கொண்டாள் உமா.

நெய்யில் முந்திரி வறுபடும் மணம் நாசியை நெருட சட்டென கண் விழித்தான் சந்துரு. எழுந்ததும் நேற்றைய இரவுச் சம்பவம் நினைவு வர '' ஐயோ! வெண்ணிலா என்ன ஆனாள்? அம்மா எதுவும் சொல்லியிருப்பார்களோ? '' என பதட்டமாய் எழுந்து குளியல் அறைக்குள் நுழைந்து பல்லை துலக்கி அவசரமாய் குளித்து உடை மாற்றி கீழே இறங்கி வரும்போது சரோஜினி அனைவருக்கும் கற்பூரஜோதியைக் காட்டிக் கொண்டிருந்தாள். அனைவரும் கண்களில் ஒற்றிக் கொள்ள தானும் சென்று கண்களில் ஒற்றிக் கொண்டான்.

'' ஜோசியரே! என்னோட கஷ்டம் எல்லாம் எப்பத்தீரும்னு சொல்லுங்க! ''

'' கை ரேகையை வச்சு பலன் சொல்லட்டா? அல்லது உங்க கன்னத்திலே மனைவி அறைஞ்ச தடயத்தை வச்சு சொல்லட்டா? ''

-அ. ராஜப்பன்,
கருமத்தம்பட்டி





'' எழுந்திட்டியா ராஜா? தலைக்காயம் வலி எப்படிப்பா இருக்கு? '' எனக் கேட்ட பிறகு தான் காயத்தின் நினைவே வந்தது. '' அது சரியாச்சும்மா... '' என்றவன் பார்வையைச் சுழற்றினான். மகனின் மனமறிந்து '' வெண்ணிலா நீயும் வந்து சாமி கும்பிட்டுக்கோம்மா '' என உள்நோக்கிக் குரல் கொடுத்தாள்.

'' இதோ வர்றேம்மா. '' என்றவாறு வெண்ணிலா ஓடி வர சந்துருவிற்கு தன் கண்களையே நம்பமுடியவில்லை. '' எப்படி? என்ன மாயம் இது அம்மாவா பேசுவது? '' புரியாமல் விழித்த மகனை கன்னம் வருடினாள் சரோஜினி.

'' என்னடா பார்க்கிற. வெண்ணிலா எல்லாம் சொன்னாள். எனக்கு அவளை ரொம்ப பிடித்திருக்கிறது. இனி அவள் நம்மோடு இருக்கட்டும். '' என்றதும் மனம் துள்ளியது. ஆவலாய் வெண்ணிலாவைப் பார்க்க '' ஆமாம் சார். எனக்கும் இந்த வேலை பிடித்திருக்கிறது. இப்படியே இருந்து விடுகிறேன். வந்து ரொம்ப நன்றி சார். '' என்றாள்.

'' வேலையா? '' என சற்றே குழம்பியவன் சரி எது எப்படியோ அவளை தன் வீட்டார் ஏற்றுக் கொண்டதே போதும் என்ற நிறைவுடனும் இனி அவள் இங்கே தான் இருக்கப் போகிறாள் என்ற உற்சாகமும் சேர '' அம்மா பசிக்குது. நான் இன்னிக்கு கண்டிப்பா கம்பெனிக்குப் போகணும். சாப்பிட என்ன இருக்கு? '' என்றான் தாயிடம்.

'' எல்லோருக்கும் பசி தான். எல்லாம் ரெடியாம்மா? '' எனக் கேட்டதும் '' எல்லாம் ரெடிம்மா. எல்லாரும் வாங்க. '' என்றாள் வெண்ணிலா.

மூச்சை இழுத்து வாசனை பிடித்தவாறே '' அப்படி என்ன சாப்பாடு? வாசனையே பசியைத் தூண்டுகிறதே '' என்றவாறு சாப்பாடு மேஜை முன் அமர்ந்தான். மற்றவர்களும் ஆவலாய் அமர உமா மட்டும் இன்னும் கோபம் தணியாமல் யாரிடமும் பேசாமல் அமர்ந்திருந்தாள். சூடாக பரிமாறப்பட்ட மிளகு பொங்கலும் தேங்காய்ச் சட்னியும் அனைவருக்கும் அமிர்தமாகவே தோன்றியது. உப்பியிருந்த மெதுவடையையும் சட்னியில் தோய்த்து ரசித்து உண்ட மகனைப் பார்த்து மனம் குளிர்ந்தாள் அன்னை. உமா அமைதியாகவே சாப்பிட்டாலும் பசித்த வயிற்றுக்கு மேலும் கொண்டா எனக்கேட்டது. கேட்க வெட்கப்பட்டு அமைதியாக கொறித்துக் கொண்டிருக்க அவளது தட்டில் கூடுதலாய் இரண்டு கரண்டி பொங்கலை வைத்து சட்னியை ஊற்றினாள் வெண்ணிலா.

'' போதும் போதும் உன் விருப்பத்திற்கு நெய்யை தண்ணீராய் ஊற்றியிருக்கிறாய். இப்படி சாப்பிட்டால் கொழுப்பு சேர்ந்து உடம்பு உப்பி விடும் உன் வடையைப் போல். '' என்றாள் வெடுக்கென.

'' நெய் சேர்த்துக் கொள்வதில் தப்பில்லை. ஆனால் அளவுக்கு அதிகமாகத் தான் சேர்க்கக் கூடாது. அதோடு உணவில் அடிக்கடி நெய் சேர்த்துக் கொண்டால் உடல் மினுமினுப்பு கூடுமாம். இதற்கு முன் வேலை செய்த வீட்டில் சொன்னார்கள் '' என்றாள் வெண்ணிலா.

'' எங்களுக்கு இந்த மினுமினுப்பு போதும். '' என்ற உமாவை கண்டித்தாள் சரோஜினி. '' என்ன உமா இது புதுப்பழக்கம்? ஏன் இப்படி எறிந்து பேசுகிறாய்? உன்னை விட வயதில் மூத்தவள். மரியாதையாய்ப் பேசு. '' என்றதும், விசுக்கென நிமிர்ந்தாள். '' மரியாதையா? இவளுக்கா? இருவருமாய் சேர்ந்து எனக்கு பெரிய மரியாதையை தேடித் தந்திருக்கிறாங்களே. இவர்களால் தான் நான் இன்று காலே ஜுக்கே போகவில்லை. எனக்கு அவமானமாக

இருக்கு. இவன் என்னை என் நம்பிக்கையை பாழாக்கி விட்டான். ஐ ஹேட் ஹிம் '' என்றாள் வெறுப்பாய். '' உமா '' அதட்டினார் சபாபதி.

'' பெஸ் டாடி. ஐ ஹேட் ஹிம். இவள் ஏதோ திட்டத்துடன் தான் நம் வீட்டிற்கு வந்திருக்கிறாள். வேலைக்கு நள்ளிரவில் ஒரு பெண்ணை அழைத்து வருவானா? உங்கள் மகன். இருவருமாய் சேர்ந்து உங்களை முட்டாள் ஆக்குறொர்கள் அப்பா. நம்பாதீர்கள். எனக்கு இவர்களைப் பார்க்கவே பிடிக்கவில்லை. '' என கோபமாய் எழுந்தவளை கைப்பற்றி நிறுத்தினார்.

'' என்ன கோபம் வந்தாலும் சரி கஷ்டம் வந்தாலும் சரி பாதிச் சாப்பாட்டில் எழக்கூடாது. உட்கார் உட்கார் '' அழுத்தமாய் அவளை அமர வைத்தார். அவமானத்தாலும், கோபத்தாலும் முகம் சிவக்க அமர்ந்த உமாவிற்கு உணவு இறங்க மறுத்தது. தங்கையின் முகமும் மூக்கும் விடைப்பதையும் பார்த்து

'' என்னடா உமாக்குட்டி. ஏன் இத்தனை கோபம் உனக்கு தெரியாம அண்ணன் எதுவும் செய்திருக்கேனா? ப்ளீஸ்டா நம்பும்மா. சத்தியமாய் இந்த பெண்ணைக் காப்பாற்றித்தான் அழைத்து வந்தேன் என்றான். '' தங்கையின் தலைவருடி.

'' யாரும் எங்கிட்ட பேச வேண்டாம். நான் யாருடனும் பேச தயாராயில்லை. நிச்சயம் வரை சென்ற திருமணம் நின்றபோது கூட அதைப்பற்றி துளியும் வருந்தாதபோதே எனக்கு சந்தேகம் தான். நேற்று இரவு அது உறுதியாகிவிட்டது. '' நிமிராமலேயே உமா பதில் சொல்ல வெண்ணிலா கேள்வியாய் சந்துருவை நோக்கினாள்.

'' நானா திருமணத்தை நிறுத்தச் சொன்னேன் அந்த மூட நம்பிக்கை மூடர்களாகத் தானே விலகினர். இதில் என் தவறு என்ன? நீ நினைப்பது போல் என் மனதில் இந்தப் பெண் இருந்தால் அதை தைரியமாய் வீட்டில் பேசி திருமணம் செய்திருப்பேனே தவிர திருட்டுத்தனமாய் அதுவும் நம் வீட்டிற்கே அழைத்து வருவேனா? இல்லை இவளை மனதில் வைத்துக் கொண்டு வேறு ஒரு பெண்ணை மணக்க சம்மதிப்பேனா? '' எனக்கேட்ட சந்துருவிற்கு பதிலளிக்க முடியாமல் திணறினாள் உமா. என்றாலும் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை. அவஸ்தையாய் திணறிக் கொண்டிருந்த வேளையில் தான் அது உமாவின் கண்களில் பட்டது. உடனே முகம் கோபத்தில் செந்தீயாய் மாற வெண்ணிலாவின் விரல்களை உற்றுப் பார்த்தாள். அண்ணனுக்கு சட்னி ஊற்றிய அவளது வலது கை மோதிர விரலில் ஒய்யாரமாய் வீற்றிருந்தது பச்சை நிறத்தில் ஒற்றைக் கல் பதித்த அந்த விலை உயர்ந்த மோதிரம். நேற்று வரை எந்த நேரமும் அவன் கழற்றாத மோதிரம்.

பாலைப் போல கள்ளும் கூட
வெண்மையானது பருகிடாமல்
விளங்கிடாது உண்மையானது
நீயும் இங்கு காணக் கூடும் ஓர் தினம்
இந்தப் பால் மனம்...

## 7

'' ஏய் வெயிட் கையைக் காட்டு '' என்ற உமாவின் உரத்த குரலில் சட்டென கையைப் பார்த்த வெண்ணிலா அதிர்ந்து போனாள். 'எப்படி திருப்ப மறந்து போனேன்? ஐயோ சும்மாவே குதிப்பவள் இதற்கு என்ன சொல்லப் போகிறாளோ? துடிக்கும் இதயத்துடன் நிமிர்ந்து சந்துருவைப் பார்க்க



அவனும் தடுமாறிக் கொண்டிருப்பது புரிந்தது.

'' என்ன அவனைப் பார்க்கிறே? என்ன சொல்லி ஏமாற்றலாம் என்று கேட்கிறாயோ? பாருங்கள் அப்பா! நான் நினைத்தது சரியாகத் தான் இருக்கிறது. மூன்று வருடங்களுக்கு முன் நான் இவனுக்காக இவன் பிறந்த நாளின் போது வாங்கி பரிசளித்த மோதிரம் கையை விட்டு கழற்றக் கூடாது என்று நான் அவனுக்கு அளித்த மோதிரம். இதுவரை அவனும் கழற்றியதே இல்லை! இன்று என் அன்பு பரிசு இவள் கை விரலில். இது எப்படி என்று கேட்டு விடாதீர்கள். அவன் கையில் மோதிரம் இல்லை அது இவள் விரலில். நானே டிசைன் செய்து ஆர்டர் செய்யச் சொல்லி வாங்கியது. இது எப்படி இவள் விரலுக்கு மாறியது என்று கேளுங்கள் அப்பா. ஒருவேளை வேலைக்காரி வேலைக்கு சேரும் முன்பே அட்வான்ஸ் கேட்டாளோ? '' என்றாள் உமா வெறுப்பாய்.

மற்றவர்கள் பேச்சற்றுப் போக சந்துரு மெல்லிய குரலில் நேற்று நடந்தைக் கூற சிலிர்த்துக் கொண்டு எழுந்தாள் உமா. '' யாரேனும் காதில் பூ வைத்துக் கொண்டிருப்பார்கள். அவர்களிடம் போய் இந்தக் கதையைச் சொல்லு. என்னிடம் வேண்டாம். யூ ப்ளடி சீட். நீ என்னை ஏமாற்றுகிறாய். இதை நம்ப நான் ஒன்னும் முட்டாள் இல்லை. ஐ ஹேட் யூ ப்ளடி ராஸ்கல் '' எச்சில் கையை உதறியவாறு எழுந்து தன் அறைக்குள் ஓடி கதவை அடைத்துச் சாத்தினாள்.

வெண்ணிலாவின் கண்கள் கலங்கியது. '' அம்மா உங்கள் பிள்ளை சொன்னது தான் உண்மையில் நடந்தது. இது இறந்த என் அம்மா மீது சத்தியம். என்னை நம்புங்கள் அம்மா. '' என்றாள்.

'' அடி அசட்டுப் பெண்ணே! இதற்கெல்லாமா சத்தியம் செய்வார்கள். எனக்கு என் மகன் மீது நம்பிக்கை உண்டு. என் மகன் பொய் சொல்ல மாட்டான். எனக்கு வருத்தமெல்லாம் இந்த உமா குட்டி மீது தான். அவள் எப்பொழுதுமே யாரையுமே இப்படி பேசமாட்டாள். கோபப்படவும் மாட்டாள். உன் மீது ஏன் அவளுக்கு இத்தனை வெறுப்பு? அதை விட அவள் அண்ணன் முகத்தை பார்க்கவே மாட்டேங்கிறாளே. உனக்குத் தெரியுமா? அவளுக்கு அண்ணன் என்றால் உயிர். அவனை ஒரு நாள் கூட பாராமல் இருக்க முடியாது என்று அவள் இதுவரை பள்ளியில் கல்லூரியில் சுற்றுலா போனது கூட இல்லை. இவனையும் அனுப்ப அனுமதிக்க மாட்டாள். இருவருக்கும் ஒன்பது வயது இடைவெளி என்பதால் இவனும் அவளை குழந்தையாகத் தான் நினைத்துக் கொஞ்சுவான். அப்படியிருக்கையில் எப்படி எவ்வளவு வெறுப்பு ஏற்பட்டது? '' என்றாள் சரோஜினி சற்றே வருத்தமாய்.

'' உனக்கு புரியவில்லையா சரோ. உமாவிற்கு அவள் அண்ணன் தான் கண்ணியமான உத்தமமான ஆண். பிற பெண்களை ஆசை கண்கொண்டு பாராத வழியாத கம்பீரமான ஆண் மகன். என் அண்ணனைப் போல் யாரும் கிடையாது என்று நம்மிடமே வாக்குவாதம் செய்வாளே. இவன் திடீரென்று சொல்லாமல் கொள்ளாமல் அதுவும் நள்ளிரவில் அந்தக் கோலத்தில் வந்து நின்றானே. பார்த்த உடன் நம் மனமே தவறாகத் தானே நினைத்தது? நாம் பெரியவர்கள் புரிந்து கொண்டோம். இப்போது அவள் குழந்தை தானே. மனமுடைந்து போய்விட்டாள். அவளை சும்மா திட்டாதே. விரைவில் வருந்துவாள். அமைதியாக விட்டு விடு. பொறுமையாய் அவள் மனம் மாறட்டும். கண்டித்தால் கோபமும் வெறுப்பும் இன்னும் அதிகரிக்குமே தவிர குறையாது. தானாக மாறிவிடுவாள். நம் பெண் தங்கம். ஏதோ மனம் நொந்து பேசுகிறாள்.

[illegible]

மற்றபடி வஞ்சகமோ சூழ்ச்சியோ கிடையாதே. அம்மா வெண்ணிலா சிறு பெண் அறியாமல் பேசியதை மனதில் வைத்துக் கொள்ளாதே '' என்றார் சபாபதி கை கழுவியவாறே. சந்துருவின் கண்களும் கலங்கியிருந்தது.

'' இல்ல சார் உண்மையில் உங்க பெண்ணைக் கண்டு நான் பிரமித்துப் போனேன். இந்த சின்ன வயதில் எத்தனை துணிவு. புத்திக்கூர்மை, யாருக்கும் அசாத்திய தைரியம். இதில் ஒன்றேனும் என் தாய்க்கு இருந்திருந்தால் இன்று என் நிலை இப்படி இருந்திருக்காது. உங்கள் பெண்ணின் கோபத்திலும் நியாயம் இருக்கிறதே '' என்றதும் அறைக்குள் நடமாடிக் கொண்டிருந்த உமா நின்றாள். '' ம்க்கும் ரொம்ப கரிசனை தான். '' இடித்துக் கொண்டாள்.

'' அம்மா இதை நான் நேற்றே கழற்றியிருக்க வேண்டும். எப்படியோ மறந்து விட்டது '' என்றவாறு மோதிரத்தை கழற்ற முனைந்தாள். '' வேண்டாம்மா. கழற்ற வேண்டாம். இன்று வெள்ளிக் கிழமை. பெண்கள் உடம்பிலிருந்த தங்கத்தை கழற்றக் கூடாது. நாளை கழற்றி உமாவிடமே கொடுத்து விடு. அவள் தன் அண்ணனுக்கு போட்டு விடட்டும். அப்படியாவது கோபம் குறையுமா என்று பார்ப்போம். '' என்றவாறு எழுந்து சென்றாள் சரோஜினி.

'' சாரி வெண்ணிலா '' என்றான் சந்துரு நிமிராமலே.

'' எதற்கு சாரி? நான் தான் உங்களிடமும், உங்கள் தங்கையிடமும் மன்னிப்பு கேட்க வேண்டும். நீங்கள் சாப்பிட்டு விட்டு ஆபீசிற்கு கிளம்புங்கள். உங்கள் தங்கையை நான் சமாதானம் செய்து உங்களிடம் பேசச் சொல்கிறேன். தைரியமாக கிளம்பிச் செல்லுங்கள். '' என்றதும் சந்தோஷமாய் கண்களில் நீர் மின்ன, '' நீ சொன்னால் கேட்பாளா? என்னுடன் மீண்டும் பேசுவாளா என் தங்கை? '' எனக் கேட்டான் சந்துரு.

மனம் உருகிப்போனாள் வெண்ணிலா. எத்தனை அன்பு இவர் தங்கை மீது. அன்பு அதிகமானதால் தானே இந்த கண்ணீர் வருகிறது. இவர் முகத்தில் சிரிப்பைக் காண்பதற்கேனும் உமா எப்படி அவமதித்தாலும் அவளிடம் பேசியே ஆக வேண்டும் என்ற உறுதியான முடிவுடன் '' நிச்சயமாய்! நான் பேச வைக்கிறேன் '' '' என்றாள் வெண்ணிலா.

'' என்டா இவ்வளவு நடந்திருக்கு. எங்கிட்ட எதையுமே சொல்லணும்னு தோணலையா உனக்கு? '' கோபமாய் கேட்டான் அருண்.

'' இல்லடா நான் ட்ரை பண்ணும் போதெல்லாம் நீ பிஸியாக இருந்தாய். அதோடு ஆடிட்டிங் டைம் என்றாயே. அதனால் தான் நேரில் வரமுடியவில்லை. இன்று தானே நீயும் வந்தாய். எல்லாவற்றையும் தான் சொல்லி விட்டேனே. நீயே சொல். நான் என்ன செய்யட்டும்? இரண்டு நாட்களாய் உமா என்னுடன் பேசவே இல்லை. என் முகத்தைக் கூட பார்ப்பதில்லை. என்னால் முடியவில்லையப்பா. அதனால் வெண்ணிலாவையும் வீட்டை விட்டு அனுப்ப முடியாதே. பாவம் அவள். சாகப்போனவளை அழைத்து வந்து விட்டு மீண்டும் தெருவில் விடுவதா? அது எத்தனை பெரிய பாவம்? அதை எப்படி என்னால் செய்ய முடியும்? சொல்லுடா. நான் என்ன செய்யட்டும்? '' என்றான் சந்துரு தவிப்பாய்.

ஒரு நிமிடம் கண்களை மூடி யோசித்தான் அருண். சட்டென கண்விழித்து '' நீ ஒன்றும் கவலைப்படாதே சந்துரு. யாரையும் வெளியே அனுப்ப வேண்டாம். உன் பெற்றோர்கள் ஏற்றுக் கொண்டது தான் பெரிய விசயம். இந்த வாலு கோபத்தை நான் பார்த்துக் கொள்கிறேன். நீ எப்போதும் போல் இரு. கூடுமானவரை பகல் முழுவதும் ஆபீசில் இருந்து விடு. இரவில் அமைதி



யாய் சாப்பிட்டு விட்டு படுத்து விடு. மௌனம் தான் சிறந்த மருந்து. உன் மௌனம் தான் உன் தங்கையின் கோபத்தைக் குறைக்கும். என்ன தான் கோபம் இருந்தாலும் உன் முகம் வாடினால் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டாள். எல்லாம் சரியாகிவிடும். எதற்கும் நான் போய் பேசிப் பார்க்கிறேன். முதலில் அவளைக் கல்லூரிக்கு அனுப்புவோம். பிறகு கோபத்தைக் குறைக்கலாம். நீ வேலையைப் பார். வரட்டுமா? '' என புறப்பட்ட நண்பனைக் கட்டிக் கொண்டான் சந்துரு.

'' தேங்க்ஸ்டா. உன்னிடம் பேசியதில் பாதி பாரம் நீங்கியது போலாயிற்று. சீக்கிரம் போ. உமா வீட்டில் தான் இருக்கிறாள். '' என அவசரப்படுத்தினான்.

'' சிங்கத்தின் வாயில் என்னை நுழைக்க உனக்கு இத்தனை அவசரமா? சரி சரி சிங்கத்தை அதன் குகைக்கே சென்று சந்திக்கிறேன். நான் முழுதாய் திரும்பவேண்டும் என்று கடவுளை வேண்டிக் கொள் '' என்றவாறு புறப்பட்டான்.

கையில் கிடைத்த அருணை உமா சும்மா விட்டு விடவில்லை. சந்துருவின் மேலுள்ள கோபம் முழுவதையும் சேர்த்து திட்டித் தீர்த்தாள். ஒரு வார்த்தையும் திருப்பிப் பேசாமல் கன்னத்தில் கை வைத்துக் கொண்டிருந்த அனைத்தையும் அமைதியாய் பெற்றுக் கொண்டான் அருண். நடுவில் ஜூஸுடன் வந்த வெண்ணிலாவை வேண்டாம் என்று பார்வையால் மறுத்து அனுப்பினான்.

ஒருவழியாக திட்டி வாய் வலித்தபோது தான் அருண் பாவமாய் அமர்ந்து கொண்டிருந்தது தெரிய '' செய்வதையெல்லாம் செய்து விட்டு இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பது போல் உட்கார்ந்திருந்தால் எப்படி? ஏதாவது பேசு. கூட்டுக்கள்ளர்தானே நீங்கள் இருவரும். கடைசி வரை வாயைத் திறக்காமலே அவனும் சாதித்தான். நீயும் அப்படியே இருக்கலாம் என்று நினைத்தாயா? ஒழுங்கா வாயைத் திறந்து பேசு. இந்தக் கூத்து எவ்ளோ நாளா நடக்குது? சொல்லுடா. சொல்ல மாட்டே... ஓ உன் பிரண்டை எப்படி நீ காட்டிக் கொடுப்பே. சரியான கல்லுளிமங்கன் ஆயிற்றே நீ. நீ எப்படிச் சொல்வாய்? கடைசியில் நீயும் என்னை ஏமாற்றிவிட்டாய். உங்களைப் போய் உத்தமர்கள் என நினைத்தேனே. மானம் மரியாதை எல்லாம் போயிற்று. '' கோபம் குறைந்து அழுகையாய் மாறியதும் அருண் வாய்திறந்தான்.

'' கண்டுபிடிச்சிட்டேன் உமா. நான் கண்டுபிடிச்சிட்டேன். '' எனக் கத்தினான் அருண். '' என்ன? என்ன கண்டுபிடித்தாய்? ப்ளீஸ் சீக்கிரமாய் சொல்லேன். '' ஆவலாய் அவனருகே வந்து அவன் முகத்தையே பார்த்தாள் உமா.

''முப்பது பவுன் போடறேன் னுட்டு பெண் வீட்டார் பத்துப் பவுன் தான் போட்டாங்க...?''

''அப்புறம்...?''

''தாலியில ஒரு முடிச்சிதான் போட்டேன்''

-ஜே.தனலட்சுமி, கோவை.



" ஆமா உமா இந்த மாமியார்-மருமகள் உறவில் மட்டும் ஏன் எப்போதுமே சண்டை சச்சரவு வெடிக்கிறது என்று எனக்கு ரொம்ப நாளாய் சந்தேகம். இன்று தான் அதற்கான விடையை உன் மூலம் கண்டுகொண்டேன். " என்றான் அருண் முகத்தை சீரியசாய் வைத்துக் கொண்டு.

" டேய் என் கோபம் புரியாமல் இப்படி ஜோக்கத்தனமாய் நீ பேசினே கொன்றே விடுவேன் உன்னை " என்றவாறு மேஜை மீதிருந்த கண்ணாடி பேப்பர் வெயிட்டை எடுத்து அவன் தலைக்கு குறிவைத்தாள் உமா. " ஐயோ சத்யம் உமா நான் சொல்வது உண்மை தான். அவசரப்பட்டு என் மண்டையை உடைத்து விடாதே. " போலியாய் பதறினான் அருண். ஓங்கிய கை அப்படியே நின்றுவிட " எது? எது சத்யம்? என்ன உண்மை " என்றாள் கோபமாகவே.

" முதலில் இந்த கண்ணாடி கல்லை கீழே வையம்மா. பயமா இருக்கிறது. இனிமேல் உன்னைப் பார்க்க வரும்போது விலை உயர்ந்த ஐ.எஸ்.ஐ. முத்திரை போட்ட ஹெல்மெட் தான் வேண்டும். " என்றவாறு அவளது கைபற்றி பேப்பர் வெயிட்டை வாங்கி மேஜை மீது வைத்து விட்டு அவளைத் தன் அருகில் அமர வைத்துக் கொண்டான்.

" ஆமாம் அதென்ன ஐ.எஸ்.ஐ. ஹெல்மெட்? " எனக் கேட்டவளைப் பார்த்து சிரித்தான். " ஆமாம் சாதாரண ஹெல்மெட் உன் கோபத்தை தாங்குமா என்ன? அதுவும் உடைந்து என் மண்டையையும் உடைத்து விடும். விலை உயர்ந்த ஐ.எஸ்.ஐ. தரமானது என்றால் நீ அடிக்கும் அடியில் நெளிந்து போனாலும் என் தலை தப்புமே. " சிரிக்காமலே அருண் சொல்ல உமாவின் முகம் லேசாய் முறுவலித்தது.

" சரி பிழைச்சுப்போ. இப்போ சொல்றேன் கேளு உமா! இந்த மாமியார், மருமக சண்டை ஏன் வருதுன்னா பெத்து வளர்த்த தாய் தன் மகனை நேற்று வந்த ஒருத்தி பங்கு போட்டுக் கொள்வாளோ என்ற பயத்தில் தான் மருமகளை வேம்பாய் நினைக்கிறாள். தன் குடும்பம் சுற்றம் அனைத்தையும் விட்டுட்டு கணவனை மட்டுமே நம்பி வரும் மருமகளோ எங்கே நம் கணவர் நமக்கு ஆதரவாய் இருக்க மாட்டாரோ என்ற பயம் அவளுக்கு. என்னதான் பெற்று பாலூட்டி சோறூட்டி வளர்த்தாலும் திருமணம் என்று ஆனபிறகு நம் பிள்ளையை கவனிக்க மருமகள் இருக்கிறாள். அவள் கவனித்துக் கொள்வாள் என்ற எண்ணம் வந்து விட்டாலே போதும். மாமியார் எல்லாரும் தாயார் ஆகி விடுவார்கள். ஆனால் இந்த எண்ணம் நிறைய மாமியார்களுக்கு வராதது தான் எனக்கு வருத்தம். " என்றான் சோகமாய்.


" ஹேய் உனக்கு என்ன மறைகழன்று போயிற்றா? நான் என்ன கேட்டேன்? நீ என்ன கதை சொல்லிக் கொண்டிருக்கிறாய். உன்னை இனிமேல் கீழ்ப்பாக்கத்திற்குத் தான் அனுப்ப வேண்டும். " என்றாள் கோபமாய்.

" என்னை அனுப்புவது இருக்கட்டும். நான் சொன்ன மாமியார் யார் என்று கேட்கவில்லையே. அது நீ தான். " என்றான் நிதானமாய். உமாவின் விழிகள் அதிர்ந்து விரிந்தன.

" என்ன நானா? நான் யாருக்கு மாமியார்? என்ன உளறுகிறாய் நீ? " கேட்கும் போதே குரல் உடைந்தது.

" ஆமாம் உமா! இத்தனை காலமாய் இந்த வீட்டின் செல்ல மகளாய் அண்ணனின் பாசமலராய் வீழ்ந்து பழகிவிட்டாய். இப்போது திடீரென இன்னொரு பெண் வந்ததும் உனக்கு பயம். நம் அன்பை பங்கு கொள்ள வந்து





விட்டாளே என்கிற ஆவேசம். அதனால் தான் உனக்கு இத்தனை கோபம் வருகிறது. அப்படியென்றால் உன் அண்ணனை திருமணம் செய்ய வற்புறுத்தியது எல்லாம் வெறும் வாய் வார்த்தைக்காகத் தான். மற்றபடி உன் உள் மனம் உன் அண்ணனை யாருக்கும் விட்டுக் கொடுக்கப்போவதில்லை. அந்த அடிமன கொந்தளிப்புத் தான் இப்படி வெளிவருகிறது. அதனால் தானே சந்துரு சொன்ன எதையும் நீ நம்ப மறுக்கிறாய் ஒரு அழகான பெண் நம் அண்ணனின் மனதில் இருக்கிறாள் என்று உன்னால் பொறுக்க முடியவில்லை. சரி தானே நான் சொல்வது?'' அருண் தன்பாட்டில் குற்றங்களை அடுக்கிக் கொண்டே போக உமாவிற்கு கண்களை இருட்டியது. உடல் வெட வெடத்தது. இரண்டு நாட்களாய் கோபத்திலும் வீம்பிற்குமாய் காயப்போட்ட வயிறு தன் வேலையைக் காட்டத் தொடங்கியது. உள்ளத்தின் படபடப்பு வியர்வையாய் வெளியேற கீழே சரியப் போனவளை பற்றிக் கொண்டு வெண்ணிலாவை அழைத்தான் அருண். உமாவின் அறைக்குள் நுழையும் முன்பே சரோஜினியிடமும் வெண்ணிலாவிடமும் பேசி விட்டுத்தான் வந்திருந்தான். அதன் குறிப்பு மூலம் கையில் உணவோடு தயாராய் நின்ற வெண்ணிலா நுழைந்தாள்.

''பசி மயக்கம் தான் உமா. முதலில் சாப்பிடு. அப்புறம் தெளிவாக தெம்பாய் பேசலாம். நான் சொன்னது எல்லாம் உண்மையில்லை என்றால் சாப்பிடு. இல்லையென்றால்....'' அருண் முடிக்கும் முன்பே வெண்ணிலாவின் கையிலிருந்த தட்டை வாங்கி வேகமாக சாப்பிட ஆரம்பித்தாள். காய்ந்த தொண்டை உணவை ஏற்றுக் கொள்ள முடியாமல் விக்கலாய் வெளிப்பட, கண்ணாடி தம்ளரில் உள்ள நீரை எடுத்துக் கொடுத்தான். அவள் சாப்பிட்டு முடியும் வரை அமைதியாய் இருந்தான். சாப்பிட்டு கை கழுவிய உடன் தட்டை வாங்கிக் கொண்டாள் வெண்ணிலா.

''ம்... ஒருவழியாய் சின்னராணியின் உண்ணாவிரதம் முடிந்தது. போம்மா நீயும் உன் விரதத்தை முடித்துக் கொண்டு சாப்பிடு. '' என அவளை அனுப்பினான். திக்கென நிமிர்ந்தாள் உமா. '' என்ன அவளும் சாப்பிடவில்லையா? '' உமாவிற்கே தன் குரல் கேட்கவில்லை.

'' ஆமாம் தன்னால் இந்த வீட்டின் இளையராணி சாப்பிடாமல் இருக்கும்போது நான் எப்படி சாப்பிட முடியும் என்று கேட்கிறாள் அவள். இனிமேல் இப்படி அவளை பட்டினி போட வேண்டாம் உமா. அவள் ஒன்றும் நம்மைப் போல இல்லை. காலை எழுந்தது முதல் இரவு வரை மாடாய் உழைக்கும் ஒரு பெண்ணை பட்டினி போடுவது கொடிய பாவம்.'' என்றான் அறிவுரையாய்.

''ஏன் நானா அவளை பட்டினி கிடக்கச் சொன்னேன். '' என்றாள் வெடுக்கென. ''இது இதுதான் தவறு என்கிறேன். ஆமாம் உனக்கு ஏன் அந்தப் பெண்ணின் மேல் அத்தனை கோபம். ''

''எனக்கொன்றும் அவள் மீது கோபம் இல்லை. உன் நண்பன் மீது தான் கோபம். இப்படி ஒரு காரியம் செய்து என் முகத்தில் கரியைப்பூசி விட்டான். இனி நான் என் தோழியர் முகத்தில் எப்படி விழிப்பேன்.'' என்றாள் கோபமாய்.

''முட்டாள்தனமாய் பேசாதே உமா. உன் தோழியர் நம் வீட்டிற்கு வந்து இந்தப் பெண்ணை பார்த்தார்களா? இல்லையே நீ சொன்னால் தானே தெரியும். ஏன் குற்றம் சொல்வார்கள்? எனக்குப் புரியவில்லை. '' என்றான் அருண்.

''நீயும் நம்பிவிட்டாயா? அதெல்லாம் பொய். இவன் அவளை விரும்



பித் தான் அழைத்து வந்திருக்கிறான். '' என்றாள் உமா வெறுப்போடு. ''லோ வாட்? '' எனக் கேட்டு அதிரவைத்தான் அருண்.

'' என்ன லோ வாட்? '' வெடித்தாள் உமா.

'' ஆமாம் ஒருவேளை நீ சொல்வது உண்மையாய் இருந்து அவன் விரும்பியே இந்தப் பெண்ணை அழைத்து வந்திருந்தாலும் நீ கோபம் கொள்ள என்ன அவசியம் வந்தது? அண்ணியாக்கி சந்தோஷப்பட வேண்டியது தானே? அண்ணனுக்கு பிடித்த பெண்ணை கட்டி வைப்பதை விட்டு விட்டு ஏன் கோபப்பட வேண்டும். பொறாமை தானே '' என்றான் கேலியாய்.

உமா பேச்சற்று போனாள். '' அ அதெப்படி என்னிடம் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் எப்படி இவளை அழைத்து '' உமாவின் பேச்சை இடைவெட்டினான் அருண். ''ஹலோ இந்த மாதிரி விசயத்தை எல்லாம் உன்னிடமா கேட்பான்? நீ இன்னும் குழந்தை தான். முதலில் அதை நினைவில் வைத்துக் கொள். '' என்றான்.

'' நீ சொல்வதைப் பார்த்தால் நான் நினைத்தது சரிதானே. '' என மடக்கினாள் உமா. ''ஒருவேளை அவன் சொன்னது உண்மையாக இருந்தால்? '' என எதிர்கேள்வி கேட்டான் அருண். தலையைப் பற்றிக் கொண்டாள் உமா. '' இப்போ ஏன் என்னை சித்ரவதை செய்கிறாய். நான் என்ன செய்ய வேண்டும் இப்போது?'' என்றாள் கோபமாய்.

'' ம்... அப்படி வா வழிக்கு. நீ எப்போதும் போல் இரு. காலேஜிற்கு போ. இயல்பாய் இரு. அப்படியே யாரும் கேட்டால் உறவினர் பெண் என்று சொல். இந்த தேவையில்லாத கோபத்தை விட்டுட்டு படி. நீ நினைத்தது சரியென்றால் அவளை மணந்து சந்துரு நிம்மதியாய் வாழட்டும். அவன் சொன்னது உண்மை என்றால் பாவம் அந்தப் பெண் அமைதியாய் வேலை செய்யட்டும். உன் பேச்சால் அதைக் காயப்படுத்தாதே. என் உமாக்குட்டி எப்போதும் போல் புள்ளிமானாய் துள்ளி வரட்டும். இப்படி உம்மென்று இருந்தால் நன்றாக இல்லை. அடிக்கடி சிரிப்பாயே ரோஜாப்பூ போல. அது போல் சிரி. உன் சிரிப்பை காணாமல் உன் அண்ணனும் உம்மென்று இருக்கிறான். அவனிடம் பேசிவிடம்மா. இல்லையென்றால் என்னை கொன்றே விடுவான். '' என்றான் அருண் பயமாய்.

'' ஓஹோ அவர் தான் உன்னை தூது அனுப்பினாரா? வரட்டும் பார்த்துக் கொள்கிறேன். '' என்றாள் லேசாய் சிரித்து ''ம் இது இந்த சிரிப்பு இதைக் காணத்தான் காத்திருந்தேன். வரட்டுமாடா பை.'' என்றவாறு எழுந்தவனை வாசல் வரை சென்று வழியனுப்பி விட்டு திரும்புகையில் வெண்ணிலா ஜன்னல் கதவுகளை துடைத்துக் கொண்டிருப்பது தெரிய நின்றாள்.

'' எனக்கு காபி வேணும் தருகிறாயா? '' என குனிந்தவாறே கேட்டாள் உமா. துள்ளிவிட்டாள் வெண்ணிலா '' இதோம்மா ஒரு நிமிஷம் '' என்றவாறு ஓடியவளை '' நான் சின்னப் பொண்ணுதான். அதனால உமான்னே கூப்பிடலாம். '' என்று சொல்லி பிரமிக்க வைத்தாள். ஹாலில் அமர்ந்த சரோஜினி நிம்மதி பெருமூச்சு விட்டாள். ''அப்பா ஒருவழியாய் இந்தக் குட்டி இந்த மட்டும் இறங்கிவந்தாளே '' என முனகினாள்.

காபி கலந்து கொண்டிருந்த வெண்ணிலாவின் மனம் அந்த அருணுக்குத் தான் நன்றி சொல்லியது. யாரோ எவரோ என் மனபாரத்தை நீக்கிவிட்டார். போதுமடா சாமி. இந்த நிறைவு போதும். எல்லோருடைய சந்தோஷத்தையும் பார்த்துக் கொண்டு இப்படியே ஓர் ஓரமாய் இருந்து நம் வாழ்நாளைக் கழித்து விடலாம். 'அம்மா உன் மகள் பாதுகாப்பான அன்பான இடத்திற்கு

வந்து விட்டேன். உனக்குத் தெரிகிறதா? என் இறுதிவரை இங்கேயே காலம் கழிக்க எனக்கு உற்ற துணையாய் இரும்மா. எனக்கு மறுபிறவி தந்த மாமனிதனுக்கு என் வாழ்நாள் முழுக்க சேவகம் செய்ய வேண்டும். அந்த பாக்கியத்தை எனக்கு கொடம்மா ' என கண்ணீரோடு அன்னையை வேண்டிக் கொண்டாள்.

**8**

**வசந்தங்கள் வாழ்த்தும் பொழுது**
**உனது கிளை பூவானேன் - இலையுதிர்**
**காலம் முழுவதும் மகிழ்ந்து உனக்கு வேர் ஆவேன்!**

இலையுதிர் காலம் முடிந்து வசந்த காலம் பிறந்து விட்டதை மரங்களின் குளுமையும், பசுமையும் மலர்களும் அறிவித்தன. செடிகளும், கொடிகளும் பூக்கள் பூத்து குலுங்கின. மலர்களோடு தானும் ஒரு நடமாடும் மலராக நின்று பூக்கிண்ணத்தில் பூக்களை பறித்து நிரப்பிக் கொண்டிருந்தாள் வெண்ணிலா. இயற்கைக்கு மட்டுமா வசந்த காலம் பிறந்துள்ளது. தனக்கும் தான். நெம்பாம்பாய் இருந்த உமா ஒரேயடியாய் உருகாவிட்டாலும் கொஞ்சம் சிரித்த முகத்தோடு இதமாய் பேசுகிறாள். சில சமயம் புதுவிதமாய் தலைவாரி விட, புடவை கட்டி விடவும் அழைக்கும் அளவிற்கு நெருங்கி விட்டாள். சபாபதி தன் மகளாகவே ஏற்றுக் கொண்டார் என்று தான் சொல்ல வேண்டும். சில தினங்களுக்கு முன்பு புதிதாய் தங்கத்தில் தோடு வாங்கி வந்து தன் மனைவியிடம் கொடுத்து போட்டு விடச் சொன்னார்.

வெண்ணிலா பதறி மறுக்கும்போது ''நீயும் ஒரு மகள் தானம்மா. இப்படி கறுத்த தோட்டை எவ்வளவு நாள் தான் போடுவாய்? அதை கழற்றி எறி. நீ இதைப்போட்டு விடு சரோ. '' என மனைவியை ஊக்கினார். போட்ட பிறகு கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்து அசந்து தான் போனாள் வெண்ணிலா. அம்மா அடிக்கடி சொல்வதுண்டு. காக்கைக்கும் பொன் இட்டால் அழகு தான் என்று. காக்கைக்கே அழகு என்றால் நமக்கு எப்படி இருக்கும் என்று நினைத்ததுண்டு. இன்று முதன் முறையாக தங்கம் போட்டதும் வெண்ணிலாவின் அழகு பல மடங்கு கூடித் தெரிந்தது.

அதைப் பார்த்து விட்டு ஒரு நாள் அருண் ஒற்றை செயின் கொண்டு வந்து தந்தான். '' என் பிரெண்ட் ஒருத்தன் பேன்சி ஸ்டோர் திறந்தாம்மா. எதையாவது வாங்கியாக வேண்டுமே. அதனால் தான் இதை வாங்கினேன். என் வீட்டில் பெண்களே கிடையாது. நானும் அப்பாவும் தான். உன் நினைவு வந்தது. அதனால் தான் எடுத்து வந்தேன். இது கோல்டு கவரிங் தான். நான் தந்தால் போட்டுக் கொள்வாயா? '' எனக் கேட்டான். இந்த சில மாதங்களில் அருண் தனக்கு அண்ணன் ஆகிவிட்டதாய் உணர்ந்திருந்தாள் வெண்ணிலா. எனினும்,

''இல்லேண்ணா. வாங்கிப்பேன். ஆனா எனக்கு கவரிங் செயின், கம்மல் எதுவும் ஒத்துக்காது. அரிப்பு எடுத்து தோல் உறிஞ்சிடும். அதனால தான் போடறதில்லை. '' எனத் தயங்கினாள்.

''அது சாதாரண கவரிங்கா இருக்கும். இதுல பாதிக்குப்பாதி தங்கம் கலந்திருக்கு. வருஷக்கணக்கா ஆனாலும் கறுத்துப் போகாது. தோலையும் பாதிக்காது. போட்டுப் பாரேன். பிடிக்காவிட்டால் கழற்றிவிடு. '' என அவன் கொடுத்தான். மறுக்கமுடியாமல் வாங்கி கழுத்தில் போட்டதும் பளீரென மின்னியது.

'' அட இப்படி மின்னுதே. உன் பிரண்ட் ஒரு வேளை நிஜ தங்கச் செயினை கொடுத்து விட்டானா? '' என்றாள் உமா.



'' மின்னுவதெல்லாம் பொன்னல்ல. அப்படியே பொன்னாக இருந்தாலும் இலாபம் தானே. '' என்று விளையாட்டாய் விட்டு விட்டாலும் மறுநாளே இது சந்துருவின் கைவண்ணம் என்று தெரிந்தபோது மனம் குளிர்ந்து போனது. நேரிடையாய் அதிகம் பேசாதபோதும் சந்தர்ப்பம் கிடைக்கும் போது அன்பாய் அக்கறையாய் நான்கு வார்த்தையேனும் பேசாமல் போக மாட்டான். சரோஜினியும் நல்ல நல்ல புடவைகளை வழங்கியிருந்தாள்.

இப்போது வெண்ணிலாவைப் பார்க்கும் யாருமே அந்த வீட்டுப் பெண் எனுமளவிற்கு அழகும் நிறமும் கூடியிருந்தாள். நல்ல சாப்பாடு, நல்ல துணிமணி, இதமான சூழல், அன்பான மனிதர்கள் என மனம் திருப்தியாய் இருந்ததில் உடல் நன்றாக தேறியிருந்தது. மற்றபடி இந்த இதமான வாழ்வே போதும் என மனம் அசாத்திய அமைதியாய் இருந்தது.

அன்று அனைவருக்கும் விடுமுறை நாள். நிதானமாய் தான் எழுவார்கள். அதனால் தான் வீட்டின் முன் உள்ள தோட்டத்தில் காலாற நடந்து ஒவ்வொரு பூக்களாய் தேர்ந்தெடுத்து பறித்துக் கொண்டிருந்தாள். '' நிலா '' என்று தனக்கு வெகு அருகே குரல்கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினாள். திரும்பிய வேகத்தில் மகிழம்பூ மரத்தில் கைபட்டு வெண்ணிலாவின் கண்ணாடி வளையல்கள் நொறுங்கியது. அதில் ஒன்று லேசாய் கிறியும் விட இரத்தம் எட்டிப்பார்த்தது. சந்துரு பதறிப் போனான். ''ஐயோ இரத்தம். வா நிலா ஹாஸ்பிடல் போகலாம். காரில் ஏறு '' - என பதறி துடித்தான். அவனது பதட்டத்தை ரசித்து சிரித்தாள் வெண்ணிலா. 'என்ன நீ? கையில் இரத்தம் வருகிறது. நீ சிரித்துக் கொண்டிருக்கிறாய்' என்றான் ஒருமாதிரி குரலில்.

''பின்னே சிரிக்காமல் என்ன செய்வதாம். இத்தூனூண்டு இரத்தம் வந்ததற்கு காரில் ஏறி ஹாஸ்பிடலுக்கு போக வேண்டுமா? அப்படிப் போனால் டாக்டரே சிரிப்பார். '' என்றாள் சிரிப்போடு. வியப்போடு அவளை நெருங்கி இடதுகையை பற்றினான். ''வெண்ணிற கரத்தில் சாந்துப் பொட்டை தீற்றியது போல் இரத்தம் கசிந்திருக்கிறது. உனக்கு வலிக்கவில்லை நிலா''. இரக்கமாய் கேட்டான் சந்துரு.

''இதென்ன வலி. இதைவிட பெரிய வலிகளையெல்லாம் ப்பூ என ஊதி விட்டிருக்கிறேன். கேலியாகவே சொன்னாலும் அவள் மனதின் வலி புரிந்தது. ஸாரி நிலா, என்னால் தானே இப்படி ஆயிற்று? அவன் வருந்தியதும், போச்சுடா, கண்ணாடி வளையல் என்றால் உடையத்தான் செய்யும். இதற்கெல்லாமா வருத்தப்படுவது, நீங்கள் நிறைய மாற வேண்டும். இப்படி எதற்கெடுத்தாலும் கலங்கக்கூடாது. சரியா-'' கண்டிப்பாய் சொன்னவனிடம் சரி- எனறான் குழந்தையைப் போல. அவன் வாய் பொத்தி சொன்ன விதம்

'' உங்களுக்கு ரெண்டு ஊசி போட்டாகணும்''

''பரவாயில்லை டாக்டர் ரெண்டு நர்சுங்கள போடச் சொல்லுங்க''

-ஏ. மூர்த்தி, திருவள்ளூர்



சிரிப்பை வரவழைக்க வாயை மூடி கட்டுப்படுத்தினாள்.

சிரித்து விடு நிலா. சிரிப்பு ஒரு வரம். அதையேன் கட்டுப்படுத்த வேண்டும். சிரித்து விடு. நீ சிரித்தால் இன்னும் அழகாய் இருப்பாய்.'' அவளது முகத்தை விட்டு பார்வையை விலக்காமல் அவன் பேச கூச்சமாய் நெளிந்தாள் வெண்ணிலா. அதோடு இதென்ன பெயர் நிலா என்று. அம்மா எப்போதேனும் அன்பாய் இப்படி அழைப்பதுண்டு. இவன் வாயால் அந்தப் பெயரை கேட்டதும் மனம் குதூகலிக்கிறது. கூடவே தாயின் நினைவும் வருகிறதே.

அவன் அழைப்பதே தனிசுகம்தான். சத்தமாகவும் இல்லாமல் ரகசியம் போலவும் இல்லாமல் மென்மையான அழைப்பு. மயிலிறகால் வருடுவது போலிருக்கும். தன்னை மீறிச்சென்ற மனதை இழுத்து பிடித்துக் கொண்டு, ''சீக்கிரம் எழுந்திட்டீங்களா? சரி காபி தரட்டுமா?'' என்றவாறு விலகியவளை பிடித்து நிறுத்தினான். அந்த சமையல்கட்டில் அப்படி என்னதான் இருக்கிறது. அங்கேயே இருக்க ஆசைப்படுகிறாயே. காபியெல்லாம் அப்புறம் சாப்பிடலாம். முதலில் என் அறைக்கு வா. உன் காயத்திற்கு மருந்து போடலாம் என அழைத்ததும் மிரண்டாள். இல்ல நான் வரல்ல. இது சின்னக்காயம்தான். காபி பொடி வெச்சா சரியாகி விடும் என்றாள் மெல்லிய குரலில்.

''அய்யோ நிலா. அப்படி எதுவும் செய்திடாதே. செப்டிக் ஆகிவிடும். நீ மேலே வர வேண்டாம். நான் மருந்தை எடுத்திட்டு வர்றேன். ஒரு நிமிஷம் என வீட்டினுள் ஓடியவன் அரை நிமிடத்தில் வந்து வெள்ளை நிறத்தில் களிம்பு போலிருந்த மருந்தை காயத்தின் மீது பூசினான். காயம் சிறிதாய் இருந்தாலும் எரிந்தது. ஸ்ஸ்... ஆ.. ஆ..'' என்றாள். ரொம்ப வலிக்குதா? சரி நிலா. இன்னிக்கு நீ ரெஸ்ட் எடு. சமையலை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்'3 என்றதும் அதிர்ந்தாள்.

''என் வேலைக்கு உலை வைத்து விட்டு விடாதீர்கள். எனக்கொன்றும் இல்லை. நானே வேலையைப் பார்த்துக் கொள்கிறேன் என்றவளின் பேச்சை காதில் கேளாமல் தனது செல்போனை உயிர்பித்து, சங்கர் நேற்று பணம் தந்தேனே. இன்று பாங்க் லீவு. ஸோ அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு நாம் வழக்கமாய் வாங்கும் நகைக்கடைக்குப் போ. நல்லதாய் நான்கு வளையல்களை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வா. பணத்தைப் பற்றி கவலைப்படாதே. என்ன? சவரன்... ஒரு பத்து சவரன் கணக்கு வைத்துக் கேள். கூடுதலாய் ஆனாலும் பரவாயில்லை. நமக்கென்று சொல். பிரமாதமாய் செலக்ட் செய்து வாங்கி வா. எனக்கு வேலை இருக்கிறது. சீக்கிரம் வந்து விடு'' என்றவாறு போனை கட் செய்து மீண்டும் அடுத்த எண்களை அழுத்தி ''டேய் அருண் சோம்பேறி. இன்னுமா தூங்குகிறாய். எழுந்திருடா. குளித்து முடித்து பத்தே நிமிடத்தில் புறப்பட்டு வா. வந்த பிறகு சொல்கிறேன். முதலில் வா. '' என கட் செய்தான்.

புரியாமல் விழித்துக் கொண்டு நின்ற வெண்ணிலாவின் கன்னத்தை செல்லமாய் தட்டினான் '' என்ன பார்க்கிறே? இன்று ஒரே கல்லில் இரண்டு மாங்காய் உனக்கு விழப்போகிறது. ஒன்று உனக்கு இன்று முழு ஓய்வு. இரண்டாவதாக தினமும் வாய்க்கு ருசியாக சாப்பாடு போடும் உன் கைகளுக்கு தங்கக் காப்பு. அதுவும் அம்மாவின் கையால்! '' என்றான் பெருமிதமாய். '' எனக்கு அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். என்னை விட்டு விடுங்கள் ப்ளீஸ் '' என்றாள் கெஞ்சுதலாய்.

''அதெப்படி விட முடியும். விடுவதாய் இருந்தால் அன்றே கை விட்டி



ருப்பேனே. உன் கஷ்டத்திலும் உன் சந்தோஷத்திலும் உன் கூடவே இருப்பேன் நிலா. வேணாம்னு சொல்லிடாதே. இனியும் மறைக்க விரும்பவில்லை. நிலா என் மனம் முழுக்க நீதான் நிறைந்திருக்கிறாய். இந்த வீட்டின் மகாராணியாய் வீற்றிருக்க வேண்டிய நீ ஏன் வேலைக்காரி வேஷத்தை ஏற்றுக் கொண்டாய்? அன்று முழுநிலவின் சாட்சியாய் கடல் அலைகளின் மேளதாளத்துடன் உன் கரம் பற்றி கணையாழி பூட்டினேனே. அன்றே நான் முழுமனதோடு உன்னை ஏற்றுக் கொண்டேன் நிலா. உன்னை கைபிடித்து என் வீட்டினுள் நுழையும்போது கூட உன்னை என் மனைவியாய் இந்த வீட்டின் மருமகளாய் தான் அழைத்து வந்தேன். அம்மாவிடம் இதைப்பற்றி பேசும் முன் நீ வேறுவிதமாய் உன்னை அறிமுகம் செய்து வைத்தாய். எனினும் என் மனதில் உன்னை ஏற்றி வைத்தது ஏற்றியது தான். அதில் எந்த மாற்றமும் இல்லை. அங்கு உன்னைத் தவிர இன்னொரு பெண்ணுக்கு இடமும் இல்லை. சீக்கிரமே அம்மாவிடமும் சம்மதம் வாங்கி ஊரறிய என் மனைவியாய் ஏற்றுக் கொள்வேன். நிலா உனக்கு என்னை பிடித்திருக்கிறதா? என்னை ஏற்றுக் கொள்வாயா? நான் உனக்கு பொருத்தமாய் இருப்பேனா? என்னை மணக்க உனக்கு சம்மதமா? '' வெண்ணிலாவின் முகத்தை இருகரங்களால் ஏந்தி உண்மையை தேடினான் சந்துரு. அவளது விழிகள் கலங்கியிருந்ததும் அவள் மனதை தெளிவாய் காட்டியது. பதில் பேச முடியாமல் தடுமாறினாலும் அவனை எப்போதோ தன் மனம் ஏற்றுக் கொண்டதை மறுக்கவில்லை. முதல் நாள் நடந்த களேபரத்தில் மறுநாள் மோதிரத்தை கழற்றிவிடு என்று சரோஜினி சொன்னபோது கூட அத்தனை பாதிப்பு தெரியவில்லை. ஆனால் மறுநாள் அதைக் கழற்ற நினைத்த போது இதயமே வலித்ததே. சந்திரனின் சாட்சியாய் போட்ட மோதிரத்தை கழற்ற மனமின்றி வெகுநேரம் தவித்து தான் போனாள். பிறகு அவர்களாக கேட்டால் கற்றிவிடலாம் என்று விட்டு விட்டாள். மற்றவர்கள் அதைப்பற்றி இதுவரை பேச்சும் எடுக்கவில்லை. மறந்து விட்டார்களா? அல்லது இந்த மோதிரத்தை போய் எப்படி திரும்பிக் கேட்பது என்று விட்டு விட்டார்களோ தெரியாது.

ஆனால் அந்த மோதிரம் தன்னோடு இருப்பது சந்துருவே தன்னுடன் இருப்பது போன்ற ஆனந்தத்தை அளிக்க அவளும் பத்திரமாய் பொத்தி வைத்துக் கொண்டாள். மனதில் இருந்த நேசத்தையும். ஆனால் இன்று மனதில் இருந்தவனின் கேள்வியில் மடைதிறந்த வெள்ளமாய் பெருகிய கண்ணீராய் வெளியேறியது. அவளது கண்ணீரைக் கண்டவன் மனம் தாளாமல் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

ஆறுதலான அன்னை மடி கிடைக்கும் போது எந்த குழந்தையும் மறுக்குமோ? தன்னை நேசிக்கவும் தனக்கு வாழ்வளிக்கவும் ஓர் இதயம் இருக்கிறது என்ற நிம்மதி. காரின் ஒலி கேட்டு இருவரும் பதறி விலக, அருணின் கார் நுழைந்து போர்டிகோவில் நின்றது. பூக்கூடையை எடுத்துக் கொண்டு ஓடினாள் வெண்ணிலா. காரின் பின்னே சங்கர் தனது பைக்கை ஓட்டி வர இருவரையும் வரவேற்றான் சந்துரு.

''ஸார் நீங்க கேட்ட வளையல். இது பில் '' என்று ஒரு பர்சையும் பில்லையும் கொடுத்தான் சங்கர்.

''ஓ.கே. சங்கர். பில்லை வெச்சுக்க. நாளைக்கு ஆபீஸ்ல வந்து வாங்கிக் கொள்கிறேன். காபி சாப்பிட்டு போ. உள்ளே வா. '' என அழைத்தான் சந்துரு. ''இப்போது தான் சாப்பிட்டேன் ஸார். ஊரிலிருந்து அம்மா வருகிறார்

கள் ரெயில்வே ஸ்டேஷன் போக வேண்டும். வேறு ஏதேனும் வேலை இருக்கிறதா லா?'' என்றான் பணிவாய்.

''நோ, நோ, நீ கிளம்பு'' என்றவாறு அவனை அனுப்பி விட்டு காரை விட்டிறங்கிய அருணை தோளோடு அணைத்தவாறே காதிற்குள் கிசுகிசுத்த படி வீட்டினுள் அழைத்துச் சென்றான்.

''டேய்! எவ்வளவு நேரமாய் பசியைத் தாங்குவது. உள்ளே அப்படி என்னதான் செய்கிறீர்கள். பசி உயிர் போகிறது.'' மூன்றாவது முறையாய் உமா குரல் கொடுக்க சமையலறையிலிருந்து பாத்திரங்களின் ஓசை மட்டுமே கேட்டது. ''டேய் இன்னும் ஐந்தே நிமிஷம் தான். அதற்குள் சாப்பிட வரல்ல நடக்கிறதே வேற'' என்ற மிரட்டலுக்கு சபாபதி குரல் மட்டும் பரிதாபமாய்க் கேட்டது ''நானும் உள்ளே தான் இருக்கேம்மா கொஞ்சம் மரியாதை கொடு'' என்றார்.

''அப்பா நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் இந்தத் தடியர்களுடன் சேர்ந்து முதலில் வெளியே வாங்கப்பா'' என அதட்டினாள் உமா. ஈரக் கையை துண்டால் துடைத்துக் கொண்டே வந்து சாப்பாடு மேஜையில் அமர்ந்தார் சபாபதி. ''ஒருவழியா சமைச்சு முடிச்சாச்சு. இனிமே ஜட்ஜ்மெண்ட் தான். அம்மா வெண்ணிலா அந்த பேனைக் கொஞ்சம் கூட்டி வையம்மா'' என்றார் வியர்வையை ஒற்றியவாறே.

''உங்களுக்கு ஏன் இந்த வேண்டாத வேலை. அவர்கள் தான் ஏதோ ஆர்வக்கோளாறில் சமைக்கிறார்கள். நீங்கள் ஏன் போனீர்கள்.'' என்றாள் சரோஜினி. ''அப்படியில்லை சரோ. இன்று ஆண்கள் தினமாம். இன்றைய தினம் வீட்டுப் பெண்களுக்கு ஓய்வு கொடுத்து விட்டு நாமே வேலை செய்து அவர்களை சந்தோஷமாக வைத்துக் கொண்டால் குடும்ப ஒற்றுமை மேலோங்குமாம். வீட்டில் லட்சுமி கடாட்சம் பெருகுமாம்.'' என்ற தந்தையை இடைமறித்தாள் உமா. ''அப்படி எந்த முட்டாள் சொன்னது?''

''உன் அண்ணனும் அருணும் தாம்மா. அவர்கள் தான் என்னையும் சேர்த்துக் கொண்டார்கள். நானும் நன்றாகவே சமைத்தேன். இந்த அனுபவம் கூட நன்றாய்த்தான் இருக்கிறது. பேசாமல் வார விடுமுறையில் இதையே வழக்கமாக்கி விட்டால் என்ன?'' என்றார் சபாபதி.

''குட் ஐடியாப்பா. பெண்களுக்கும் ஓய்வு கொடுத்தது போல் இருக்கும். நம்மைப் பார்த்து எல்லாரும் மாறிவிட்டால் சூப்பரா இருக்கும்'' என்றவாறே சந்துருவும் அருணும் சமைத்த உணவுகளை மேஜை மேல் பரப்பினர். ''ம். இனிமேல் தான் போட்டியே ஆரம்பம். இப்போ நாங்க செய்த சாப்பாட்டை சாப்பிட்டுப் பார்த்து விட்டு அதை சமைத்தது யார் என்று சரியாகச் சொல்லுபவர்களுக்கு இந்த வளையல்கள் பரிசாக வழங்கப்படும்.'' என்றவாறே வளையல்களை எடுத்து ஒரு தட்டில் வைத்து அதை டேபிளின் நடுவே வைத்தான். வெண்ணிலாவிற்கு எல்லாம் தெளிவாய் புரிந்து விட சந்துருவின் மேல் பிரமிப்பு உண்டாயிற்று. கனமாய் தடிமனாய் நான்கு வளையல். புத்தம் புதிய டிசைனில் பளபளக்க உமாவின் கண்கள் ஆச்சரியமாய் மலர்ந்தது.

''டேய் என்னடா இது? புதுசா புதுசா சொல்றீங்க.'' என்றாள் வியப்பாய். ''பரிசு யாருமே சரியான விடையைச் சொல்பவர்களுக்கு மட்டும் தான் வீட்டின் தலைவியான அம்மாவிற்கு போய் விடும்.'' என்றான் சந்துரு.

சரோஜினி புன்னகைத்தாள். ''முதல்ல போட்டியை ஆரம்பியுங்கடா. பசிக்குது. வெண்ணிலா நீ ஏம்மா ஒதுங்கி நிக்கிற. வா வந்து உட்காரு. அப்படி என்ன தான் சமைச்சிருக்காங்கன்னு பார்ப்போம்.'' என்றாள் சரோஜினி.

அனைவரும் மொத்தமாய் அமர்ந்து கொள்ள, ஆண்களே பரிமாறினர். வார இதழ் ஒன்றை சுருட்டி அதையே மைக்காகப் பாவித்த அருண், ''இப்போது போட்டியின் முதல் கட்டமாக திருமதி. சரோஜினி சபாபதி அவர்கள் பிரியாணியை சாப்பிட்டு அதை யார் செய்தது என சொல்ல வேண்டும்'' என்றான்.

சரோஜினி ஆவலாய் ஒருவாய் சாப்பிட்டாள். உப்பு காரம் இரண்டுமே இல்லாமல் இருந்தது. சற்று யோசித்து, ''ம். நீதான் செய்திருப்பாய்'' என்றாள். ''போட்டி விதியின் படி சரியான பதிலை பெயருடன் தான் சொல்ல வேண்டும்'' என்றான் அருண். ''ம். இதுவேறா. இந்தப் பிரியாணியைச் செய்தது அருண். சரியா'' எனக்கேட்டாள் சரோஜினி.

ஒரு கணம் அமைதியாய் இருந்தான். அனைவரும் அவனையே பார்க்க ''டேய்! போதுண்டா சும்மா பில்டப் பண்ணாதே. அம்மா சொன்னது சரிதான்'' என்றாள் உமா ஆவலாய்.

''இல்லை. சரியான பதில். இந்த கமகம பிரியாணியைச் செய்தவர் எங்கள் மதிப்பிற்குரிய அப்பா சபாபதி அவர்கள்'' என்றதும் சந்துரு கை தட்டினான். ''ஏங்க? நீங்களா. அச்சோ'' - முகம் சுருங்கினாள் சரோஜினி.

''அடுத்தபடியாக இந்த வீட்டின் புள்ளிமான் குட்டி எங்கள் உமாகுட்டி ரசத்தை அருந்திவிட்டு அதை யார் செய்தது என்று சரியாக கணிக்க வேண்டும்.'' என்றான் அருண். உமா நறநறவென பற்களைக் கடித்தாள். ''என்டா நானே பசியால் வயிறு எரிய காத்திருக்கிறேன். எனக்கு ரசத்தை தந்து இன்னும் எரிய வைக்கப்போகிறாயா? உன்னை ...'' கழுத்தை நெரிப்பது போல் எழுந்தாள் உமா.

''நீ ஏன்டா அப்படி நினைக்கிறாய் சாப்பாட்டிற்கு முன் சாப்பிடும் சூப் என்று நினைத்துக் கொள். சும்மா ஒரு ஸ்பூன் சாப்பிட்டுப்பார். வாசனையே தூக்குகிறதே'' என்றான் சந்துரு.

''ஆஹா! ரசம் அண்ணன் தான் வைத்திருப்பானோ. அதனால் தான் சூப்புக் கொடுக்கிறானோ'' என்ற நினைப்புடன் ரசத்தை வாசனை பிடித்து விட்டு, ''நான் மணத்தை வைத்தே சொல்லிவிடுவேன். இது என் அண்ணன் சந்துரு செய்ததாக்கும்'' என்றாள் பெருமையாக.

''ஓ! எனச்சத்தமாய் சிரித்தான் அருண்.'' மீண்டும் தவறான பதில். இந்த மிளகு ரசத்தை வைத்தது அருணாகிய அடியேன் தான்'' என அவன் இழுக்க,

''என் மகளை கரை சேர்க்கிற வேலை எனக்கு இருக்காதுனு நினைக்கிறேன்''

''எப்படி சொல்றீங்க''

''கரையில ஒருத்தனோட கண்டல் சாப்பிட்டுட்டிருந்தாளே''

-ஜே.தனலட்சுமி, கோவை.



கோபமாய் அவன் மீது ஒரு ஆப்பிளை எடுத்து வீசினாள் உமா.

லாவகமாய் அதை கேட்ச்பிடித்து ''தேங்க்யூ'' என்றவாறு ஒரு கடிகடித்து விட்டு, ''இப்போது நம் போட்டியின் நிறைவாக நமது வீட்டின் புதிய வரவான நிலாப் பெண்ணை அழைக்கிறோம். அவர் இந்த ஸ்வீட் குலாப் ஜாமூனை சாப்பிட்டு விட்டு சரியான பதிலைச் சொல்ல வேண்டும். பாருங்க சிஸ்டர் பத்துவரன் மதிக்கதக்க நான்கு வளையல்கள், சரியான பதிலைச் சொன்னால் உங்களுக்கே உங்களுக்குத்தான். மற்ற இருவரும் தோற்றுவிட்டதால் உங்களுக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ளது. பொறுமையாய் சாப்பிட்டு விட்டு பதிலைச் சொன்னால் போதும். ஒன்றும் அவசரம் இல்லை'' என்று கூறி விட்டு குலாப் ஜாமூன் மிதந்த கிண்ணத்தை அவளிடம் நகர்த்தினான்.

உமா கடுப்பாய் முறைக்க ஆண்களின் ஆரவாரத்தோடு ஸ்பூனால் ஒரு குலாப் ஜாமூனை விண்டு வாயிலிட்டாள் வெண்ணிலா. தேன்பாகாய் கரைந்து உள்ளே போயிற்று. கண்களை மூடியவாறே, ''இதைச் செய்தது ச... உமாவின் அண்ணன் என்றவளை இடைமறித்தான் அருண். ''உமாவின் அண்ணன் என்ற பெயரில் யாரும் போட்டியில் கலந்து கொள்ளவில்லை.'' என்றதும் வெண்ணிலா சற்று தயங்கி, ''இதை பக்குவாய் செய்தது. ச.. சந்துரு.. வெல்லப்பாகில் இனிப்பு சற்று தூக்கல். அதனால் பாகை சபாபதி ஸார் செய்திருக்க வேண்டும்.'' ஜாமூன் என்று சொல்லி கண்களைத் திறந்தாள்.

பேரிரைச்சலோடு கை தட்டினர் ஆண்கள், ''சரியான பதில் மிகச்சரியான பதில். இன்றைய போட்டியின் வெற்றியாளர் செல்வி வெண்ணிலா'' என அருண் உரக்க கத்தினான். அவனிடம் இருந்த காகித மைக்கை வாங்கி, ''பரிசை வழங்க திருமதி. சரோஜினி சபாபதியை அன்புடன் அழைக்கிறோம்'' என்றான் சந்துரு. சரோஜினி முகம் கறுத்தது.

இது ஏதோ திட்டமிட்ட செயல்போல் படுகிறதே எனத்தோன்றியபோதும் முகமாற்றத்தைக் காட்டாமல் வளையலை எடுத்து வெண்ணிலாவிற்கு போடும்போது தான் அவள் கைகளில் கண்ணாடி வளையல் காணாமல் போனதையும் வளையல் கீறிய காயத்தையும் கண்டு கொண்டார். இதெல்லாம் தன் மகனின் வேலைதான் என்று புரிய அவளுக்கு வெகு நேரமாகவில்லை. பெற்ற மனம் விழித்துக் கொண்டது. இதை இப்படியே விட்டால் முதலுக்கே மோசமாகி விடும் என உள்மனம் எச்சரித்தது.

''இந்த மோதிரத்தை நீ இன்னும் கழற்றவில்லையா? ஏம்மா! நாங்கள் தான் விட்டுட்டோம். உரியவர் பொருளை உரியவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற எண்ணம் உனக்கு வேண்டாமா? இதை என் மகள் என் பிள்ளைக்கு பரிசளித்தது. முதலில் அதை கழற்று'' - என்றாள் குரோதமாக அனைவரின் முன்பும் சரோஜினி கேட்ட கேள்வியின் தொனியால் உடலும் மனமும் கூசிப் போனாள் வெண்ணிலா. அவமானம் தாங்காமல் குன்றிப்போனாள்.

## 9

**உன் கண்ணில் நீர் வழிந்தால் - என்**
**நெஞ்சில் உதிரம் கொட்டுதடி - என்**
**கண்ணின் பாவையன்றோ கண்ணம்மா**
**என்னுயிர் நின்னதன்றோ!**

கணப்பொழுதில் விழிகள் நீரால் நிறைந்து விட அவசரமாய் மோதிரத்தை கழற்றினாள். ''நில் வெண்ணிலா! அதைக் கழற்ற வேண்டாம். அது உன்னிடம் இருக்கட்டும்.'' என்று வந்த குரலில் அனைவருமே அதிர்ந்து தான் போனார்கள். உமாவா சொன்னாள். ஆமாம் அவள் தான் சொன்னாள். நம்ப முடியாமல் அவளைப் பார்த்தாள் வெண்ணிலா. அதற்குள் சரோஜினி கோபமாய், ''ஏய் என்னடி ஆயிற்று உனக்கு? ஏன் கழற்ற வேண்டாம் என்கிறாய்?'' என்றாள்.

''என்னம்மா நீங்கள்? வர வர உங்களுக்கு புத்தி மழுங்கிவிட்டது. இரண்டு மாதங்களாய் அவள் அணிந்திருந்த மோதிரத்தை கழற்றி அண்ணன் போட்டால் நன்றாகவா இருக்கும். அது அசிங்கமில்லை? வேறு அர்த்தமும் கூட தானமாய் கொடுத்ததை திருப்பி வாங்குவது அவமானம் அம்மா. அது அவளிடமே இருக்கட்டும். அவள் செய்யும் வேலைக்கு நாம் தரும் சம்பளமாக இருந்து விட்டு போகட்டும்.'' என்றாள் உமா அலட்சியமாய் முன்னிலும் அதிகமாய் கூசிப்போனாள். கண்களில் தேங்கியிருந்த நீர் அணையை உடைத்துக் கொண்டு பெருக்கெடுக்க, அதைக் காணசகியாமல், ''உமா! என்ன பேச்சு இது? யாரிடம் பேசினாலும் அடுத்தவர் மனம் புண்படாமல் பேச வேண்டும்.'' என்றான் சந்துரு கோபமாய்.

''உனக்கேன் அண்ணா இத்தனை கோபம் வருகிறது ஓ! இது நீ அழைத்து வந்த வேலைக்காரி ஆயிற்றே. அதற்காகவா?'' என்றாள் இளக்காரமாக. வேண்டாம் உமா! உனக்கு வேலைக்காரி அல்ல. அவளைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?'' கோபமாகவே கேட்டான்.

''நீ ஏண்டா அவளிடம் எகிறுகிறாய்? எதையும் வைக்க வேண்டிய இடத்தில் தான் வைக்க வேண்டும். இல்லாவிட்டால் நாளை எனக்கே எஜமானியாகி விடுவாள்?'' என்றாள் சரோஜினி.

''இல்லையம்மா! அந்த ஆசை எனக்கு எப்போதுமே இல்லை. நான் அப்படிப்பட்டவள் இல்லை.'' பதறித்துடித்தாள் வெண்ணிலா.

''அந்த ஆசை இல்லாமல் தான் காலையில் என் அண்ணனை அப்படிக் கட்டிக் கொண்டு நின்றாயாக்கும். அந்தக் கன்றாவியைத் தான் என் கண்ணால் கண்டேனே.'' என்றதும் அதிர்ந்து நிமிர்ந்தார்.

''என்னடி சொல்கிறாய்? என்ன நடந்தது?'' சரோஜினி கேட்க வெறுப்பாய் முகம் சுளித்தாள் உமா. ''அதை வேறு என்வாயால் சொல்ல வேண்டுமா? பட்டப்பகலில் வீட்டு முன்பே ஒருவரையொருவர்ச்சே. அது எப்படி கொஞ்சமும் கூச்சமில்லாமல் பிறர்பார்க்க கூடுமே என்ற பயம் கூட இல்லாமல் இருக்க முடிகிறதோ. நான் கூட அருண் சொன்னதைக் கேட்டு நாம் தான் தவறாக நினைத்து விட்டோமோ என வருந்தினேன். ஆனால் நான் நினைத்தது தான் சரி. நன்றாக வேஷம் கட்டி நம்மை ஏமாற்றுகிறார்கள் அம்மா'' என்றாள்.

''தாய் இருந்து வளர்த்திருந்தால் நல்லவிதமாய் வளர்ந்திருக்கும். அநாதை என்றாளே! அப்படியென்றால் தான் தோன்றித்தனமாகத் தான் வளர்ந்திருக்கும். எங்கெங்கு சுற்றி எதற்காக சாகப் போனதோ ரோட்ல போன சனியை வீட்டுக்கே அழைத்து வந்திருக்கிறான் உன் மகன்'' என்றதும் ''போதும் நிறுத்து'' - வீறிட்டாள் வெண்ணிலா. சந்துருவே திகைத்துப்போனான். ஓரடி முன்னால் வந்து உமாவை உற்றுப் பார்த்தாள் வெண்ணிலா.

''வாய் என்று இருந்தால் என்ன வேண்டுமானாலும் பேசுவீர்களா. என்னைப் பற்றி என்ன தெரியும் உனக்கு? என் பிறப்பு தெரியுமா? என் வளர்ப்பு தெரியுமா? எப்படி அநாதை ஆனேன் என்று தெரியுமா? இப்படி எதையுமே தெரியாமல் வார்த்தைகளை கொட்டிவிடாதே. ஏன்னா கொட்டிய பிறகு அள்ள முடியாது. கஷ்டம் என்றால் என்னவென்று தெரியுமா உனக்கு? வேதனை

என்றால் தெரியுமா உனக்கு? வறுமை எப்படி இருக்கும் என்று தெரியுமா உனக்கு? உனக்குத் தெரியாது. எப்படித் தெரியும். தாலாட்டி சீராட்டி வளர்க்க அன்னையும், தந்தையும் இருக்கும் போது கஷ்டம் எப்படி வரும்? வீட்டின் செல்வமகனாய் தாய் மடியிலும், தந்தையின் மார்பிலும் அண்ணனின் தோளிலும் தவழும் போது எப்படி வேதனை தெரியும்? பாலும் பாதாமும் நெய்ச்சோறும் சாப்பிடும் உனக்கு வறுமை என்றால் என்ன என்று தெரியாது தான்.

ஆனால் எனக்குத் தெரியும். இவையனைத்தையும் என் தாயின் கருவில் இருந்த போதே சுமந்திருக்கிறேன். அறியாத இளம் வயதில் ஒரு ஊதாரியை நம்பி என் அன்னை வீட்டை விட்டு வெளியேறி வந்ததால் இன்று வரை ஒண்ட ஒரு வீடின்றி தவிக்கிறேன். அது தெரியுமா உனக்கு? அன்று உன் தந்தையிடம் பேசினாயே. அப்போது நினைத்தேன் என் தாயும் உன்னைப்போல் தைரியமாகவும் புத்திசாலியாகவும் இருந்திருந்தால் இந்த நிலை வந்திருக்காதே என்று கருவிலிருக்கும் போதே தந்தையைத் தொலைத்து சிறுவயதிலேயே அன்னையை இழந்து பிணம் தின்னும் கழுகாய் எங்கள் உழைப்பை மற்றவர்கள் உறிஞ்சிய போதும் நாங்கள் வழி தவறிப்போகவில்லையே. எங்களுக்கு தேவையான துணையைத் தேடிக்கொள்ளவில்லையே. ஆண் என்ற இனத்தையே வெறுத்து ஒதுக்கினேனே. காலத்தின் கோலத்தால் ஒரு எய்ட்ஸ் நோயாளிக்கு மனைவியாய் ஆகப்போகும் நேரத்தில் தான் உன் அண்ணன் தெய்வமாய் வந்தார்.'' ஒரு கணம் நிறுத்தி கண்ணீரைத் துடைத்தாள்.

''ஆம் அவர் தெய்வம் தான். அந்த தெய்வம் தான் என்னைக் காப்பாற்றியது. என் வாழ்க்கையையும், என் உயிரையும், அந்த நன்றிக் கடனுக்காகத் தான் நான் உழைக்கிறேனே தவிர நீங்கள் தரும் கூலியை எதிர்பார்த்து அல்ல. தெய்வத்தை பார்த்துக் கொண்டே வாழ்வது போதும் என்று தான் நினைத்தேன். அந்த தெய்வம் என்னை தன் இதயத்தில் வைத்திருப்பதாகச் சொன்னதும் ஒரு கணம் தடுமாறி விட்டேன். நீ நினைப்பது போல் நானும் உன் அண்ணனும், உலகை மறந்து லயிக்கவில்லை உமா. பாலைவனத்தில் பொட்டுத் தண்ணீரின்றி நடந்து களைத்தவன் குளிர்சோலையைக் கண்டதும் சற்று இளைப்பாறுவானே. அந்த இளைப்பாறுதலை மன அமைதியைத் தான் நான் கண்டேன். நான் தோன்றித்தனமாக வளர்ந்திருந்தால் நான் உன் அண்ணனை என் கைப்பிடியில் அடக்க எத்தனை நிமிஷம் ஆகும். நான் சரியென்று சொன்னால் இந்த நொடியே என் கழுத்தில் தாலி கட்டி விடுவார். உண்டா இல்லையா கேள்! ஆனால் நான் அப்படிப்பட்டவள் அல்ல. என் அன்னை தெரியாமல் செய்த பிழையை நான் தெரிந்தே செய்வேனா? ஒரு குடும்பமாய் அன்பாய் ஒற்றுமையாய் நீங்கள் வாழ்வதை நான் தினமும் அணு-அணுவாய் ரசிப்பவள். நானே சிதைப்பேனா?

ஆனால் நான் செய்ததும் தவறுதான். ஏழைக்கேற்ற எள்ளுருண்டை போதும் என்று இந்த வேலையை எண்ணி திருப்திபட்டு இருக்க வேண்டும். விருந்துச் சாப்பாட்டை எண்ணியும் பார்த்திருக்கக்கூடாது. அது நான் செய்த தவறுதான். அதற்கான தண்டனையாய் உங்கள் பேச்சை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதற்காக எல்லை மீறிப் பேசாதே. பணமும் பகட்டும் எப்போதும் உடனிருக்காது உமா.

என் தாயும் பணக்காரியாய் பிறந்து வளர்ந்தவள் தான். உன்னை போல வீட்டின் செல்லமகளாய் வளர்ந்தவள் தான். ஆனால் கடைசியில் ஒரு வேளை சாப்பாடு கூட இல்லாமல் உழைத்து தேய்ந்து இறந்தே போனார்கள். என்



அன்னை செய்தது தவறுதான். ஆனால் பெற்ற தண்டனை தான் அதிகம். வயிற்றுப்பிள்ளையோடு பெற்றவர்களைத்தேடிச் சென்ற போது அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தால் இன்று உன்னிடம் அவமானப்பட்டு கூனிக்குறுகி நின்றிருக்க மாட்டேன். அன்று பணமும் நகையும் தந்து உதவிய என் மாமா இருக்க இடம் தந்து உதவியிருந்தால் என் அன்னையை அப்படி குற்றுயிராய் இறக்க விட்டிருக்க மாட்டேன். இன்று எல்லாம் போய் அநாதை என்ற பெயரோடு மோசக்காரி என்ற பட்டத்தையும் பெற்றுக் கொண்டு இன்னும் உயிர் பிரியாமல் நிற்கிறேனே.

சந்துரு! சந்துரு! இப்படியெல்லாம் கஷ்டம் வரும் என்று தானே கடலில் விழுந்தேன். ஏன்என்னைக் காப்பாற்றினீர்கள்.! இதைக் கண்டு என் தாயின் ஆத்மா ரத்தக்கண்ணீர் வடிக்குமே. இதற்காகவா சந்துரு என்னைக் காப்பாற்றினீர்கள்..? என் வீடு இலவம் பஞ்சு மெத்தையாய் இருக்கும் என்றீர்களே. என்னை முள் ஆணியாய் குத்துகிறதே. வார்த்தை என்னும் வாளால் என்னைக் குத்தி குதறி விட்டார்களே. என்னால் இதை தாங்கிக் கொள்ள முடியவில்லையே. நீங்கள் காப்பாற்றிய உயிரை நீங்களே எடுத்து விடுங்கள் சந்துரு. வாழும் ஆசை எனக்கில்லை. என்னைக் கொன்று விடுங்கள் சந்துரு. என்னைக் கொன்று விடுங்கள்.'' சந்துருவின் காலைப் பற்றிக் கதறினாள்வெண்ணிலா.

இறுகிய முகத்துடன் அவளைப் பற்றி எழுப்பி கண்ணீரைத் துடைத்து விட்டான். கூந்தலை ஒதுக்கி விட்டான். ''அழாதே நிலா. உன்னை முதன் முதலாய் நான் பார்த்தபோதும் இதே அழுதவிழியோடு தான் பார்த்தேன். இனி உன் கண்ணில் ஒரு போதும் கண்ணீரைப் பார்க்கக்கூடாது. உனக்கு நான் இருக்கிறேன். எனக்கு நீ போதும். வா போகலாம்.'' அவளைத்தோளோடு அணைத்துக் கொண்டு புறப்பட்டான். ''எ.. எங்கே சந்துரு?'' நனைந்த இமைகளை விரித்துக் கேட்டாள்.

''மனிதர்கள் இருக்கும் இடத்திற்கு நமக்கு இந்த இடம் வீடு வேண்டாம் நிலா. உன்னை முள்ளாய் குத்துகிற இந்த வீடு வேண்டாம். என் மனம் என்ற வீடுபோதும் உனக்கு. நீ தான் என் இதயத்தின் துடிப்பு. நீ இதுவரைபட்ட துயரங்கள் போதும். என் பாதுகாப்பில் நான் வாழவைப்பேன். என்னுடன்வா'' என்றவாறு வாசலை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

திடுமென உணர்வு பெற்ற அருண் வந்தான். ''சந்துரு. வா நம் வீட்டிற்கு போகலாம். வெண்ணிலா எனக்கு தங்கை என் வீட்டிற்கு வா. நான் உங்களுக்குத் திருமணம் செய்து வைக்கிறேன்.'' என்றான்.

''தலைவருக்கு கொள்கைப் பற்று அதிகம்னு எப்படி சொல்ற?''

''எந்தக்கட்சிக்குப் போனாலும் ஊழல் பண்ற கொள்கையை விடமாட்டேங்கறாலே.''

-ஏ.மூர்த்தி, திருவள்ளூர்



''இல்லை அருண். அறிந்தவர்களை விட்டு விலகி இருக்கலாம் என்று தான் செல்கிறோம். நிலாவிற்கு இப்போதைய தேவை அமைதிதான். அதை என்னால் தர முடியும். அதனால் வற்புறுத்தாதே பிளீஸ்!'' இருவரின் முன் வந்து நின்றார் சபாபதி. வெண்ணிலாவை உற்றுப் பார்த்தார். இத்தனை நாட்களாய் தெளிவற்று தெரிந்த பிம்பம் சட்டென புலப்பட்டது. ''அம்மாடி.. உன் அம்மா பெயர் என்ன? சா.. சாவித்ரியா?'' கேட்கும் போதே அவரது குரல் நடுங்கியது.

ஆச்சரியமாய் அவரைப் பார்த்தாள். ''ஸார்! எங்க அம்மாவை உங்களுக்குத் தெரியுமா? எப்படி?'' என்றாள்.

''ஐயோ! அப்படியென்றால் என் கண்ணம்மா இப்போது உயிரோடு இல்லையா. என் கண்ணம்மா என்னை விட்டு போய் விட்டாளா? நான் பாவி. நான் கொடும்பாவி. வயிற்றுச்சுமையோடு வாழவழியின்றி வந்த என் செல்வத்தை வீட்டினுள் சேர்க்காமல் காசுபணம் போதுமா என்று கொடுத்து அனுப்பி விட்டேனே. என் குழந்தை போய் விட்டாளே. அவள் தானாக சாகவில்லை. என்னால் தான் இறந்து போனாள். நான் பாவி.. நான் பாவி'' மார்பில் அறைந்து கொண்டு கதறிய சபாபதியைப் பார்த்து அனைவரும் ஸ்தம்பித்துப் போயினர். சாதாரணமாகவே உணர்ச்சிவசப்படுபவரில்லை அவர் ஆனால் இன்று அவர் அரற்றிய விதம் அனைவரையும் அதிர வைத்தது.

இடிந்து போய் நின்ற சரோஜினி தான் ஓடிவந்து கணவரைத் தடுத்தாள். ''என்னங்க? என்ன ஆச்சு? ஏன் இப்படி பதறிதுடிக்கிறீங்க. சொல்லுங்களேன். எனக்கு உடம்பெல்லாம் பதறுதே'' என்றாள் கலக்கமாய்.

''அம்மாடி! ராசாத்தி. உன்னை அநாதையா ஆக்கினது நான் தாம்மா. என்னால தான் என் தங்கை மகள் என் வீட்டில் வேலை செய்யும் அளவிற்கு ஆகிவிட்டது. இந்த பாவிக்கு மன்னிப்பே கிடையாதும்மா. எனக்கு மன்னிப்பே கிடையாது''- தன் கைகளைப் பற்றிக் கதறியவரை வெண்ணிலா கைபிடித்து சோபாவில் அமர வைத்தாள். டம்ளரில் நீர் ஊற்றி குடிக்க வைத்தாள். டர்க்கி டவலால் அவரது முகத்தை ஒற்றி எடுத்தாள். பேனை சுழலவிட்டாள். அவரது மார்பை மெதுவாய் நீவி விட்டாள்.

''ஐயோ! தாயைப் போலவே இருக்கிறாளே. உன் அம்மாவும் இப்படித்தான் என்னைப் பார்த்துக் கொள்வாள். இப்போதும் அவள் தான் உன்னை என்னிடத்தில் அனுப்பியிருக்கிறாள். உன்னைப் பார்த்த முதல் நாளே எனக்கு சந்தேகம் தான். ஆயினும் வருடக்கணக்காய் ஆகி மறந்தே போன முகம் சட்டென நினைவிற்கு வரவில்லை. அப்படி வந்திருந்தால் இன்று என் குழந்தை இப்படி கண்ணீர் விட்டு கதற விட்டிருப்பேனா. என்னை மன்னித்து விடம்மா. இந்த மாமனை மன்னித்து விடு.'' - மார்பை நீவிய கையை எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டார் சபாபதி.

''வேண்டாம் மாமா. கலங்காதீர்கள். எனக்கு எப்போதுமே உங்கள் மீது கோபம் இருந்ததில்லை. அம்மாவை யாரும் ஏற்றுக் கொள்ளாத போதும் நீங்கள் மட்டும் தான் மனமிரங்கி வீட்டிற்குத் தெரியாமல் பணமும், நகையும் தந்ததாக அம்மா அடிக்கடி சொல்வதுண்டு. நீங்கள் மட்டும் பணம் தராமல் போயிருந்தால் அம்மாவை புகுந்த வீட்டிற்குள் சேர்த்திருக்கவே மாட்டார்கள். நீங்கள் தந்த பணம் தான் எங்களை காப்பாற்றியிருக்கிறது. அம்மா அடிக்கடி இதை சொல்வார்கள். அதனால் நானும் அக்காவும் உங்களைப் பார்க்க ஏங்கியதுண்டு மாமா. உங்கள் மீது ஒரு பிழையும் இல்லை. நீங்கள் நல்லவர் தான் மாமா. அதனால் தான் இத்தனை வருடம் கழித்தும் இந்த நிலையில் இருக்கும்



என்னை கண்டு கொண்டு உறவாடுகிறீர்களே. அம்மாவின் ஆத்மா நிச்சயம் சாந்தியடைந்திருக்கும் மாமா'' என்றாள்.

''உனக்கு அக்கா இருக்கிறாளா? எங்கே இருக்கிறாள். என் தங்கைக்கு எத்தனை குழந்தைகள்? என் தங்கை எப்படி எப்படி மரித்தாள். சொல்லம்மா. என் இதயம் துடிக்கிறதே சொல்லம்மா'' - தவிப்பாய் கேட்ட சபாபதியைப் பார்க்கையில் பரிதாபமாய்த்தான் இருந்தது.

''வேண்டாம்ப்பா! அவ சொல்ல வேண்டாம். நான் சொல்கிறேன். நிலாவின் மனம் ஏற்கனவே காயம்பட்டுக் கிடக்கிறது. அவளால் சொல்ல முடியாது. அதனால் தானே சொல்கிறேன்.'' என்றவாறு சொல்ல ஆரம்பித்தான் சந்துரு.

கடற்கரையில் வெண்ணிலா தன்னிடம் சொன்ன கதையை துளியும் குறையாமல் சொன்னான். கேட்ககேட்க விக்கித்துப் போனார் சபாபதி. அருணின் கண்கள் கூட கலங்கியிருந்தது. சரோஜினி கண்ணீர் பெருக்கோடு வெண்ணிலாவை நெருங்கி அணைத்துக் கொண்டாள். பரிவாய் நெற்றியில் முத்தமிட்டாள்.

''என் கண்ணே! இத்தனை துன்பங்களை அனுபவித்த உன்னை நானும் நோகடித்து விட்டேனே. என்னை மன்னித்துவிடம்மா. அவசரப்பட்டு விட்டேனே.''-என அரற்றினாள். அனைவரின் பார்வையும் உமாவிடம் சென்றது. சிறிதும் அசைவின்றி கல்லாய் அமர்ந்திருந்தாள் அவள்.

## 10

**நதியாக நானும் உருமாறினாலும்**
**உன்பேரைச் சொல்லி அலைமோதுவேன்**
**மண்ணாக நானும் மறுஜென்மம்**
**கொண்டால் உன்பாதம் தாங்கும் நிலமாகுவேன்....**

"**மா**மா! உங்கள் மகன் என்னைக் காப்பாற்றும் போது அவர் படித்தவரா பணக்காரரா சொத்து சுகம் உடையவரா எதுவுமே எனக்குத் தெரியாது. அவர் நல்லவர் என்று மட்டும் தெரியும். அதனால் தான் அவருடன் வந்தேன். பணத்தையோ வசதியையோ எதிர்ப்பார்த்து நான் வரவில்லை மாமா. நான் ஏமாற்றுக்காரி அல்ல அத்தை. உங்களையெல்லாம் ஏமாற்ற நினைத்ததும் இல்லை. என்னை நம்புங்கள்''- கைகூப்பினாள் வெண்ணிலா.

''அழாதேம்மா! பெற்ற பாசம் கண்ணை மறைத்து விட்டதில் கொஞ்சம் கடுமையாக பேசிவிட்டேன். மற்றபடி உன் மீது எனக்கு வெறுப்போ கோபமோ கிடையாது. நாங்களும் நல்லவர்கள் தான். ஏதோ எங்களையறியாமல் சதி நடக்கிறதோ என ஒரு கணம் பயந்துவிட்டேன். அதையெல்லாம் மனதில் வைத்துக் கொள்ளாதே. சாவித்ரியை எனக்கும் பிடிக்கும். நீ உன் அம்மாவைப் போலவே ரொம்ப அழகு''-திருஷ்டி கழித்தாள் சரோஜினி.

கணவனிடம் திரும்பி, ''சாவித்ரி எப்போது நம் வீட்டிற்கு வந்தாள்? என்னிடம் நீங்கள் சொல்லவே இல்லையே. தெரிந்தால் நானாவது அவளை விட்டிருக்கமாட்டேனே. ஏன் என்னிடம் சொல்லாமல் மறைத்தீர்கள்?'' - என குற்றம் சாட்டினாள்.

பெருமூச்சொரிந்தார் சபாபதி. ''ப்ச் உன்னிடம் மறைக்கவில்லை சரோ. அப்போது நீ உன் அம்மாவீட்டில் இருந்தாய். சந்துருவிற்கு பிறகு ஒரு முறை குழந்தை தரித்து நான்காம் மாதம் அது கலைந்து நீ ரொம்பவும் கஷ்டப்பட்

டுப் போனாயே. ஒரு மாதமாய் படுக்கையில் இருந்தாயே! அப்போது தான் சாவித்ரி வந்திருந்தாள். அம்மாவும், அப்பாவும் என்ன பேசி விரட்டினார்களோ தெரியாது. நான் உன்னைப் பார்த்து விட்டு காரில் வீடு திரும்பும் போது தெரு முனையில் நான் அவளைப் பார்த்தேன். அது அவளுக்கு நிறைமாதம் என்று நினைக்கிறேன். வயிற்றுச் சுமையோடு இளைத்து கறுத்து நின்றவளை முதலில் கண்டுபிடிக்கவில்லை. நன்றாக உற்றுப் பார்த்த பின்பு தான் அடையாளமே தெரிந்தது. எனக்கும் அவள் மீது கோபமும் வருத்தமும் இருந்தது தான் என்றாலும் அவள் என் உடன் பிறந்தவளாயிற்றே. மனம் தாளாமல் காரை அவளருகே நிறுத்தி அவளை காரினில் ஏற்றிக் கொண்டு ஒதுக்குப்புறமாய் நிறுத்தி விட்டுத்தான் ''எப்படி இருக்கிறாய்?'' என்று கேட்டேன். அவளிடம் இருந்து கண்ணீர் மட்டும் தான் பதிலாய் வந்தது. உனக்குத் தெரியுமா சரோ? அவள் என்னிடம் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அவளால் பேச முடியவில்லை. ஒரு வேளை மனம் விட்டு பேசியிருந்தால் நான் ஒரு நல்ல முடிவை எடுத்திருப்பேன். ஆனால் அவள் கணவன் விட்டுவிட்டு போனதைக் கூட என்னிடம் சொல்லவில்லையே. காதிலும், கழுத்திலும் பொட்டுத்தங்கம் கூட இல்லாமல் வெறுமையாய் நின்றாள். அதைப்பார்த்து விட்டு மிகவும் வறுமையில் வாடுகிறாள் என்று தெரிந்துதான் அவளைக்காருக்குள் அமரவைத்துக் கொண்டே வீட்டிற்கு வந்து அவளுக்கென செய்து வைத்திருந்த நகைகளோடு ஒரு இரண்டு லட்சம் பணமும் கொடுத்து உன் கணவனிடம் சொல்லி ஏதாவது தொழில் செய்து பிழைத்துக் கொள் என்று அனுப்பினேன். மடையன் நான். அவள் எங்கே இருக்கிறாள் என்று கூட கேட்கவில்லை. அவளும் சொல்லவில்லை. அவளை அனுப்பிவிட்டு வீடு வந்த பிறகு அம்மா சொல்லித்தான் கணவனை பிரிந்து அடைக்கலம் தேடி வந்தாள் என்றே தெரிந்தது.

அவர்களைத் திட்டிவிட்டு அவளை அனுப்பிய இடத்திற்கு வந்து தேடிப் பார்த்தேன். அதற்குள் போய் விட்டாள். அதன் பிறகும் அவளை தேடாமல் இல்லை. அரசு மருத்துவமனை பிரசவ ஆஸ்பத்திரி என எல்லா இடமும் தேடிப்பார்த்தேன். பிறகு நாம் கொடுத்த பணத்தில் எப்படியும் தொழில் தொடங்கி அமோகமாய் வாழ்வாள் என்ற நம்பிக்கையில் விட்டுவிட்டேன். அது எத்தனைப் பெரியதவறு என்று இன்று தானே தெரிகிறது'' என்றார் வேதனையாய்.

''இப்போதுதாம்ப்பா தெரிகிறது. உங்கள் குணம் தான் சந்துருவிற்கும் அப்படியே இருக்கிறது. நீங்கள் அன்று எப்படியோ போ என்று உங்கள் தங்கையை

''ரமேஷ் ஏழேழு ஜென்மத்துக்கு நாம ரெண்டு பேரும் காதலர்களா இருக்கணும்''

''பச்...எனக்கு இதுவே ஏழாவது ஜென்மமா இருக்கணும் கடவுளே..''

-ஜே.தனலட்சுமி, கோவை.





உதறியிருந்தால் பிள்ளைகளை பெற்றுக் கொள்ளவும் முடியாமல் உயிரை விட்டிருப்பார்கள். அதேபோல் அன்று சிக்னலில் யார் எப்படிப் போனால் நமக்கென்ன என்று எல்லோரையும் போல் சந்துருவும் இருந்திருந்தால் இன்று வெண்ணிலா நமக்கு கிடைத்திருக்கமாட்டாள். ஒரு எய்ட்ஸ் நோயாளியைக் கட்டிக் கொண்டு, இன்னொரு அப்பப்பா! நினைக்கவே பயமாய் இருக்கிறது என்ன? கொஞ்சம் முன்னால் தேடிக் கண்டுபிடித்திருந்தால் அந்த முழுமதியையும் காப்பாற்றி இருக்கலாம்'' என்றான் அருண் வருத்தமாய்.

''முழுமதி இல்லை அண்ணா நிறைமதி'' திருத்தினாள் வெண்ணிலா. ''இரண்டும் ஒன்றுதானம்மா. அதனால் தான் மாற்றிச் சொல்லிவிட்டேன். ஆனாலும் உன் அம்மாவிற்கு நல்ல ரசனைதான். நிறைமதி, வெண்ணிலா அருமையான பெயரை வைத்திருக்கிறார்களே. உங்கள் அம்மாவிற்கு நிலவைப் பிடிக்குமோ'' சூழலை கலகலப்பாக மாற்ற வேண்டும் என்று அருண் பேச்சை மாற்றியதும் சபாபதியின் முகம் முறுவலித்தது.

''ஆமாம்! என் தங்கைக்கு நிலவை ரொம்ப பிடிக்கும். வளர்பிறையென்றால் தினமும் மாடியில் நின்று எவ்வளவு வளர்ந்திருக்கிறது என்று ஆராய்வாள். முழுநிலவன்று இரவு முழுவதையும் மொட்டை மாடியில் தான் கழிப்பாள். சாப்பாடு கூட மாடியில் தான். அப்படித் தொடங்கியது தான் எங்கள் நிலாச்சாப்பாடு. ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் நாங்கள் குடும்பமாய் மாடியில் அமர்ந்து சாப்பிடுவது உனக்கு தெரியும் தானே அருண். அது என் தங்கையின் நினைவாக நான் விரும்பும் ஒரு விழா. அன்று முழுக்க நிலவோடு என் தங்கையும் என்னுடனே இருப்பது போல் ஒரு உணர்வு. எனக்கு என் தங்கை என்றால் உயிர்'' என்றார் பெருமையாய்.

''ஓஹோ! சந்துரு இதிலும் நீ உன் அப்பா போலத்தான். அப்பாவிற்கு தங்கை என்றால் உயிர் உனக்கு தங்கை மீது பைத்தியம். சரிதானே'' என்றவாறு ஓரக்கண்ணால் உமாவைப் பார்த்தான் அருண். அவள் நிமிர்வதாக இல்லை. அதைக் கவனியாதவர் போல் சபாபதி தொடர்ந்தார்.

''எங்கள் வீட்டிற்கும் சாவித்ரி ஒரு பெண் தான் அனைவருக்கும் செல்லம். நாங்கள் சாவி சாவி என அழைக்கும் போது அவளுக்கு ரொம்பக் கோபம் வரும். எங்களைத் திட்டுவாள். தன் குழந்தைகளுக்கு உலகே விரும்பும் நிலாவின் பெயர்களைத் தான் வைப்பேன் என்று சொல்வாள். உண்மை தான் நிலவை யாரும் வெறுப்பதில்லை. அதைப்பற்றி பாடாத கவிகளும் இல்லை. எங்கள் சந்துருவிற்குக் கூட அவள் தான் பெயர் வைத்தாள். சந்திரபிரகாஷ் என்றால் சந்திரனுடைய பிரகாசத்தை ஒளியை அழகைப் பெற்றவன் என்று பொருளாம். அதையும் அவள் தான் சொன்னாள். எங்கள் அப்பாவிற்கு என் தாத்தாவின் பெயரை சத்ரபதியை வைக்க வேண்டும் என்று ஒரே ஆசை. இவள் விடாப்பிடியாய் நின்று இந்த பெயரைச்சூட்டினாள். நானும் சரோவும் மறுக்காமல் கேட்டுக் கொண்டோம்.'' என்றார் பழைய நினைவுகளின் இன்பம் கண்ணில் மின்ன.

''அதோடு விடவில்லையே. அண்ணி அடுத்ததாய் ஆண் குழந்தை பிறந்தால் சந்திரன் என்று பெயர் வைக்க வேண்டும் என்று எனக்கு உத்தரவே போட்டிருந்தாள். ஆனால் அதற்குள் ஏதேதோ நடந்து விட்டதே'' என பெருமூச்சு விட்டாள் சரோஜினி.

''அதை விடுங்கள் அம்மா! உங்கள் நாத்தனார் திறமைசாலி தான். தனக்கு பெண் குழந்தை தான் பிறக்கும் என்று அவர்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கி

நது. அதனால் தான் உங்கள் மகனுக்கு இந்த பெயரை வைத்திருக்கிறார்கள்?'' என்றான் அருண் பூடகமாய்.

''என்ன உளற ஆரம்பித்துவிட்டாயா'' என உமா கேட்பாள் என்று அவளையே பார்த்த அருண் ஏமாந்து போனான். இப்போது வாய் திறந்தான் சந்துரு. ''எப்படிடா இவ்வளவு உறுதியாச் சொல்றே. எதை வைத்துச் சொல்கிறாய்?'' என்றான் புரியாமல்.

''டேய் மடையா! உன் பெயர் சந்திரபிரகாஷ். உன் அத்தை மகள் பெயரென்ன வெண்ணிலா. வெண்ணிலா யார்? உன் முறைப்பெண் தானே அதாவது வெண்ணிலா பிறக்கும் போதே உனக்குத்தான் என்று உன் அத்தை முடிவு செய்து விட்டார்கள். அதாவது திருமணத்தின் முதல் பொருத்தம் பெயர் பொருத்தம் என்பார்கள். உங்கள் பெயரில் உள்ள பொருத்தத்தைப் பார்த்தீர்களா? வெண்ணிலாவும், சந்திரஒளியும் ஒன்றோடொன்னு இணைந்தது தானே. அதே போல் நீங்களும் ஈருடல் ஓருயிராக வாழுங்கள். அது தான் சாவித்ரி அம்மாவின் ஆசை. நீங்கள் என்னப்பா சொல்கிறீர்கள்''-என சபாபதியிடம் கேட்டான் அருண்.

''நான் என்னப்பா சொல்ல? இந்தப் பெண்ணைப் பார்க்கும் போதெல்லாம் இவள் நம்வீட்டின் மருமகளாய் இருந்தால் நன்றாயிருக்குமே என்று நினைப்பேன். என் உள்ளுணர்வு சொல்லிக்கொண்டே இருந்தது. இப்போது என் கண்ணம்மாவின் மகள் என்றான பின் ஆயிரம் மடங்கு சந்தோஷம். நீ என்ன சொல்கிறாய் சரோ'' என்றார் மனைவியிடம்.

''உங்களுக்கு என்மேல் இன்னும் கோபம் அப்படித்தானே'' சரோஜினி கண்கள் கலங்க பதறினார். ''அய்யோ! அதெல்லாம் ஒன்றுமில்லை சரோ''

''இல்லை. இருக்கிறது. என்மேல் கோபம் இருக்கிறது. அதனால் தானே என்னிடம் கேட்கிறீர்கள்'' என்றாள் உதட்டைப்பிதுக்கியவாறே'' ''அப்பாடி! நான் பயந்தே போனேன்.'' என சந்துரு நிம்மதியாய் மூச்சுவிட்டான்.

**நானும் நீயும் நாளைதான்**
**மாலை சூடலாம் - வானம் பூமி**
**யாவுமே வாழ்த்து பாடலாம்**
**நீயில்லையேல் நானில்லையே...**

## 11

இதுவரை சிலையாக அமர்ந்திருந்த உமாவின் மனதினுள்கனன்று கொண்டிருந்த நெருப்பு கொஞ்சம் கொஞ்சமாய் அணைந்து குளிர்ந்துவிட, விழிகளில் நீர்ப்பெருக்கோடு ''அண்ணி'' என்ற கேவலுடன் வெண்ணிலாவை கட்டிக் கொண்டாள்.

''ஸாரி! அண்ணி! ஐம் ஸோஸாரி. வெரி ஸாரி. உங்களை நான் அப்படி பேசியிருக்கக்கூடாது. பெரியதப்பு. நான் பேசியதற்கு யாராய் இருந்தாலும் என்மீது கோபமும் வெறுப்பும் தான் வந்திருக்கும். என்னை மன்னித்து விடுங்கள் அண்ணி! அண்ணன் மீதிந்த அளவு கடந்த அன்பால் அறிமுகமில்லாத பெண்ணால் என் அண்ணன் ஏமாந்து விடக்கூடாதே என்றதவிப்பால் கொஞ்சம் அதிகமாக பேசிவிட்டேன். என்னை மன்னிப்பீர்களா அண்ணி?'' எனக்கதறி விட்டாள்.

''அதையெல்லாம் விடும்மா. எனக்கும் நீ குழந்தைதான். கொஞ்சம் பிடிவாதமான குழந்தை. அதுபோகட்டும். நான் யூகிப்பது உண்மைதானே! உன் மனதில் அருண் தானே இருக்கிறார்?'' என வெண்ணிலா கேட்டதும் தயங்கி



தன் பெற்றோரைப் பார்த்தாள் உமா.

''சொல்லிடு உமாக்குட்டி. மனதில் இருப்பதை தைரியமாய்ச் சொல் நீ அருணை விரும்புகிறாயா?'' - சரோஜினி கேட்டாள். தாயருகே வந்தாள் உமா. அன்னையின் கையைப் பற்றிக் கொண்டு, ''அம்மா! நான் விரும்புகிறேன் என்று சொல்ல முடியாது. ஆனால் அருணை ரொம்பவும் பிடித்திருக்கிறது. அவர் பேசும் போது மனம் அமைதியாகி விடுகிறது. அவருக்கு ஒன்று என்றால் பதறி விடுகிறேன். அவருடைய கண்ணியம் எனக்கு பிடித்திருக்கிறதம்மா. வாழ்ந்தால் இவருடன் வாழ வேண்டும் என்று சில சமயம் தோன்றும். ஆனால் இவரிடம் உள்ள அமைதியும், பணிவும் என்னிடம் இல்லையே. இவரிடமே எத்தனையோ முறை கோபப்படுவேன். அடித்திருக்கிறேன். மரியாதை இல்லாமல் பேசிவிடுகிறேன். அதனால் தான் இவருக்கு பொருத்தம் இல்லை என்றும் தெரிகிறது. ஆனால் இவரை விட என்னைப் புரிந்து கொண்டு நடக்கும் ஒரு துணை அமையாது என்பதும் உண்மை. அதனால் தான் பேசாமல் படித்துக் கொண்டே அதை சாக்காக வைத்து நாட்களை கடத்திவிடலாம் என்று முடிவெடுத்தேன். அதோடு அருண் மனதிலும் என்ன இருக்கிறது என்று தெரியாமல் நான் எப்படி.. அதனால் தான் தயங்கினேன்'' உமா சொல்லிக் கொண்டிருக்கும் போதே அருண் அவசரமாய்,

''ஹய்யோ உமா! என் மனதில் நீதான்.. நீ மட்டும் தான் இருக்கிறாய். உன்னிடம் திட்டுவாங்காவிட்டால் எனக்கு சாப்பாடு இறங்காது. அதற்காகவே உன்னை வம்புக்கு இழுப்பதற்காகவே அடிக்கடி உங்கள் வீட்டிற்கு வருவேன். என்றாலும் மனதை வெளியில் சொல்ல முடியவில்லை. அம்மாவை அம்மா என்றே அழைக்கிறேன் சிறுவயது முதலே.. அதனால் தான் என்னை பாகுபாடு இல்லாமல் உன்னோடு பேச பழக அனுமதித்தார்கள். இதில் எதும் களங்கம் வந்துவிடக்கூடாது என்று தான் என் திருமணத்தை தள்ளிக் கொண்டே போகிறேன்.'' என்றான். உமாவின் முகம் பூவாய் மலர, அருண் அந்த முகத்தை ரசனையோடு பார்த்தான்.

சபாபதி எழுந்தார். ''ம். சின்னதுகள் எல்லாம் பெரிய பெரிய வேலைகளை செய்திருக்கிறது சரோ. அவர்களது துணையை அவர்களே தேர்ந்தெடுத்துவிட்டதுகள். இனிநானும் நீயும் எதற்கு? வா போகலாம்!''

என்றதும் சரோஜினியும் எழுந்தாள்.

சந்துருதான் அவசரமாய் தந்தையிடம் ஓடினான். ''அப்பா! என்ன வார்த்தை சொல்லிவிட்டீர்கள். என்னை விடுங்கள். நம் அருணிற்கு என்னப்பா குறை? அவனை உமா விரும்பியதில் ஒரு தவறும் இல்லையே. அவர்கள் ஒன்றும் ஜோடியாய் வெளியே சுற்றித்திரியவில்லையே. நம் குடும்பத்திற்காக ஒருவர் அறியாமல் மற்றொருவரை விரும்பியது தவறா?''

அவசரமாய் பதட்டமாய்க் கேட்டான்.

''டேய் பொறுடா. நீ வெண்ணிலாவை கட்டிக்கொள்ள யாரிடமும் அனுமதி கேட்க வேண்டாம். ஆனால் என்மகள் விரும்பிய மாப்பிள்ளையை என் சம்பந்தியிடம் நானே போய்க் கேட்க வேண்டும். இல்லையென்றால் அவன் என்னைச் சும்மா விடுவானா? நானும் அம்மாவும் போய் தணிகாசலத்தைப் பார்த்து பேசி நாள் குறித்துவிட்டு வருகிறோம்.

அருண்.. நீயும்.. ஓ! இனி மாப்பிள்ளை என்று அழைக்க வேண்டுமே.. மாப்பிள்ளை நீங்களும் வந்தால் உங்களை வைத்துக்கொண்டே பேச வசதியாக இருக்கும். வருகிறீர்களா?'' - எனக்கேட்டார் சபாபதி.

''இந்த வீண் மரியாதை எல்லாம் எதற்கு அப்பா? நானும் வர்றேன்..'' என்றவாறு உமாவிடம் பார்வையால் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான். ''அப்பா! பெண்ணிற்கு அண்ணன் என்ற முறையில் நானும் வருகிறேன்.'' என்றவாறு சந்துருவும் புறப்பட, ''அதுவும் சரிதான். அம்மாடி கண்ணுகளா. மணியம்மையும் ஊரிலிருந்து வரவில்லை. பத்திரமாக வீட்டைபூட்டிக் கொள்ளுங்கள். வரட்டுமா'' - என நால்வருமாய் புறப்பட்டுச் செல்ல, பெண்கள் இருவருமாய் வீட்டைப் பூட்டிவிட்டு தங்களது அறைக்குள் நுழைந்து தங்களின் துணையை எண்ணி கனவில் மிதக்க ஆரம்பித்தனர். வானத்தில் நிலவு வளர்பிறையாய் வளர்ந்து கொண்டிருந்தது.

**அன்று வந்ததும் இதே நிலா**
**இன்று வந்ததும் அதே நிலா**
**என்றும் உள்ளது ஒரே நிலா**
**இருவர் கண்ணிற்கும் ஒரே நிலா**

## 12

''நீ என்னடா சொல்றே. நல்லா பாத்தியா, அவதானா? அவ எப்டிடா கார்ல வருவா-'' எனக் கேட்டாள் சுந்தரி.

''நான் என்ன பொய்யா சொல்றேன். நிசம்தான் பெரியம்மா. பெரிய கும்பலோட சரவணா ஸ்டோர்க்கு வந்திருந்தா. நிறைய ஜவுளி எடுத்தாங்க. அப்புறம் நகைக் கடைக்கும் போய் ரொம்ப நேரம் கழிச்சுத் தான் திரும்பினாங்க. ஒரே கும்மாளமும் சிரிப்புமா இருந்தாங்க பெரியம்மா. ஜவுளிய பார்த்தா கல்யாணம்னு நினைக்கிறேன். வெண்ணிலாவும் இப்போ ரொம்ப அழகா கலரா மாறிட்டா. எனக்கே முதல்ல சந்தேகம்தான். பின்னாலேயே போனேன். அது வெண்ணிலாவே தான். ஒருத்தன் நிலான்னு கூப்பிடுறான். ரெண்டு பேர் ரொம்ப அழகா வாட்டசாட்டமா இருந்தான் பெரியம்மா. அதுல எவன் மாப்பிள்ளைன்னு தெரியல. ஆனா அவங்க பேசினதைக் கேட்டப்போ இன்னும் ரெண்டே நாள்ல கல்யாணம்னு சொன்னாங்க.

எல்லாம் உன்னாலதான் பெரியம்மா. குருசாமிக்கு மூத்தவள கட்டும்போதே நானும் வெண்ணிலாவைக் கேட்டேனில்ல. அப்பவே கட்டிக் கொடுத்திருந்தா இப்படி ஓடியிருப்பாளா? நானும் ஆட்டோ ஓட்ற காசை அப்படியே உன் கையில கொடுத்திருப்பேன். நிஜம்னு மகாராணியாட்டம் இருந்திருப்ப. இப்பப் பாரு அவ எனக்கும் இல்லாம குருசாமிக்கும் இல்லாம உனக்கும் சம்பாதித்து போடாம மகாராணி மாதிரி கார்ல போறா. ஆளு சும்மா சினிமா ஸ்டார் மாதிரி ஆயிட்டா பெரியம்மா. நீதான் பாவம். தினம் தினம் வீட்டு வேலை செஞ்சு இளைச்சிட்டே போற-'' பரிதாபப்படுவதைப் போல் ஏற்றிவிட்டான் ஆறுமுகம். சுந்தரியின் கணவனின் தம்பி மகன். வெண்ணிலாவை சுற்றி வந்து ஏமாந்தவன்.

இன்று அவள் அழகான ஆண்களோடும் செல்வந்தர்களுடனும் வந்து இறங்கிய தோரணையில் வயிறு எரிந்து எங்கே பற்ற வைத்தால் வேலை நடக்கும் என்று புரிந்து தன் ஆட்டோவை எடுத்துக் கொண்டு பாய்ந்து வந்திருந்தான். வந்த காரியமும், இனிதே முடிந்தது. சுந்தரி முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. வேலை செய்யாமலே தின்று பருத்த உடம்பு. மற்றவர்களை வேலை ஏவிய பழகிய திமிர். இன்று அனைத்தையும் இழந்து குடிகார கணவனுக்குமாய் சேர்த்து உழைக்க வேண்டிய அவல நிலை. வேலை செய்தால் தான் சாப்பாடு என்ற நிலை. எச்சில் பாத்திரங்களையும் அழுக்கு துணியையும் துவைத்துக் கழுவி இடையிடையே வீட்டுக்கார பெண்மணிகளிடம் திட்டும் வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டும். இவையெல்லாம் யாரால் வந்தது. அந்தச் சண்டாளியால் வந்தது. அவளை விடக்கூடாது. மனம் கருவ ஆறுமுகத்தைப் பார்த்தாள் சுந்தரி.

''அந்த ஓடுகாலி இப்படி ஆவாள்னு தெரியாமப் போச்சேடா. எம்புள்ளைய பலி கொடுத்த சோகத்தில அடிச்சு விரட்டிட்டேன். எப்படியும் இங்கேதான் சுத்திட்டு இருக்கும். நம்ம காலை தேடித்தான் வரும்னு பார்த்தேன். இவ இப்படி ஓடுவான்னு நினைக்கலியே. இப்பத்தான் நம்ம பார்வையில விழுந்திட்டாள்ல. இனிமே விட்டுறுவேனா நான். ஏன்டா, கார் எங்கே போச்சு. அவ வீடு எங்கன்னு பார்த்தியா. கோட்டை விட்டுட்டு வந்திட்டியா?'' என்றாள்.

''அட என்ன பெரியம்மா நீ அதெப்படி விடுவேன். பெட்ரோல் வீணானாலும் பரவாயில்லைன்னு அந்த காரு பின்னாடியே போனேன். திருவல்லிக்கேணியாண்டதான் கடற்கரை பக்கத்திலேயே எவ்ளோ பெரிய வூடுன்ற. சொம்மா கல்யாண மண்டபம் மாதிரி இருக்குது பெரியம்மா. அது எல்லாம் பணக்காரங்க ஏரியாதான். அதிலயும் அந்த வீடு என்னா அம்சமா இருக்குதுன்ற? வெண்ணிலாவுக்கு அதிர்ஷ்டம் தான் கழுதையா பொறந்தாலும் கால்காசு யோகத்தோட பொறக்கணும் பெரியம்மா- என்றான்.

டேய் நிறுத்துடா. உனக்குத்தான் வீடு தெரியுமில்லே. வா என்கூட. ஆட்டோவை எடு. பெட்ரோலுக்கு நான் காசு தர்றேன். உடனே போயி அவளை கையோட கூட்டிட்டு வந்திடலாம் கிளம்பு-'' என்றவளை கையமர்த்தினான் ஆறுமுகம். ''இரு பெரியம்மா அவசரப்படாதே. இப்பவே எட்டு மணியாகப் போகுது. ராத்திரியில போறது அவ்வளவா சரிப்படாது. விடிஞ்சதும் போவோம். அது ஒன்னும் குப்பம் கிடையாது. கிடைச்சதை தின்னுட்டு இருட்டினதும் தூங்கிறதுக்கு. அது பெரிய பெரிய பணக்காரங்க இருக்கிற இடம். எல்லாம் வேலை முடிஞ்சு வீட்டுக்கு வந்திருப்பாங்க. இப்பப் போயி நாம தகராறு பண்ணினா மொத்தமா சேர்ந்து மொத்திடுவானுங்க. அதோட ராத்திரி நேரம் கூர்க்கா கூட நடமாடுவான். அதான் சொல்றேன். நாளைக்கு விடிஞ்சதும் போவோம்- என்றான் ஆறுமுகம்.

''நீ வேறடா. இப்ப போனாத்தான் கூட்டம் கூடினா அசிங்கமாச்சேன்னு அவனுங்க மறு பேச்சு பேசாம அவளை நம்ம கூட அனுப்பி வைப்பானுங்க. எல்லாம் நான் பார்த்துக்கிறேன் நீ வாடா. கிளம்பு.'' தலை முடியை உதறிக் கொண்டையாய் முடிந்து கொண்டு கிளம்பினாள் சுந்தரி. தலையை சொறிந்தான் ஆறுமுகம். அய்ய என்ன பெரியம்மா நீ. சொன்னா புரிஞ்சுக்க மாட்

''என் வீட்டுகாரர் கோலம் போடறார்ன்னு யார் உனக்கு சொன்னது?''

''காலைலே கோலம் போட்ட என் வீட்டுக்காரர்தான் சொன்னார்!''

-ஏகாதசிகா, மதுரை



வெண்ணிலாவை பார்த்தேனா. அதுவும் டேக்கிறியே ரொம்ப நாள் கழிச்சு வெண்ணிலாவை பார்த்தேனா. அதுவும் அவ்வளாட்டம் இருந்தாளா. எனக்கு ரொம்ப பீலிங் ஆயிடுச்சு. அவ நினைப் புல கொஞ்சம் ஊத்திட்டேன். சிட்டிக்குள்ள குடிச்சிட்டு வண்டியோட்டினா போலீஸ் புடிச்சிடும் பெரியம்மா. அதனாலதான் சொல்றேன்- என்றான்.

''போடா போடா போக்கெட்ட பயலே. பீலிங்காம் பீலிங். எனக்கு அவ இப்பவே வேணும்டா. நாளைக்கு பொழுது விடிஞ்சா என் வேலையை அவ தான் பார்க்கணும். வேலைக்குப் போகலேன்னா வேலை போயிடும். நான் காலையில உங்கூட வந்தா இங்குள்ள வேலையை யார் பார்ப்பா. அதனால நீ போயி உன் கூட்டாளி அதான் அந்த பாபுப்பயல கூட்டிட்டு வா. அவன் ஆட்டோ ஓட்டட்டும். நீ சும்மா ஒரு சப்போட்டுக்கு என்கூட வா. உனக்கு வெண்ணிலா வேணும்னா உடனே கிளம்பு-'' என்றாள் சுந்தரி. கடைசி வார்த்தை சரியாய் வேலை செய்ய அடுத்த ஐந்தாவது நிமிடம் மூவருடன் ஆட்டோ சிறிப்பாய்ந்தது.


இந்த நிலாவிற்கு இன்று என்ன ஆயிற்று? ஏன் வெளியே வராமல் தன் முகத்தை மேகத்தினுள்ளே மறைத்துக் கொண்டிருக்கிறது. அதன் உடல் முழு வதும் கரும் மேகங்கள் வேறு சூழ்ந்திருக்கிறதே. பத்து நாட்களாய் படிப்படி யாய் வளர்ந்து வந்த அழகு நிலா இன்று கண்ணில் படாமல் போகவே வெண் ணிலா மொட்டை மாடியில் ஒவ்வொரு மூலையிலும் நின்று சரிந்து பார்த் தாள்.ம்ஹூம். கண்ணில் படவே இல்லை. சோர்ந்து போய் நின்றவளின் அருகே அசைவு தெரிய நிமிர்ந்தாள். ''என்ன அம்மாவின் பழக்கம் பெண்ணிற்கும் வந்து விட்டதோ ஆமாம் எங்கே உன் நிலாவை காணோம்-'' என்றவாறு அங்கே நின்றான் சந்துரு.

''அதைத்தான் நானும் தேடுகிறேன். நேற்று வரை அழகாய் வளர்ந்து வந்த நிலா இன்று மறைந்து கொண்டு என்னிடம் கண்ணா மூச்சி ஆடுகிறது.''- என்றாள் முகம் வாடிப்போய்

''என்ன? என் நிலாப்பொண்ணின் முகம் வாடுவதா. அதை நான் பார்ப் பதா. ஏய் நிலா! நீ எங்கே ஒளிஞ்சிட்டு இருந்தாலும் வெளியே வந்திரு. என் பொண்டாட்டி உனக்காக வெயிட் பண்றா. உன்னைப் பார்த்தால் தான் சாப்பி டுவாளாம். இப்போது நீ வருகிறாயா இல்லையா'' - என குரல் கொடுத்தான்.

காற்று சிலுசிலுவென வீசி அவர்களது ஆடைகளைக் கலைத்து விளையாட புடவையை இழுத்து செருகினாள் வெண்ணிலா. காற்றின் வேகத்திற்கு மேகங்கள் கலைந்து விலகி ஓட நிலா தன் முகத்தை வெட்கமாய் காட்டியது. ''பார்த்தாயா? உன் நிலவு வந்து விட்டது.''- என சந்துரு சொன்னதும் நிமிர்ந் தாள். ''அட! ஆமாம். சொன்னவர் என் அத்தான் ஆயிற்றே. பிறகு வராமல் இருக்குமா என்ன? நான் கூப்பிடும் போது நீ வரவில்லை தானே. உன்னுடன் நான் காய். வாருங்கள் அத்தான் போகலாம்''- என செல்லக்கோபத்துடன் திரும்பி நடந்தவளை தோள் பற்றி திருப்பினான் சந்துரு. தன் அருகில் நெருக் கிக் கொண்டு, ''ஆமாம்! இதென்ன புதிதாய் அத்தான்..ம்..? - என்றான் வெண்ணிலாவின் முகம் நாணத்தில் கவிழ்ந்தது.'' அது.. அப்படித்தான்...'' என்றாள்

''எது எப்படித்தான்?''- அவள் முகத்தை நிமிர்த்தினான்...''இல்ல, இன் னும் ரெண்டு நாள்ல நமக்கு கல்யாணமில்ல..அதற்கப்புறம் உங்களை எப் படி கூப்பிடுவதாம். அதனால்தான் பழைய சினிமாப் பாட்டுகளில் பெண்கள் தங்கள் கணவர்களை அழைப்பார்களே. அதுபோல அத்தான் என்று அழைக்க



லாம் என்று எனக்கே நானே பலமுறை அழைத்துப்பார்த்தேன். நன்றாகத்தான் இருந்தது. உங்களுக்கு பிடிக்கவில்லையா அத்தான்..'' வெகுளியாய்க் கேட்டவளைப் பார்த்து சிரித்தான் சந்துரு.

''ஏன்? அதற்கு முந்தைய காலப்படங்களில் அழைப்பார்களே நாதா பிராணநாதா என்று அப்படி அழைப்பது தானே..'' - என்றான் கேலியாய்.

''பி..ராண..நாதா..வா'' - என அவள் பொங்கிச் சிரித்தாள் கேலியாய்..

''அசட்டுப் பெண்ணே நீ புதுப்படங்களே பார்ப்பதில்லையா? - ம்ஹூம் - என தலையசைத்தாள்.. ''அதில எப்படி கூப்பிடுவாங்க?'' என்றாள் ஆர்வமாய்.

''ஹனி! டார்லிங்.. ஸ்வீட் ஹார்ட்.. டேய் புருஷா..வாடா போடா என்று பெயரைச் சொல்லித்தான் அழைப்பார்கள்.'' - என்றதும் காதைப் பொத்திக் கொண்டாள். ''அதெல்லாம் நமக்கு சரிவராது. நான் இப்படியே அழைக்கிறேன். நான் எப்படி அழைத்தாலும் நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.'' - என்றாள் உத்தரவாக..''அப்படியே ஆகட்டும் மகாராணி தலைதாழ்த்தி வணங்கினான்.'' சிரித்தவாறு நகர்ந்தவளை பிடித்து நிறுத்தினான் சந்துரு. ஏன் ஓடுகிறாய். கொஞ்சம் நில்லேன். பேசிக்கொண்டிருக்கலாம்.'' என்றான். அவனது ஆடால கரங்களில் அவஸ்தையாய் நெளிந்தாள்..''அது தான் காலமெல்லாம் பேசப் போகிறோமே. இப்போது இது தப்பு. வீட்டில் பெண் பிள்ளையை வைத்துக்கொண்டு நாம் இங்கு வந்து தனியாய் நிற்பதே தப்பு. உமா நம்மைப் பற்றி என்ன நினைப்பாள். போகலாம்.''- என்றவாறு திரும்பி நடந்தாள்.

''சரி போகலாம். ஆனால் உனக்கு ஒன்று தர வேண்டும் என்று தான் மேலேயே வந்தேன். இந்தா வாங்கிட்டுப் போ''- என்றதும் திரும்பியவளை அணைத்து முத்தமிட்டான். முதல் முத்தம். வாழ்க்கை முழுவதுமாய் நினைத்துப்பார்த்து கன்னம் சிவக்க வைத்த முத்தம். ஒரு கணம் ஏதும் புரியாமல் நின்றவள் அவனது முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தவனின் மார்பில் வெட்கத்தோடு புதைந்து கொண்டாள். இப்போதும் இதமான சூட்டோடு கதகதப்பாய் இருந்த அணைப்பு தன் தாயின் மடியையே நினைவுபடுத்த அன்று உமா பார்த்தது போல் யாரேனும் பார்த்து விட்டால்..சட்டென விலகினாள். அப்போது தான் அந்த சத்தம் இல்லை...கூச்சல்.. இருவரின் செவியையும் தீண்டியது.

''சந்துரு உங்களுக்கு கேட்கிறதா. கீழே ஏதோ சத்தம் கேட்கிறது..யாரோ சண்டை போடுவதைப் போல்.. சீக்கிரம் வாருங்கள்..'' - மட மட வென படிகளில் இறங்கினாள்.

''செல்லம்! பார்த்து இறங்கு..இங்கே யார் சண்டை போடுவது டி.வி.யில் அம்மா ஏதேனும் எபிசோட் பார்த்துக்கொண்டிருப்பார்கள்.''- என்று இயல்பாய் சொல்லிக்கொண்டே இறங்கியவனின் காதுகளில் தன்தந்தையின் குரலும் கேட்க துரிதமாய் இறங்கினான். ''நீ மட்டுமல்ல.. அந்த ஆண்டவனே வந்துசொன்னாலும் என் மருமகளை நான் அனுப்புவதாக இல்லை. உன்னால் என்ன முடியுமோ செய்து கொள். முதலில் நீ கிளம்பு. உன்சொத்தை படைகளை கூட்டிக்கொண்டு ஓடிவிடு. என் மகன் கோபக்காரன். அவன் வந்தால் பிறகு என்னால் தடுக்க முடியாது. ம்..கிளம்பு..''- அதட்டலாக ஒலித்த சபாபதியின் குரலோடு..''என்னய்யா, மிரட்டிப் பார்க்கிறியா..நான் பனங்காட்டு நரி. இந்த சலசலப்பிற்கெல்லாம் அஞ்சமாட்டேன்.. முதல்ல அந்த ஓடுகாலியைக் கூப்பிடு,''- என ஆங்காரமாய் ஒலித்தது ஒரு பெண் குரல். மூச்சுவாங்க ஓடி வந்த சந்துரு வாசலுக்கு வெளியே நின்று கத்திக்கொண்டிருந்த பெண்



ணைப் பார்த்துவிட்டு ''அப்பா என்னாச்சு..? யார் இது. ஏன் இப்படி தெருவில்நின்று சத்தம் போடுறாங்க..- என்றான் தந்தையைப் பார்த்து.

சந்துருவின் பின்னேயே ஓட்டமும் நடையுமாய் வந்த வெண்ணிலா ஆணியடித்தார் போல நின்றுவிட்டாள். கண்களை உருட்டி மிரட்டிக்கொண்டு இடுப்பில் கை வைத்து கத்திக்கொண்டிருந்த சுந்தரியைக் கண்டதும் உடல் வெலவெலத்துப் போயிற்று. கூடவே ஆறுமுகம் நின்றதும் ஏதோ பிரச்சனை செய்யத்தான் வந்திருக்கிறார்கள் என புரிந்து போயிற்று. பேச்சு வராமல் நாக்கு ஒட்டிக்கொள்ள சந்துருவின் கரங்களை அழுந்தப்பற்றிக்கொண்டு மூச்சு திணறினாள் வெண்ணிலா. ''சந்துரு.. இது..இதுதான் அத்தை..'' அவள் சொல்லி முடிந்ததும் ரௌத்திரமானான் சந்துரு.

**கவலைகள் மறக்குதே**
**கவிதைகள் பிறக்குதே**
**உன்னருகில் நானிருந்தால்**
**தினம் உன்னருகில் நானிருந்தால்!**

## 13

வெண்ணிலாவிற்கு கண்களை இருட்டியது. மூச்சுத்திணறியது முடிந்தது எல்லாம் முடிந்தது. கனவுபோல் வாழ்ந்த இந்த சில நாட்கள் முடிந்தேவிட்டது. மனக்கோவிலில் நுழைந்து உடலில் இணைந்து உயிரான சந்துருவை விட்டு பிரியப்போகிறோம். அவன் தந்த முதல் முத்தமே கடைசி முத்தமுமாய் போயிற்றே. இனி அவன் தனக்கில்லை. அந்த அன்னை மடி எனக்கில்லை. இந்த அன்பு இல்லம் எனக்கில்லை. என் அன்னையின் மறு உருவமாய் நான் கண்ட என் மாமா எனக்கில்லை. எல்லாவற்றையும் மொத்தமாய் அழிக்க வென்றே வந்துவிட்டாளே. இனிதினம் தினம் இவள் முகத்தில் விழித்து இவள் இடும் கட்டளைக்கு பணிந்து இவளுக்கு அடிமையாய் வேலைகளைச் செய்து..அதைக்கூட செய்து விடலாம். ஆனால் இவனை.. இந்த ஆறுமுகத்தை எப்படி மணக்க முடியும். இதற்கு முன்பே இவனை அடியோடு வெறுத்தவள்... இப்போதோ மனம் முழுக்க சந்துரு இருக்கும் போது இன்னொருவனை எண்ணியும் பார்க்க முடியாதே.. இவனை எப்படி கணவனாக ஏற்க முடியும். அதற்கு பதில் ஒரேயடியாக மூச்சை நிறுத்திவிடலாமே.. அதற்கும் என் சந்துரு விடமாட்டாரே..நான் என்ன செய்வேன். என்னால் என்ன செய்ய முடியும்? உண்மையாகவே மயங்கிச் சரிந்தாள் வெண்ணிலா..''தம்பி.!நிலாவைப் பாரடா.'' - என சரோஜினி வீறிட்டதும் தான் திரும்பிய சந்துரு ஓடிவந்து அவளைத் தாங்கிப்பிடித்து தூக்கிக்கொண்டு வீட்டினுள் ஓடினான். படுக்கையில் கிடத்திவிட்டு ''அம்மா! நீங்கள் இவளைக் கவனித்துக்கொள்ளுங்கள். தேவை என்றால் டாக்டருக்கு போன் பண்ணுங்கள் . உமா நான் வெளியேறியதும் கதவை உள்ளே பூட்டிக்கொள். நாங்கள் அழைக்காமல் நீங்கள்யாரும் வெளியே வரவேண்டாம். அம்மா ஜாக்கிரதை,''- தந்தி வேகத்தில் செய்தியைச் சொல்லிவிட்டு காற்றாய் வெளியேறினான் சந்துரு. உமா கதவைப்பூட்டிவிட

''அப்பா! போலீசுக்கு போன் பண்ணிட்டேன். இன்னும் பத்து நிமிஷத்தில் வந்திடுவாங்களாம்.''- என்றான் சந்துரு. போலீஸ் என்றதும் ஆறுமுகமும் பாபுவும் பின்வாங்கிட சுந்தரி எகிறினாள்.

''என்ன பூச்சாண்டி காட்டுறியா..போலீஸ் வரட்டும்.. வரட்டும்.. அவங்க கிட்டயே நான் நியாயம் கேட்கிறேன். எங்கவூட்டு பொண்ணை நீ வீட்டுக்குள்ள

வெச்சுட்டு என்னையே பயமுறுத்திறியா. வரட்டும் போலீஸ் வரட்டும்..'' - என்றான் சற்றும் அசராமல்

''பெரியம்மாவா பெரியம்மா. போயிடலாம்.. அவளுக்கு ஏதோ அதிர்ஷ்டம். அவளாவது நல்லா இருந்துட்டு போகட்டுமே. நாம ஏன் ஜெயில்ல களி திங்கணும்.. வந்திரு பெரியம்மா.'' - ஆறுமுகம் பயந்து சாக, ''ச்சி. வாயை மூடுடா. நாம எண்டா களி திங்கணும். இவனுங்களைத்தான் ஜெயிலுக்கு அனுப்பி வைக்கணும். நம்மவூட்டு பொண்ணை கடத்திட்டு வந்திட்டாங்கன்னு நான் சொல்வேண்டா. அப்போது இவனுங்க என்ன பண்ணுவானுங்க...'' - கெத்தாய் கேட்டவளைப் பார்த்து சிரித்தார். சபாபதி.

''நீ ஒரு வடி கட்டின முட்டாள்னு தெரியும். ஆனா இப்படி ஒண்ணும் தெரியாத களிமண்ணா இருக்கியே. வெண்ணிலா உன் வீட்டுப் பெண்ணில்லை. என் மருமகள் என் உடன் பிறந்த தங்கை சாவித்ரியின் மகள். நான் அவளுக்குத் தாய்மாமன். யாரு? தாய்...மாமன்...'' அழுத்திச்சொன்னார். சுந்தரியின் ஆட்டம் நின்று போக வாயைப் பிளந்தாள்.

''இதுக்கே வாயைப்பிளந்தால்எப்படி? இன்னும் இரண்டு நாளில் கல்யாணம் செய்து கொள்ளப்போகும் பெண்ணை இரண்டு குடிகாரர்களை அழைத்துக்கொண்டு ஒருத்தி கடத்தப்போகிறாள் என்றுதான் போனில் சொல்லியிருக்கிறோம். ஆனால் போலீஸ் வந்த பிறகு இன்னும் நிறையச் சொல்லுவேன். என் ஒரே தங்கை சாவித்ரியை அக்காவும் தம்பியுமாய் சேர்ந்து ஏமாற்றி அவளது நகைகளையும் பணத்தையும் எடுத்துக்கொண்டு ஓடிவிட்டனர். எனது தங்கையைக் கொன்று விட்டனர் என்றும் புகார் கொடுப்பேன். அதோடு என் மூத்த மருமகளையும் பேரனையும் இவள் பிள்ளைதான் கொன்றான். அதற்கு இவளும் இவள் கணவனும் உடந்தை என்று சொல்வேன். உன்னை ரொம்ப நாளாய் தேடினேன். நீ என் கண்ணில் அகப்படவில்லை. இன்று நீயாவே வந்து மாட்டிருக்கிறாய். விட்டு விடுவேனா.

என் தங்கையின் வாழ்வை சீரழித்த உன்னை தூக்கில் ஏற்றாமல் ஓயமாட்டேன். நீ செய்த அத்தனை தப்பிற்கும் என்னிடம் சாட்சி இருக்கிறது. வெண்ணிலாவை வைத்தே உன்னை தூக்கு மேடை ஏற வைக்கிறேன். சந்துரு கேட்டை இழுத்து மூடுடா. அவனுங்களையும் பிடி. இவளுக்கு துணையா அனுப்பி வைப்போம்'' என்றார் சபாபதி.

''ஸார்.. வேண்டாம் ஸார்.. நான் சும்மா ஆட்டோ ஓட்டிட்டு வந்தவன் சார். என்னை விட்டுடுங்க. நான் புள்ளகுட்டிக்காரங்க ஸார்.'' - பாபு கண்ணீர்விட்டான்.

''ஸார்.. நானும் பெரிய ரௌடி எல்லாம் கிடையாது ஸார். வெண்ணிலாவை கட்டிக்கணும்னு ஆசைப்பட்டேன். அவளஉங்ககூட பார்த்ததும் மனம் கேளாம எங்க பெரியம்மாவாண்ட போய் சொல்லிட்டேன். இது மட்டும்தான் ஸார் நான் செய்த தப்பு. மத்தபடி நான் தைரியசாலி கிடையாது ஸார். போலீசை பார்த்தாலே பாதி செத்து விடுவேன். எனக்கு போலீஸ்னா அவ்ளோ பயம் ஸார். எங்களை வுட்டுடுங்க சார். போலீஸ் வரமுன்னால ஆட்டோவை எடுத்திட்டு போயிடுறோம். இது சொந்த ஆட்டோ இல்ல சார். ஓனர்கிட்டே போய் கொடுக்கணும். இனிமே இந்தப்பக்கம் வரமாட்டேன் ஸார். என் ஆத்தா மேல சத்தியம் ஸார்'' - ஆறுமுகம் பயத்தில் உளற அவனை நெருங்கினான் சந்துரு. ஒற்றைக்கையால் அவன் முகத்தை பற்றினான்.

''இந்த மூஞ்சிக்கு வெண்ணிலா கேட்குதா. அவ பேரைக் கூட சொல்லக் கூடாது நீ. சொல்லியாடா இனிமே...'' - சந்துருவின் மிரட்டலில் இன்னும் நடுங்கினான். ''இல்ல ஸார் அந்த பேரில் எனக்கு யாரையுமே தெரியாது. வுட்டுடுங்க ஸார்.'' - என்றான் நடுங்கியவாறே.

''ஓடிப்போங்கடா! உங்க பெரியம்மா இனிமே அங்க வரமாட்டா. அவகாலம் ஜெயிலில்லயே முடிஞ்சிடும். போ. ஓடிடு.'' - விட்டால் போதும் என அவர்கள் விழுந்தடித்துக்கொண்டு ஓட ஆட்டோ ஒரே நொடியில் மறைந்தது.

பயமாய் பின்னால் திரும்பிப்பார்த்தாள் சுந்தரி. உண்மையாகவே அவர்கள் சென்றிருக்க உடல் உதறியது. ''உனக்கு இப்போ ஜீப் வரும். நீ அதில போகலாம்.'' - என்றார் சபாபதி

''இதோ பாருய்யா. சாவித்ரிய ஒன்னும் நான் கொல்லல. அவதான் உடம்பு முடியாம செத்தா. அதுக்கு நான் என்ன பண்ணுவேன். வெண்ணிலா என் தங்கை மக. இனிமே அவ எங்ககூடத்தான் இருப்பான்னு சொன்னா நான் பாட்டுக்கு போகப்போறேன். அதுக்கு நீ என்னவோ போலீஸ் அது இதுன்றியே. ரெண்டு நாள்ல கல்யாணம்ற. கல்யாணம் நடக்குற வீட்டுக்கு போலீஸ் வந்தா நல்லாவா இருக்கும். ஏதோ நாம வளர்த்த பொண்ணு தப்பான இடத்தில வந்து மாட்டியிருக்குமோன்னு பயந்து போய் வந்தேன். அதுக்கு போய் நீ என்னையே மாட்டிவுடுறியே. எங்க இருந்தாலும் அவ நல்லா இருந்தா போதும். எனக்கென்ன புள்ளையா குட்டியா. என் புருஷன் தேடும். நான் போறேன். நீயாச்சு. உன் மருமகளாச்சு. நான் எதுக்கு மூணாவது மனுஷி?''. பேசிக்கொண்டே நழுவியவள் ஏதோ வாகனம் வருவதை உணர்ந்து பதறயடித்து தலைதெறிக்க ஓடினாள். சபாபதியும் சந்துருவும் அடக்க முடியாமல் சிரித்து விட அருணின் கார் உள்ளே நுழைந்தது. காரிலிருந்து இறங்காமலே, ''என்னாச்சு, சந்துரு. ஏன் அந்த லேடி உன் வீட்ல இருந்து ஓடுறாங்க.. எதையும் திருடிட்டு ஓடுறாங்களா?'3 - எனக்கேட்டான் அருண்.


''ஓ! அருண். அது பெரிய கதை. கொஞ்சம் டேஞ்சரானதும் கூட. எப்படியோ தொடங்கி எப்படியோ முடிஞ்சது. எல்லாம் அப்பாவால் தான் சமாளிக்க முடிந்தது. நானே ஒரு நிமிடம் திணறிவிட்டேன். அருண் தேங்க்ஸ்ப்பா. தேங்க்யூ ஸோமச்.. உங்களால் தான் என் உயிர் என்னிடம் பத்திரமாய் கிடைத்திருக்கிறது. இல்லையென்றால் என் நிலை ஓ...நோ...'' - கண்களை மூடினான் சந்துரு.

''அப்பா புள்ளைக்குள்ள என்னப்பா தேங்க்ஸ். அவளைப் பார்த்த உடனேயே ஒரு படிக்காத முட்டாள். வெறும் அல்டாப்பு பார்ட்டி என்று தெரிந்துவிட்டது. அதனால் தான் ஒரு பிடி பிடித்துவிட்டேன். இனி இந்தபக்கமே திரும்ப மாட்டாள் பாரேன்.' - என்றார் சபாபதி சிரித்துக்கொண்டே.

''நதி கடல்ல கலக்கிறது பார்த்து குடிகாரன் என்ன சொன்னான்...?''

''சரக்குலே சோடா கலக்குற மாதிரி இருக்காம்...''

-ஜே.தனலட்சுமி, கோவை



நிஜமாகவே போலீஸ்ல
''அவளை அப்படியே விட்டிருக்கக்கூடாதுப்பா. அதற்கான தண்டனையை மாட்டிவிட்டிருக்கணும். அத்தையைச் சாகடிச்சால்ல. அவ அனுபவிக்க வேண்டாமா?''- என்றான் கோபமாய். மகனின் அருகில் வந்து மகனை பரிவாய் தோளோடு அணைத்துக் கொண்டார் சபாபதி. ''அப்படி இல்லடா தம்பி! அவளுக்கு இந்த மிரட்டல் போதும். நல்லவளோ கெட்டவளோ அந்த ஊதாரிப் பய ஓடினபிறகும் என் தங்கைக்கு வாழ இடம் தந்திருக்கிறா. அவ பிள்ளைகளையும் பிச்சை எடுக்க விடாம கௌரவமா வளர்த்திருக்கா. நாம அந்த நன்றிக்கடனை மறக்கக்கூடாதுப்பா. அதனாலதான் வெறும் மிரட்டலோட விட்டுட்டேன். இப்போ வெண்ணிலா நம்ம பாதுகாப்புல இருக்கிறதால யாரும் வரமாட்டாங்க. நீயும் அவளும் இனிமே சந்தோஷமா வாழலாம். ஏன் மேலும் மேலும் பகையை வளர்க்கணும். நீங்க வாழ வேண்டிய பிள்ளைங்கடா. வா உள்ளே போவோம். எல்லோரும் பயந்திட்டு இருப்பாங்க.''- என்றார்.

''அய்யோ! என் தலையே வெடிச்சிடும் போலிருக்கு. இங்க என்னதான் நடக்குது''- என்றான் அருண். ''முதல்ல உள்ளே வா சொல்றேன். ஆமா நீ என்னடா இப்போ வந்திருக்க. கல்யாண மாப்பிள்ளையா லட்சணமா வீட்ல இருக்காம நைட்ல இங்க என்னடா உனக்கு வேலை.. ம்..?''- என்ற சந்துருவை முறைத்தான் அருண். ''ஏன்டா.. கேட்கமாட்டே. உமாகிட்ட இருந்து போன் வந்தது. உடனே புறப்பட்டு வா. ரொம்ப அர்ஜெண்ட்னு. என்னவோ ஏதோன்னு நூற்று இருபதுல பறந்து வந்தால் நீ ஏன் வந்தாய் என்று கேட்கிறாய். சரி நான் போகிறேன்.''- என்றவாறு திரும்பினான்.

''ஏய்! போதும் போதும். இப்பவே மாப்பிள்ளை முறுக்கை காட்டாதே. உள்ளேவா எல்லாம் சொல்கிறேன்.''- என்றவாறு கதவைத் தட்டினான் சந்துரு. ''உமா! கதவைத்திறடா''- என்றதும் வெண்ணிலாவின் குரல் வீறிட்டது. ''வேண்டாம் உமா. கதவைத் திறக்காதே. நான் போகமாட்டேன். அத்தே! என்னை அனுப்பி விடாதீர்கள். உங்களை விட்டு என்னால் போகமுடியாது. சந்துரு இல்லாமல் என்னால் வாழமுடியாது. வேண்டாம் உமா. கதவைத்திறக்காதே. நான் போகமாட்டேன். நான் போகமாட்டேன்.''- என கத்தினாள்.

''நிலா நான்தாம்மா! கதவைத் திற. எல்லா பிராப்ளமும் சால்வ் ஆகிடுச்சு. அவங்களை விரட்டியாச்சு. பாரு நானும் அப்பாவும் அருணும் தான் வெளியில் நிற்கிறோம். கதவைத் திறம்மா.''- சந்துருவின் குரல் கேட்டதும் வேகமாக எழுந்து கதவைத்திறந்து சந்துருவை கட்டிக்கொண்டாள். ''நான் போகமாட்டேன் சந்துரு. நீங்கள் இல்லாமல் என்னால் வாழ முடியாது சந்துரு. என்னை அனுப்பி விடாதீர்கள். நான்போகமாட்டேன் சந்துரு.''- என கதறியவளை தன்னோடு அணைத்துக்கொண்டான். ''என்னடா இது? நான் எப்படி உன்னை அனுப்புவேன். நான் யாருக்காகவும் உன்னை விட்டுத்தரமாட்டேன். ஏன் அந்த ஆண்டவனே வந்து கேட்டாலும் தரமாட்டேன். நீ எனக்கே எனக்கு மட்டும் தான். நீ இல்லாமல் நான் மட்டும் வாழ்வேனா. அழாதேம்மா. அவர்கள் இனி இந்தப்பக்கமே வரமாட்டார்கள். உன் அத்தை உன்னை நானே திருமணம் செய்து கொள்ளட்டும் என்று சொல்லிவிட்டு போய்விட்டார்கள். நம்புடா. வேண்டுமானால் அப்பாவிடம் கேட்டுப்பார். அப்பா.. சொல்லுங்கப்பா.''- என சபாபதியைப் பார்த்தான் சந்துரு. வெண்ணிலா நிமிர்ந்தாள்.

''ஆமாடா கண்ணு. உன் அத்தை ஒன்றும் பெரிய வில்லி இல்லம்மா. சும்மாக் கொஞ்சம் மிரட்டியதும் அரண்டு ஓடிவிட்டா. அதுவும் அந்த பசங்க



வெறும் சொத்தைப்பசங்க அவனுங்களப்பார்த்தா இப்படிப் பயப்படுற. நாங்க இருக்கும்போது இப்படி பயப்படலாமா. உன்னை விட்டுடுவோமா. கண்ணைத் துடைம்மா. இந்த வீட்டு மாப்பிள்ளை வந்திருக்காரு பாரு. வாங்க எல்லோருமா சேர்ந்து சாப்பிடலாம். கமான். கமான். ரொம்ப பசிக்குது சரோ. டிபன் ரெடியா.''- என்றார் சபாபதி.

''இதோ ஒரே நிமிஷம் மாமா!''- அவசரமாய் முகத்தைத்துடைத்து விட்டு சமையலறைக்குள் நுழைந்தாள் வெண்ணிலா. மனைவியை அழைத்தார் சபாபதி. ''மணியம்மை வேலைக்கு வரவில்லை என்றால் வேறு ஒரு பெண்ணை வேலைக்கு அமர்த்து சரோ. பாவம் இந்தச் சின்னப்பெண். இதுவரை இவள் உழைத்து களைத்தது போதும். இனி இவளை வேலை செய்ய விடாதே.''- என்றார்.

''எங்க! இதை நீங்க சொல்லணுமா. மணியம்ம மக உண்டாயிருக்காளாம். மசக்கையா இருக்கிறதால கொஞ்சநாள் மகளோட இருந்துட்டு வர்றேன்னு சொல்லிவிட்டிருக்கா. அவளே இன்னொரு பெண்ணையும் ஏற்பாடு செய்து அனுப்புறாளாம். அநேகமா நாளைக்கு வந்துடுவான்னு நினைக்கிறேன். சரி வாங்க சாப்பிடலாம்.''- என்று அனைவரையும் அழைத்தாள்.

மற்றவர்கள் சொல்ல, ''இந்த வீட்ல எனக்கு என்ன மரியாதை இருக்கு. நான் ஒருத்தன் என்ன நடந்ததுன்னு எத்தினிவாட்டி கேட்கிறேன். யாராவது பதில் சொல்றீங்களா? நான் போறேன்.''- என்றவாறு கிளம்பிய அருணை காலரைப்பற்றி இழுத்தாள் உமா.

''இப்ப என்ன? உனக்கு நடந்ததுஎன்னன்னு தெரியணும். அவ்வளவு தானே. வாடா சொல்றேன். இதப்பாரு இந்த மாதிரி எல்லாம் பந்தா காட்டாதே. முதுகு தோலை உரிச்சு உப்பு தடவி காயப்போட்டுடுவேன் ஜாக்கிரதை. போனா போகுதுன்னு பார்த்தா ரொம்பத்தான் துள்ளுற. என்னடா கொழுப்பா? கொழுப்பா?''- காதைப்பிடித்து திருகினாள் உமா., ''வெண்ணிலா என்னைக் காப்பாற்று. யாராவது வாங்களேன்.''- என கத்திய அருணை கட்டிக்கொண்டாள் உமா.

14

**வானும் நிலவும் நீங்காமல்இருந்தால்**
**நானும் அவளும் நீங்காமல் இருப்போம்**
**சேர்ந்து இருப்போம் சேர்ந்து நடப்போம்.**
**காதல் வீதியிலே-நீ**
**சாட்சியடி வெண்ணிலவே!**

முழுநிலவு நாள். அழகிய பெரிய வெள்ளித்தட்டால் வானில் ஜொலித்தது நிலவு. இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் வெண்ணிலா. அருகே அமர்ந்திருந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் சந்துரு. இரவும் நிலவொளியும் கடற்கரையின் இதமான காற்றும் மெய்மறக்கச் செய்தன. ''ரொம்ப அழகுதான் இல்லங்க''- பார்வையை விலக்காமலேயே கேட்டாள் வெண்ணிலா.

''ம்..ம்.. ரொம்ப அழகுதான்''- என்றான் சந்துரு. ''எவ்வளவு அழகு தகதகன்னு ஜொலிக்குதே. பால் நிலான்னு சொன்னாலும் பொருந்தும். தங்க நிலான்னு சொன்னாலும் பொருந்தும். இறைவனோட அற்புதமான படைப்பு இல்லைங்க. பார்க்க பார்க்க சலிக்காத அழகு. பார்த்திட்டே இருக்கலாம். அத்தனை அழகு. அதிலயும் வலது கன்னத்தில் கடுகு போலஒரு மச்சம்

இருக்கே. இது இன்னும் அழகு. பார்த்து பார்த்து வடிவமைச்ச பிரம்மா கண்டிப்பா உன்னைப் பார்ப்பவர்களின் கண் திருஷ்டி பட்டுவிடும் என்று இந்த கறுப்பு பொட்டை வைத்திருப்பாரோ? அதுவும் எவ்வளவு தெளிவாய் கன்னத்தில் வைத்திருக்கிறார். சும்மா சொல்லக்கூடாது பிரம்மா ஈஸ்கிரேட்'' - இறங்கிய குரலில் சந்துரு சொல்லவும் திரும்பினாள் வெண்ணிலா.

''என்ன சொல்றீங்க. யாரைச் சொல்றீங்க. நிலாவுக்கு எது மச்சம்? குழப்பமாய் கேட்டாள். ''நீ எதைச் சொன்னாய் நிலா.'' - எனக்கேட்டான்.

''ம்! அதோ வானத்துல தெரியுதே அந்த நிலாவைப்பத்தி சொன்னேன்'' என்றாள் வெண்ணிலா. ''அப்படியா! நான் என்னோட நிலாவைப்பத்திச் சொன்னேன். பார்த்ததைத் தானே சொல்ல முடியும்.'' - என்றான் சந்துரு.

''அப்போ நீங்க இவ்வளவு நேரமா நிலாவை பார்க்கவே இல்லையா'' - கோபமாய்க் கேட்டாள். ''இல்லையே! இங்கு வந்து அமர்ந்ததில் இருந்து ஒரு நொடி கூட இமைக்காமல் நிலாவைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். உனக்கு வான்நிலாவைப் பிடித்திருக்கிறது. நீ பார்க்கிறாய். எனக்கு என் நிலாவைப் பிடித்திருக்கு நான் பார்க்கிறேன். உனக்கேன் கோபம் வருகிறது'' - என்றான்.

''அதற்காக! இப்படியா பொது இடத்தில் இப்படிப் பார்த்துக் கொண்டிருப்பது? யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள்?'' என்றாள் முகம் சிவக்க.

''என்ன நினைப்பார்கள்? கொஞ்சம் ரசனை உள்ளவர்கள் அடடா! நிலவொளியில் தன் மனைவியை என்னமாய் ரசிக்கிறான் இந்தக்கணவன் என்று நினைப்பார்கள். இன்னும் சிலர் அடடா! இந்தப் பெண்ணிற்கு இங்கிதமே தெரியவில்லையே, புதுப்புருஷன் பக்கத்தில் அழகாய் அம்சமாய் உட்கார்ந்திருக்கும் போது இந்தப்பெண் விவஸ்தை இல்லாமல் வானத்தில் தூரமாய் இருக்கும் சந்திரனை பார்க்கிறாளே என்று நினைப்பார்கள். இன்னும் சிலர்..'' - அவன் தொடர.

''போதும்! போதும்'' - என கைதூக்கி நிறுத்தச் சொன்னாள்

''ஆமா! நீங்கள் புதுப்புருஷன் என்று அவர்களுக்கு எப்படித்தெரியுமாம். வயதுப்பெண்ணை இப்படி பொதுஇடத்தில் ஜொள்விட்டுக்கொண்டிருக்கிறானே என்று யாரும் நினைக்க மாட்டாங்களோ?'' - என்றாள் கேலியாய். மறுப்பாய் தலையசைத்தான்.

''ம்ஹூம். சான்ஸே இல்லை. உன் கழுத்தில் மின்னுதே புத்தம் புது தாலி.. இது ஒன்று போதாதா. அதோடு உச்சிவகிட்டில் ஜொலிக்கும் குங்குமம். வெட்கப்பட்டுப்போகும் உன் அழகுமுகம். அதில் தெரியும் தேஜஸ் அது தான் கல்யாணக்களை என்பார்களே அது உன்னிடம் அதிகமாக தெரிகிறது நிலா..அதுவும் இந்த நிலவொளியில் நீ அற்புதமாய் இருக்கிறாய் தெரியுமா? - என்றான் ரசனையாய்

''என்ன சார் சம்பளம்'னு சொல்லி வெறும் கவரைத் தரீங்க...?''
''தூங்கின நேரம் போக வேலை செய்ததற்கான சம்பளம் தான் இது...!''
-தே.தனலட்சுமி, கோவை





வெட்கமாய் சிரித்தாள் வெண்ணிலா. ''வீட்டுக்கு போலாமாங்க. அத்தை சீக்கிரமா வந்திடணும்னு சொல்லித்தான் அனுப்புனாங்க.'' - அவள் சொல்லி முடிப்பதற்குள் எழுந்து நின்று அவள் எழ கை நீட்டினான்.

''யப்பா! இந்த வார்த்தை எப்போ உன்வாயில் இருந்து வரும்னு தவம் பண்ணிட்டு இருந்தேன். வா...வா. டயமாச்சு. அம்மா தேடுவார்கள்.'' - என்றான் அக்கறையாய்.

''ம்க்கும்.. ரொம்பத்தான் அக்கறை'' - என்றவாறே அவன் கரம் பற்றி எழுந்து அவனோடு தோளோடு உரசிக் கொண்டு நடந்த போது உலகையே வென்றது போல் மனம் கர்வம் கொண்டது. நம்பவும் முடியவில்லை. எல்லாம் நிஜம்தானா? நிஜம்தான் என்றது கழுத்தில் தொங்கிய தங்கத்தாலி. எடுத்துக்கண்களில் ஒற்றிக்கொண்டு புடவைக்குள் மறைத்துக்கொண்டாள். இதோ இதேபோல் ஓர் பௌர்ணமி நாளில் இதே கடற்கரையில் உயிரை மாய்த்துக் கொள்ள வென்று ஓடிவந்தது நினைவில் மோதியது. அன்று மட்டும் ஆள் நடமாட்டம் இல்லாத இடம் என்று இங்கு வராமல் போயிருந்தால் என் சந்துருவை காணாமலேயே பிரித்திருப்பேன். இவரது அன்பும் இந்த வாழ்வும் கிடைக்காமலேயே போயிருக்கும். அம்மாவின் மொத்த வாரிசும் வேரோடு அழிந்து போயிருக்கும். ஒருவேளை இவர் உருவில் வந்தது கூட தன் அன்னையின் ஆன்மாவாக இருக்குமோ.

''இருக்கலாம். இல்லையென்றால் கடற்கரைக்கு வராமல் இருப்பவர் அன்று வந்து அத்தனை நேரமாய் தனிமையில் அமர்ந்திருந்தாரே. உலகில் நடக்கும் ஒவ்வொரு காரியங்களுக்கும் அர்த்தம் இருக்கிறது தானே. இதைத்தான் ஆண்டவன் செயல் என்கிறார்களே. எதுவாக இருந்தாலும் சரி. இந்த உறவை அருமையான கணவரை எனக்குத் தந்த இறைவா. உனக்கு கோடி நன்றி. இந்த உலகில் காற்று இருக்கும் வரை பூமி சுழலும் வரை உலகம் இயங்கும் வரை நாங்கள் இணைந்தே வாழ வேண்டும். அவர் வாழும் வரை அவரது நிழலாக நான் இருக்க வேண்டும். என் உயிர் பிரியும் வரை என் இமையாக அவர் இருக்க வேண்டும். என்னை நொடிப்பொழுதும் பிரியாத வரம் வேண்டும். காலம் முழுக்க மனமொன்றிய தம்பதிகளாக வாழ வேண்டும். சந்திரனே நீ தான் சாட்சி. மனமார வேண்டியவாறே கணவனின் கைகளை இறுக பற்றிக் கொண்டாள் வெண்ணிலா. ''நிலா! வேண்டுமானால் இன்னும் கொஞ்ச நேரம் உட்காரலாமா'' - எனக்கேட்டான் சந்துரு. ''ஏங்க'' - என்றாள் புரியாமல்

''இல்லே, பேசாமல் வருகிறாயே அதுதான் கோபமோ என்று நினைத்தேன்.'' - என்றவனின் வாயை பொத்தினாள். ''கோபமா? எனக்கா? உங்கள் மீதா? சேச்சே! நான் பழைய நினைவிற்கு போய்விட்டேங்க. இதே மாதிரி தானே ஒரு முழுநிலவு நாளில் என் உயிரை மாய்த்துக் கொள்ளவென்று...'' - என்றவளை தன்விரலால் வாய் மூடினான் சந்துரு.

''வேண்டாம் நிலா. பழையன கழிதலும் புதியன புகுதலும். நம் திருமணம் நடந்தேறியிருக்கிறது. இனி நடப்பதை மட்டும் தான் நாம் நினைக்க வேண்டும் சரியா. இதோ பாரு. நீ இப்போ என் அன்பான மனைவி. எதற்கும் கண் கலங்கக்கூடாது. எப்போதும் சந்தோஷமாக வாழவைப்பேன் என்று அக்னி பகவான் முன் அமர்ந்து சத்திய பிரமாணம் எடுத்துள்ளேன். என்வாழ்வின் கடைசி மூச்சுவரை அந்த சத்தியத்தை நான் காப்பாற்றுவேன். உன் விழிகள் கலங்கிவிடாமல் இமையாக நானிருந்து காப்பேன். நான் இருக்கும் வரை நீ எதற்கும் கலங்கக்கூடாது.'' - என்ற கணவனை விழிகள் விரிய பார்த்தாள் வெண்ணிலா. தன் மனதில் எண்ணியதை அப்படியே சொல்கிறானே. இதுதான் மன


மொன்றிய மணவாழ்க்கையா.
"இப்படி கண்களை விரித்துப்பார்த்தால் என் மூடு மாறிவிடும். பிறகு நான்
கடற்கரை என்றும் பாராமல்..."- அவன் முடிக்கு முன் காதுகளைப் பொத்திக்
கொண்டாள். அவளது கைகளை விலக்கிவிட்டு, "முழுதாய்க் கேள். கடற்
கரை என்றும் பாராமல் சந்தோஷத்தில் குதித்துஒரு ஆட்டம் போட்டு விடு
வேன்."- என்றதும் தான் கண்களைத்திறந்தாள் வெண்ணிலா.

"போதும் உங்கள் பேச்சு. அமைதியாய் வாருங்கள்."- செல்லமாய் மிரட்
டிவிட்டு நடக்க ஆரம்பித்தவள் அப்படியே நின்றாள். உமாவும் அருணும்
கைகோர்த்துக் கொண்டு எதிரே வர, "அட! என்னடா இன்னிக்கு ஹனிமூன்
போறதா சொன்னியே. இங்க நிக்கிற. ஏன் கொடைக்கானல் என்னாச்சு?"-
என அவனை நெருங்கினான் சந்துரு.

"கொடைக்கானல் அப்படியே தான் இருக்கு. நாங்கதான் போகல."- என்
றான் உமா சலிப்பாய், "ஏன் உமா! கொடைக்கானல் போக பிடிக்கலயா
அப்போ வேற எங்காவது போய்வரலாமா, இந்த மாதிரி சான்ஸ் வேற எப்போ
கிடைக்குமோ."- என்றாள் வெண்ணிலா.

"அதையே தான் அண்ணி நானும் சொல்கிறேன். நமக்கு ஒரே நாளில்தான்
திருமணம் நடந்தது. நான் மட்டும் குளுகுளு பிளேஸ் போய் தேன்நிலவு
கொண்டாடணும். நீங்க மட்டும் இந்த பீச்சுலேயே கொண்டாடி முடிச்சிட
ணுமா. அதனால தான் நானும் போகல்ல. நீங்களும் வர்றதா இருந்தாச் சொல்
லுங்க. உடனே கிளம்பிவிடலாம். அங்கே இவரோட கெஸ்ட் ஹவுஸ் இருக்கு.
நாம அங்கேயே தங்கிக்கலாம். பகல்ல..புல்லா ஜாலியா வெளிய சுத்தி இவ
ளுங்க பர்ஸைக் காலி பண்ணிடலாம். என்ன சொல்றீங்க?"- எனக்கேட்டாள்
உமா..அவளை முறைத்தாள் வெண்ணிலா.

"நான் சொல்வது இருக்கட்டும். நீ இன்னும் உன் புருஷனை மரியாதை
இல்லாமல்தான் பேசுகிறாயா? உன் மாமனார் கேட்டால் என்ன நினைப்பார்
கள்? இனிமேல் இப்படிப் பேசினால் வாய்மேலேயே ஒன்று போடுவேன்."-
என்றான் அதட்டலாய். உமாவின் முகம் வாடிப்போய்விட, அருண் முன்வே
வந்தான். "இதோ பாரும்மா! அவ என் எஜமானி. என்னை எப்படி வேண்டு
மானாலும் அழைப்பாள். உனக்கு
பொறாமை என்றால் இதோ இவனை
யும் அப்படியே கூப்பிடு. அதற்காக நாய்
வாலை நிமிர்த்த முயற்சிக்காதே. தொட்
டில் பழக்கத்தை மாற்ற முடியுமா?-"
என்றதும் "டேய்! அப்ப நான் நாய்
வாலா. சப்போர்ட் பண்றமாதிரி
பேசிட்டு என்னை மட்டும் திட்டுறியா.
உன்னை விடமாட்டேன். ஓடாதே.
நில்லு. நில்லுடா. என ஹேன்ட்
பேக்கை தூக்கிக் கொண்டு அருணை
விரட்டிக் கொண்டு உமா ஓட. மச்சான்.
நாளைக் காலை ஒன்பது மணிக்கு விட்
டுக்கு வர்றேன். ரெண்டு பேரும்
ரெடியா இருங்க. நாம நாலு பேரும்
கொடைக்கானல் போறோம். "இப்ப



முகம் பார்க்கும் கண்ணா
டியை டிகாஷன் எடுத்த கழிவு
தேயிலையினால் துடைத்தால்
அழுக்கு நீங்கி கண்ணாடி பளபள
வென்று மின்னும்!
-எல்.மோகனசுந்தரி,
கிருஷ்ணகிரி



முதல்ல உன் தங்கையிடம்
இருந்து என்னை காப்பாற்றிக்
கொள்ள வேண்டும் வரட்
டுமா. பைடா. பை வெண்
ணிலா" என்றவாறு குரல்
கொடுத்துக் கொண்டே ஓடி
னான் அருண்.

"என்னிடம் மாட்டாமல்
போய்விடுவாயா. விடு
வேனா உன்னை என்றவாறு
உமாவும் அவன் பின்னே
ஓட, சரியான ஜோடி தான்.
அருண் அண்ணாவைத் தவிர
யாராலும் உமாவை சமாளிக்க
முடியாது என்றாள் வெண்
ணிலா சிரித்துக் கொண்டே.

புடலங்காயை
பொடியாக நறுக்கி
உப்பு, மஞ்சள் தூள்
போட்டுப் பிசைந்து
கொஞ்ச நேரம் வைத்தி
ருந்தால் அதிலுள்ள
நீரெல்லாம் வடிந்துவி
டும். பிறகு இதனை
சமைத்துக் சாப்பிட்டால்
ஜலதோஷம் பிடிக்காது!
-சி.விஜயாம்
பாள், கிருஷ்ணகிரி



"அது இருக்கட்டும். ஆனா அருண் கொடுத்த ஐடியா சூப்பரா இருக்கே.
நாமளும் அப்படியே பண்ணாமே. நீ ட்ரை பண்ணேன் நிலா" என்றான் சிரிய
லாக.

"ஐயோ. நான் கொடைக்கானல் வரலப்பா. கல்யாண அசதியில அத்தை
உடம்பு முடியாம இருக்கும் போது நமக்கென்ன ஹனிமூன் வேண்டிக்கிடக்கு.
வேணும்னா ஒன்னு பண்ணலாம் ஆபீஸ் பொறுப்பை ஓரம் கட்டிவிட்டு
மாமாவை நம்மோடு அழைத்துக் கொண்டு அத்தையோடு எல்லோரும்
சேர்ந்தே போகலாம். பேமிலி டூர் போன மாதிரியும் இருக்கும். தேன்நிலவு
கொண்டாடின மாதிரியும் இருக்கும். என்ன சொல்றீங்க? என்றாள் வெண்
ணிலா நடந்து கொண்டே.

"ம், வெரிகுட் ஐடியா. வீட்டுக்குப் போனதும் அம்மாகிட்ட சொல்லிவிட்டு
ஏற்பாடு பண்ணிடலாம். அது இருக்கட்டும். நான் சொன்னது பற்றி ஒன்றுமே
சொல்லவில்லையே. அருண் சொன்னது போல நீயும் சொன்னால் என்ன?"
என்றான் மீண்டும்.

"என்னாச்சு உங்களுக்கு? சொன்னதையே திரும்பவும் சொல்லி கொண்டி
ருக்கிறீர்கள். அதான் சொன்னேனே? என்றாள். ம்ப்ச்! அதில்ல நிலா. அருண்
சொன்னானே, நீயும் வேண்டுமானால் உமாவைப் போலவே என்னையும் கூப்
பிடு என்று. எங்கே டேய் சந்துரு என்று ஒருமுறை கூப்பிடு என சீண்டினான்.
பதறிப்போனாள் வெண்ணிலா. அம்மாடி கணவனைப் போய் டேய் என்பதா?
ம்ஹீம். என்னால் வர முடியாது மறுப்பாய் தலையசைத்தாள்.

"சும்மா கூப்பிடுடா. இங்கே நாம் மட்டும் தானே இருக்கிறோம். அதோடு
இப்படி கூப்பிடும் போது ரொம்ப அன்யோன்யமாக இருக்குமாம். அருண்
ரொம்பவும் ரசித்துச் சொல்வான். நீ என்னை கூப்பிடு. எனக்கு எப்படி இருக்
கிறதென்று பார்ப்போம். கூப்பிடேன்." விடாமல் கேட்டான்.

வேண்டாம்ப்பா இந்த விபரீத விளையாட்டு. பிறகு பேச்சுவாக்கில் மற்ற
வர் முன்பும் பேசிவிட்டால் அது அசிங்கமாய்ப் போய் விடும். நான் மாட்
டேன். உங்களை மரியாதை குறைவாய் பேச என்னால் முடியாது. உங்களை
நான் தெய்வமாய் நினைத்துக் கொண்டிருக்கிறேன். தயவு செய்து என்னை
வற்புறுத்தாதீர்கள் என்றாள் முடிவாய். நடந்து கொண்டிருந்த சந்துரு நின்றான்.



மைதா, கோதுமை மாவு, பச்சரிசி மாவு போன்றவற்றில் புழு, வண்டுகள் வராமல் இருக்க, ஒரு மெல்லிய துணியில் இரண்டு ஸ்பூன் தூள் உப்பினை கட்டி மாவில் போட்டு வைக்க வேண்டும்!

-சி. விஜயாம்பாள்,
கிருஷ்ணகிரி

நேசித்து மணந்தேனா. உனக்கு என் மீது விருப்பம் இல்லையா? ஏதோ என் மீதுள்ள மரியாதையால் நன்றி உணர்வால் தான் என்னை மணக்க சம்மதித்தாயா? என்னை உன் மனம் விரும்பி ஏற்றுக் கொள்ளவில்லையா?'' என்றான் மரத்த குரலில்.

''அய்யோ ஏன் இப்படிப் பேசுறீங்க. என் மனம் முழுக்க நீங்க தானே நிறைஞ்சு இருக்கிறீங்க. உங்களுக்கு ஏன் இந்த சந்தேகம். அன்று நிலவொளியில் என் கைப்பற்றி மோதிரம் போட்டீர்களே, அன்றே உங்களை என் கணவனாக ஏற்றுக் கொண்டுதான் உங்கள் பின்னே வந்தேன். அதன்பிறகும், ஒவ்வொரு நொடியும் உங்கள் நினைவோடு தானே வாழ்ந்தேன். அதனால் தானே நீங்கள் அணிவித்த மோதிரத்தை கழற்றாமல் இருந்தேன். உங்கள் மீது விருப்பம் இல்லாமலா அன்று என் அத்தை வந்த அன்று நீங்கள் இல்லாமல் வாழ முடியாது. உங்களை விட்டு போக மாட்டேன் என்று உங்கள் மார்பில் விழுந்து கதறினேன். என்னை எப்படி சந்துரு நீங்கள் சந்தேகம் கொள்ளலாம். என் அன்பை எப்படி உணராமல் போனீர்கள்?'' படபடத்தாள் வெண்ணிலா. அசையாமல் நின்றான் சந்துரு.

''நான் சொல்வதில் நம்பிக்கை இல்லையா சந்துரு. ஏன் இப்படி நிற்கிறீர்கள். வேண்டாம் சந்துரு. என்னிடம் பேசி விடுங்கள். எதை வேண்டுமானாலும் தாங்கிக் கொள்ளுவேன். ஆனால் உங்கள் மௌனத்தை மட்டும் என்னால் தாங்கிக்க முடியாது சந்துரு. ப்ளீஸ் சந்துரு பேசுங்கள் சந்துரு.'' அவனைப் பற்றி அசைத்தாள். அப்படியும் அசையாமல் நின்றிருந்தான்.

''டேய் நான் இத்தனை சொல்லியும் இப்படி அசையாமல் நிற்கிறாயே. பேசுடா. ஏதாவது பேசு. நான் என்ன செய்தால் நீ நம்புவாய்? உன்னை எனக்கு ரொம்ப பிடிக்கும்டா. நீயில்லாம எனக்கு எதுவுமே இல்லடா. என்னை நம்புடா.'' வெண்ணிலா பேசிக் கொண்டிருக்க, வாய்விட்டுச் சிரித்தான் சந்துரு.

''வந்தாயே வழிக்கு. நான் உன்னிடம் ஒரு டேய் தான் போடச் சொன்னேன். நீ எத்தனை டேய் போட்டாய் பார்த்தாயா. போட வைத்தேன் பார்த்தாயா? எப்புடி?'' என சந்துரு கேட்க வெண்ணிலா உண்மையான கோபத்துடன், ''போடா கொஞ்ச நேரத்தில் எப்படி பயந்துட்டேன் தெரியுமா போடா'' என்றவாறு முன்னே நடக்க சந்துரு பின்னேயே ஓடி அவளைக் கொஞ்சிக் குலாவி தாஜா பண்ண அவர்களது அன்யோன்யத்தைக் கண்ட வான் நிலா வெட்கப்பட்டுக் கொண்டு மேகத்திற்குள் தன்னை மறைத்துக் கொண்டது.

**முற்றும்**